தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[பேரவைத் தலைவர்] [*1993 நவம்பர் 9*

வரவேற்கப்படும் சான்றோராய்த் திகழ்ந்தவர் ஆவார். அவரது இழப்பு தமிழ் உலகத்திற்கும், ஆன்மீக உலகத்திற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவர் சென்ற 70 ஆண்டுக்காலமாகத் தன்னலம் கருதாமல் பொதுத் தொண்டாற்றி, பெரும் புகழ் கொண்ட பெருமான் ஆவார். அவர் மதிப்புறு டாக்டர், கலைமாமணி, இசைப் பேரறிஞர், தமிழ்க்கொண்டல் போன்ற பட்டங்கள் பல அளிக்கப்பெற்றுப் பாராட்டப் பட்டவர் ஆவார். அவர் ஆற்றிய அரும்பெரும் தொண்டுகளுக்கு தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. அன்னார் மறைவு குறித்து இச்சட்டமன்றப் பேரவை ஆழ்ந்த கவலையையும், மிகுந்த வருத்தத்தையும் கொள்வதோடு, அன்னாரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும், தமிழன்பர்களுக்கும் தன் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது.'

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் இயற்கை எய்திய பெரியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று 2 மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று 2 மணித்துளிகள் அமைதி காத்தனர்)

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்)

2. அரசினர் தனித் தீர்மானங்கள்

(அ) தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் போராடிப் பெற்றுத் தந்த பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்கான உரிமை, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களால் 50 சதவீதம் என உயர்த்தப்பட்டு, தற்போது தமிழகத்தில் மொத்த ஒதுக்கீடு 69 சதவீதம் என்றுள்ள தனிச் சிறப்புக்கு பங்கம் நேர்ந்துள்ள சோதனையிலிருந்து மீள்வதற்காக, 4-11-1993 அன்று தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவினையொட்டி, விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று, சட்டமன்றப் பேரவையின் இந்தச் சிறப்புக் கூட்டத்தை இன்று கூட்டியுள்ள தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] *[டாக்டர் ஜெ. ஜெயலலிதா]*

முற்பகல் 10.05

குறுகிய கால அழைப்பாக இருத்தும்கூட அதனை ஏற்று இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைகள் வழங்கிட வருகை தந்துள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் பேரவைத் தலைவர் வாயிலாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் ஒரு இக்கட்டான, அதே நேரத்தில் சோதனை மிகுந்த கட்டத்தில் இன்றைக்கு இங்கே கூடியிருக்கிறோம். பிற்படுத்தப்பட்ட பெரும்பான்மை தமிழ்நாட்டு மக்களின் சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டிற்காக வகுத்து செயல்படுத்தப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு பின்னடைவு ஏற்படுத்தப்பட்டு ஓர் நெருக்கடியும், சோதனையும் உருவாக்கப்பட்டு உள்ளது. இந்தச் சோதனையிலிருந்து தமிழ்நாட்டின் கோடானு கோடி பிற்படுத்தப்பட்ட மக்களை மீட்பதற்கான வழி வகைகளை ஆராய்ந்து, தக்க முடிவுகளை மேற்கொள்ள வேண்டிய கட்டத்திலும், கட்டாயத்திலும் நாம் இன்றைக்கு இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்டோருக்கு எனவும், 1 சதவீதம் பழங்குடியினருக்கு எனவும், 30 சதவீதம் பிற்படுத்தப்பட்டோருக்கு எனவும், 20 சதவீதம் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு எனவும், 31 சதவீதம் பொதுத் தொகுப்பிற்கு எனவும் அரசுப் பணிகளிலும், கல்வி நிலையங்களிலும், இட ஒதுக்கீடு நடைமுறையில் இருந்து வருகின்றது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இட ஒதுக்கீட்டுக் கொள்கையை அறிமுகம் செய்து செயல்படுத்துவதில் இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இட ஒதுக்கீட்டில் மாத்திரமீ அல்லாமல் பிற்படுத்தப்பட்டோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக பல்வேறு வகையான நலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவதிலும் தமிழகம் முன்னணியில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டை பொறுத்தவரை இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கென்று ஒரு நீண்ட நெடிய வரலாறே உண்டு. இந்த வரலாறு 100 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே தொடங்குவது ஆகும். 1854 ஆம் ஆண்டு வெள்ளையர் ஆதிக்கத்தின் ஆட்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அன்றைக்கு இருந்த வருவாய் வாரியம் அதாவது, Board of Revenue மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையிலிருந்து இந்த வரலாறு தொடங்குகிறது. 1920 ஆம் ஆண்டு நீதிக் கட்சி தேர்தல்களில் வெற்றியைப் பெற்றவுடன் இட ஒதுக்கீட்டுக் கொள்கை புதிய பரிமாணத்தைப் பெற்றது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்ற லட்சியம் முக்கியத்துவத்தையும், முன்னுரிமையையும் அன்றைக்குப் பெற்றது. அதுவரை வருவாய்த் துறையில் மாத்திரம் நிலவி வந்த இட ஒதுக்கீடு அரசின் எல்லாத்

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1993 நவம்பர் 9

துறைகளுக்கும், துறைகளின் எல்லா நிலைகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டது. அரசுப் பணிகளில் சேர்க்கப்படுவோர் 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் பணிகளில் அமர்த்தப்படுவோரின் எண்ணிக்கை பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் வகையில் 1921 ஆம் ஆண்டு ஆணை வெளியிடப்பட்டது. இந்த ஆணை தான் முதல் கம்யூனல் ஜி. ஓ. அதாவது first communal Government Order என்று எல்லோராலும் அழைக்கப்படும் பிற்படுத்தப்பட்டோரின் முதல் உரிமை சாசனம் ஆகும். இந்த வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் அரசுப் பணிகளில் நுழைவதற்கு மாத்திரமே என்று இருந்ததை பணி உயர்வுக்கும் பொருந்தும்படியாக அமைக்கப்பட்டதுதான் இரண்டாவது கம்யூனல் ஜி. ஓ. என்பது ஆகும். பின்னர் 1927 நவம்பர் 4 ஆம் தேதி அன்று அந்தந்த இனங்களின் மக்கள் தொகை அடிப்படையில் அரசுப் பணிகள் வழங்கப்பட வேண்டும் என்று எல்லாத் தரப்பிலிருந்தும் எழுப்பப்பட்ட கோரிக்கையை ஏற்று 12 அரசுப் பணியிடங்கள் காலி என்றால் அவற்றுள் 5 பணியிடங்கள் பிராமணர் அல்லாதாருக்கும், 2 இடங்கள் பிராமணருக்கும், 2 இடங்கள் ஆங்கிலோ-இந்தியர் மற்றும் கிருத்துவருக்கும், 2 இடங்கள் முகமதியருக்கும், ஒரு இடம் நலிவடைந்த வகுப்பினருக்கும் என்று இட ஒதுக்கீட்டு முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த இட ஒதுக்கீட்டு முறை 1947 ஆம் ஆண்டு வரை நீடித்தது. 1934 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட சென்னை ராஜதானி பிற்படுத்தப்பட்டோர் லீக் –Madras Provincial Backward Classes League– என்ற அமைப்பு பிற்படுத்தப்பட்டோருக்கு என்று தனி ஒதுக்கீடு வேண்டும் என்று தொடர்ந்து கோரி வந்தது. அந்த கோரிக்கையையும் ஏற்று ஏற்கெனவே இருந்து வந்த இட ஒதுக்கீட்டுப் பட்டியலில் பிற்படுத்தப்பட்ட இந்துக்கள் –Backward Hindus–என்ற பிரிவும் சேர்க்கப்பட்டு இட ஒதுக்கீட்டு முறை 1947-இல் மாற்றியமைக்கப்பட்டது.

முற்பகல் 10.10

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டில் அமைந்த முதல் காங்கிரஸ் அரசு அதற்கு முன்னரே அமலில் இருந்துவந்த வகுப்புவாரி இடஒதுக்கீட்டு முறையைத் தொடர்ந்து செயல்படுத்தி வந்தது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். 1951 ஆம் ஆண்டு பிற்படுத்தப் பட்டோர் இயக்கம் ஒரு திருப்பு முனையைச் சந்திக்க வேண்டியதாயிற்று. இந்திய அரசியல் சட்டம் அமலுக்கு வந்தவுடன் கம்யூனல் ஜி. ஓ. நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிராக சிலர் நீதிமன்றங்களுக்குச் சென்றனர். கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை,Champakam Durairajan-vs-State of Madras என்ற வழக்கில் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அதைப்போலவே, அரசுப் பணிகளில் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை Venkataramana-vs-State of Madras என்ற வழக்கின் மூலம் உச்ச

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

நீதி மன்றத்திற்குச் சென்றது. இந்த இரண்டு வழக்குகளையும் பரிசீலித்த உச்ச நீதிமன்றம் கம்யூனல் ஜிஒ. நாடு சுதந்திரம் அடைந்ததின் உருவாக்கப்பட்ட அரசியல் சட்டத்தின்படி செல்லத்தக்கதல்ல எனத் தீர்ப்பு அளித்தது. பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில் பேரிடி விழுந்தது கண்டு கிளர்ந்து எழுந்தார் தந்தை பெரியார். அன்று, பிற்படுத்தப்பட்டோர் நலம் நாடிய அனைவரும் தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் தலைமையில் ஓரணியில் திரண்டனர். பெருந்தலைவர் காமராஜரும் அன்றைய தினம் பிற்படுத்தப்பட்டோர் நலம் நாடியே இந்த உணர்வினை தக்கவகையில் வெளிப்படுத்தினார். தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுவிடும் என்ற தமிழக மக்களின் உறுதியான உணர்வுகள் அன்றைய மாநில அரசை மட்டும் அல்லாது மத்திய அரசையும் சிந்திக்கச் செய்தன. தமிழ்நாட்டின் உணர்வுகளுக்கு செவி சாய்த்த அன்றைய பாரதப் பிரதமர் பண்டித நேரு அவர்கள் இந்திய அரசியல் சட்டத்தில் 15, உட்பிரிவு 4 என்ற புதிய பிரிவைச் சேர்த்து அரசியல் சட்டத்தில் முதல் திருத்தத்திற்கு வழிவகை செய்து, தமிழ்நாட்டில் அப்போது எழுந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்கு முடிவு கண்டார்.

அரசியல் சாசனத்தில் 15-ஆவது பிரிவில், 15, உட்பிரிவு 4 என்னும் புதிய உட்பிரிவு ஒன்று, "``Nothing in this article or in clause (2) of article 29 shall prevent the State from making any special provision for the advancement of any socially and educationally backward classes of citizens or for the Scheduled Castes and the Scheduled Tribes." எனச் சேர்க்கப்பட்டது. 15, உட்பிரிவு 4 என்ற இப்புதிய உட்பிரிவு அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்டவுடன் தமிழகத்தில் இட ஒதுக்கீடு திருத்தி அமைக்கப்பட்டது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 15 சதவீதம் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவீதம் என்றும், பொதுத் தொகுப்பிற்கு 60 சதவீதம் என்றும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வாறு அரசியல் சாசனத்தின்படி இட ஒதுக்கீடு பெற்றுத் தந்தது திராவிட இயக்கத்தின் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி என்பதை எவரும் மறுத்ததில்லை என்பதை அனைவரும் அறிவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநிலங்களின் சீரமைப்பிற்குப் பின்னர், 1954 ஆம் ஆண்டு இட ஒதுக்கீட்டில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டு மாறுதல் செய்யப்பட்டது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 16 சதவீதம் என்று உயர்த்தியும், பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவீதம் என்றும், பொதுத் தொகுப்பிற்கு 59 சதவீதம் என்று குறைத்தும் இடஒதுக்கீடு மாற்றப்பட்டது. 1969 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சட்டநாதன் கமிஷன், அதனுடைய அறிக்கையை 1970 ஆம் ஆண்டு அரசுக்கு அளித்தது. சட்டநாதன் கமிஷன் அளித்த பரிந்துரைகளில் ஒன்று

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1993 நவம்பர் 9

ஏற்கப்பட்டு, இட ஒதுக்கீடு 7-6-1971 ஆம் நாளன்று திருத்தி அமைக்கப்பட்டது. அதன்படி, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவீதம் என்று உயர்த்தியும், பிற்படுத்தப்பட்டோருக்கு 31 சதவீதம் என்று உயர்த்தியும், பொதுத் தொகுப்பிற்கு 51 சதவீதம் என்று குறைத்தும் இட ஒதுக்கீட்டு முறை அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

முற்பகல் 10.15

இந்தக் கட்டத்தில், Kerala -vs- N.M. Thomas என்ற உச்ச நீதிமன்றத்தின் புகழ் பெற்ற வழக்கு ஒன்றில் ஜஸ்டிஸ் திரு. ஃபஸில் அலி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அம்சம் ஒன்றை இந்த அவையின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன். .. ``The decided cases of this Court have no doubt laid down that the percentage of reservation should not exceed 50 per cent. As I read the authorities– this is however a rule of caution and does not exhaust all categories. Suppose for instance a State has a large number of Backward Classes of citizens which constitute 80 per cent of the population and the Govemment in order to give them proper representation reserves 80 per cent of the jobs for them, can it be said that the percentage of reservation is bad, and violates the permissible limits of Clause 4 of Articles 16 ? The answer must necessarily be in the negative. The dominant object of this provision is to take steps to make inadequate representation adequate."

நீதிபதி திரு. ஃபஸில் அலி அவர்கள் குறிப்பிட்டுள்ளது, சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனைக் கருதி அரசு மேற்கொள்ளும் கொள்கைகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எந்தவிதத்திலும் முரணாகாது என்பதையே வலியுறுத்துகிறது.

எனவே, தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டுக் கொள்கை எந்த வகையிலும், எதற்கும் புறம்பானதாக ஆகாது என்பது தெளிவாகிறது.

நீதிபதி திரு. ஃபஸில் அலி அவர்கள் அளித்த இத் தீர்ப்பின் அடிப்படையில் சிந்தித்த வேளையில்தான், முதலமைச்சராக இருந்த இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அதுவரை பிற்படுத்தப்பட்டோருக்கு 31 சதவீதம் என்று இருந்த இட ஒதுக்கீட்டை 50 சதவீதம் என உயர்த்தினார். மொத்த ஒதுக்கீடு அன்று 68 சதவீதம் என்ற அளவுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இத் தீர்ப்பின் அடிப்படையில் வேறு சில மாநிலங்களும்கூட தங்களது மாநிலத்தில் இட ஒதுக்கீட்டு அளவை 50 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்த்திக் கொண்டன.

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

1990 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பின் அடிப்படையில், பழங்குடியினருக்கு என்று ஒரு சதவீதம் தனியாக இட ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டு, பொதுத் தொகுப்பில் அதுவரை இருந்து வந்த 32 சதவீத இட ஒதுக்கீடு 31 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

இவ்வாறு தமிழ்நாட்டில் நிலவி வரும் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் பரிணாம வளர்ச்சியைப் பரிசீலனை செய்யும்போது, இட ஒதுக்கீட்டின் அளவு பெரும்பான்மையாக வாழும் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் தேவைக்கேற்ப ஒவ்வொரு கட்டத்திலும் மேல்நோக்கி வளர்ந்துள்ளதேயன்றி எந்த நிலையிலும் ஒதுக்கீட்டு அளவு இதுவரை குறைக்கப்படவில்லை என்ற வரலாற்று உண்மை புலனாகும்.

மத்திய அரசுத் துறைகளிலும், நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டுக்கென பரிந்துரைத்த மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஏற்று 27 சதவீதம் ஒதுக்கீடு செய்வதாக முந்தைய மத்திய அரசு 13-8-1990 அன்று ஆணை வெளியிட்டதையும், தற்போதைய மத்திய அரசு 25-9-1991 அன்று பொருளாதார ரீதியில் பின் தங்கியவர்களுக்கு 10 சதவீத ஒதுக்கீடு என்ற அம்சத்தை இணைத்து வெளியிட்டதையும் அப்படியே நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை அனைவரும் அறிவீர்கள்.

நம் தமிழகத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின் ஒட்டு மொத்த உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் 30-9-1991 அன்று இதே சட்டப்பேரவையில் மண்டல் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில் 27 சதவீதம் என்பதற்குப் பதிலாக 50 சதவீதம் என்று இட ஒதுக்கீடு செய்வதைக் கொள்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் மத்திய அரசுத் துறைகள், மத்திய அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் வேலைவாய்ப்புகளில் மட்டுமின்றி அனைத்துக் கல்வி நிலையங்களின் அனுமதியிலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவீதம் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும் இந்தச் சட்டப் பேரவை மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்ற தீர்மானம் என்னால் முன்மொழியப்பெற்று, எல்லா அரசியல் கட்சிகளையும் சார்ந்த உறுப்பினர்களின் பேராதரவோடு ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது என்பதனை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள் . அந்தத் தீர்மானத்தை இந்தியப் பிரதமர் மாண்புமிகு திரு. நரசிம்மராவ் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அத்தோடு வேண்டுகோளும் விடுத்திருந்தேன்.

முற்பகல் 10.20

மண்டல் குழு பரிந்துரைகள் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்குகளில், 16-11-1992 அன்று உச்ச நீதிமன்றத்தின் 9 நீதிபதிகள் அடங்கிய 'அரசியல் சட்ட பெஞ்ச்' (Nine Judges' Constitutional Bench) தனது

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [*1993 நவம்பர் 9*

தீர்ப்பினை வழங்கியது. அந்தத் தீர்ப்பில், தீர்ப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து 4 மாத காலத்திற்குள்ளாக, பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல், நீக்குதல் ஆகியவற்றைப் பரிசீலனை செய்ய நிரந்தரக் கமிஷன் (PERMANENT COMMISSION) ஒன்றை அமைக்க வேண்டும்; 6 மாத காலத்திற்குள்ளாக, பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து, முன்னேறிய பகுதியினரை—CREAMY LAYER-ஐ நீக்க வேண்டும்; மொத்த இட ஒதுக்கீடுகள் 50 சதவிகித உச்சவரம்பை மீறாதவகையில் அமைத்துக்கொள்ள வேண்டும் என்பவை மிக முக்கியமான அம்சங்களாகும். இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிலுள்ள அம்சங்கள் எல்லாம் விரிவாகவும், ஆழமாகவும் 7-1-1993 அன்று நடைபெற்ற தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டன. பரிசீலனைக்குப் பின்னர், ஒதுக்கீட்டிற்கு 50 சதவிகித உச்சவரம்பு விதித்துள்ள ஆணைக்கு எதிராகவும், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து முன்னேறிய பகுதியினரை நீக்க வேண்டுமென்ற ஆணைக்கு எதிராகவும், உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் 'மறு ஆய்வு மனு' (REVIEW PETITION) தாக்கல் செய்வது என்று அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், உச்ச நீதிமன்றத்தின் ஆணையையொட்டி, 'நிரந்தரக் கமிஷன்' ஒன்றை அமைத்திடவும் அரசு முடிவு செய்தது. அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளுக்கேற்ப, 'தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் கமிஷன்' ஒன்று 15-3-1993 அன்று 'அமைக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களாகிய நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அதற்கான அறிவிப்பு, இந்த மாமன்றத்தில்தான் செய்யப்பட்டது. இந்திய உச்ச நீதிமன்றத்தில் 'மறு ஆய்வு மனு' 22-3-1993 அன்று தாக்கல் செய்யப்பட்டது. அத்தோடு 'தெளிவாக்க மனு' (Clarificatory Petition) ஒன்றும் 23-4-1993 அன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. 'மறு ஆய்வு மனு ' உச்ச நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகச் சொல்லப்பட்டாலும், இதுவரை நமது அரசிற்கு உச்ச நீதிமன்றத்திலிருந்து இதுபற்றி எந்தவிதத் தகவலும் வரவில்லை.

மண்டல் கமிஷன் வழக்குகளில், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு என அமைக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு உச்ச நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு வரவில்லை என்பதும், இந்திய அரசியல் சட்டத்தில் இட ஒதுக்கீட்டிற்கு உச்சவரம்பு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்பதும், வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு என்ற பிரச்சினைதான் உச்ச நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு வந்ததேயல்லாமல், கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை பரிசீலனைக்கு வரவில்லை என்பதும், 'மறு ஆய்வு மனு'வில் தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தின் கவனத்திற்குப் பணிந்து வைத்துள்ள வாதங்களாகும். கல்வி நிறுவனங்களில் அனுமதி கொடுக்கும் பிரச்சினையை, சென்னையைச் சேர்ந்த ஓரமைப்பு உயர் நீதிமன்றத்தில் எழுப்பியபோது, சென்னை உயர்

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

நீதிமன்றம், 26-7-1993 அன்று வெளியிட்ட தீர்ப்பில், இட ஒதுக்கீட்டு அளவை 50 சதவிகிதத்திற்குக் குறைத்திட உச்ச நீதிமன்றம் காலக்கெடு நிர்ணயம் செய்யவில்லை; எனவே, இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரை, நடப்பாண்டில் தமிழ்நாடு அரசு ஏற்கெனவே பின்பற்றி வந்துள்ள கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றலாம்; 1994--95 ஆம் ஆண்டிலிருந்து இட ஒதுக்கீட்டு அளவை 50 சதவிகிதமாகக் குறைத்து அமலாக்கம் செய்ய வேண்டுமென்று தெளிவாக்கியது. உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பையொட்டி, தமிழ்நாட்டிலுள்ள மருத்துவக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் அனுமதி தொடர்பான ஏற்பாடுகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டன. சென்னை உயர் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக, சென்னையைச் சேர்ந்த ஓரமைப்பு உச்ச நீதிமன்றத்தில், 'தனி அனுமதி மனு' (Special Leave Petition) ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. தமிழ்நாடு அரசும் இப்போதுள்ள இட ஒதுக்கீட்டு முறை, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குள்ள நிலைமையைக் கருதி, என்றென்றைக்கும் தொடர வேண்டுமென்கிற அடிப்படையில் உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் 'தனி அனுமதி மனு' ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. நமது அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வாதாடி, நமது நிலையை உறுதி செய்ய, புகழ்பெற்ற வழக்கறிஞர்களான திரு. கபில் சிபால் அவர்களும், திரு. சோலி சோரப்ஜி அவர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

முற்பகல் 10.25

சென்னையைச் சார்ந்த நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள தனி அனுமதி மனுவின்மீது இடைக்கால உத்தரவாக உச்ச நீதிமன்றம், கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கின்றபொழுது இடஒதுக்கீடு ஐம்பது சதவீதத்திற்குள்தான் அமைய வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளது. சென்னையைச் சார்ந்த அந்த அமைப்பு, உச்ச நீதிமன்ற இடைக்கால உத்தரவுக்குப் புறம்பாக தமிழ்நாட்டில் தொழில் கல்லூரிகளில் ஏற்கெனவே பின்பற்றப்பட்டு வந்த 69 சதவீத இடஒதுக்கீடு அடிப்படையில் மாணவர்கள் அனுமதிக்கப்படுவதாக நீதிமன்ற அவமதிப்பு மனு (CONTEMPT PETITION) ஒன்றைத் தாக்கல் செய்து, அதுவும் உச்ச நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளது. எப்படி அன்று சுயமரியாதை இயக்க காலந்தொட்டு திராவிட இயக்கம் பெற்றுத் தந்த கம்பூனல் ஜி. ஓ-க்கு எதிராக உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்ததோ அதுபோன்றே பிற்படுத்தப்பட்டோரின் நன்மைக்கென இந்த அரசு கடைபிடித்து வரும் கொள்கைக்கு எதிராக ஒரு முட்டுக்கட்டை உருவாகியுள்ளது என்பதை மிகுந்த கவலையோடும் வருத்தத்தோடும் இந்த அவையில் குறிப்பிட விரும்புகிறேன்.

நீதிமன்றங்கள் வழங்குகிற தீர்ப்புகளைப் புறக்கணிப்பதோ, அவமதிப்புக்கு உள்ளாக்குவதோ இந்த அரசின் நோக்கமல்ல. நாட்டில் உள்ள எல்லா

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1993 நவம்பர் 9

நீதிமன்றங்களின்மீதும், மாண்புமிகு நீதிபதிகளின்பாலும் இந்த அரசு எந்தச் சூழ்நிலையிலும் மிகுந்த மரியாதையையும், கௌரவமான போக்கையும் கடைபிடித்து வருகிறது. தொடர்ந்து கடைபிடித்து வரும் என்பதையும் மிகத்தெளிவாக அறுதியிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். அதேநேரத்தில் இன்றைக்குத் தமிழ்நாட்டில் மிகப் பெரும்பான்மையாக வாழும் பிற்படுத்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்கு ஏற்பட்டுள்ள சோதனை, பின்னடைவு இவைகளிலிருந்து அவர்களை மீட்க என்னதான் வழி ? 69 சதவீத இடஒதுக்கீடு இனி என்றென்றும் தொடர்ந்திட இந்திய அரசியல் சட்டத்தில் உரிய திருத்தத்தைக் கொண்டுவருவதைத் தவிர மாற்று வழி எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்த மாதிரியான சூழ்நிலைகளில் கடந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளையும், அவைகளைத் தவிர்த்திட, தடைக் கற்களை அகற்றிட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் இந்தப் பேரவை நினைவுகூற வேண்டுமென்று நான் மிகுந்த கனிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காலப்போக்கில் மக்களின் அபிலாஷைகளுக்கும், மனமாற்றங்களுக்கும் ஏற்ப, சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை மாத்திரம் அல்லாமல் தடுத்து நிறுத்த முடியாதவையும் கூட என்பதை இந்த மாமன்றத்தில் கோடிட்டுக் காட்ட நான் விரும்புகின்றேன். அவற்றைத் தொடர்ந்து இந்திய அரசியல் சட்டத்திலோ அல்லது மற்ற சட்டங்களிலோ அல்லது அரசின் கொள்கைகளிலோ தகுந்த மாற்றங்களைச் செய்வது அரசியல் விவேகம் ஆகும். காலத்தின் அவசியமுமாகும். நான் முன்பே எடுத்துக் காட்டியதைப்போல கம்யூனல் ஜி. ஓ. சட்டத்திற்குப் புறம்பானது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தபோது அன்றைய பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் தமிழ் மக்களின் உணர்வுகளுக்குச் செவி சாய்த்து முதன் முதலாக இந்திய அரசியல் சட்டத்தை திருத்துவதற்கே வழிவகை செய்தார். இந்திய அரசியல் சட்டத்தில் ஏற்பட்ட முதல் திருத்தத்திற்குக் காரணமே, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனைப் பாதுகாக்க எடுத்த நடவடிக்கைதான் என்பது வரலாற்று உண்மையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

மன்னர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தை ஒழித்திட அன்னை இந்திரா அவர்கள் முயற்சித்தாரே, அது புரட்சிகரமான திட்டம் அல்லவா ? அதனால் ஏற்பட்ட பிரச்சினைகள் எவ்வளவு ? சளைத்தாரா இந்திரா காந்தி அவர்கள், இல்லை. 11 வங்கிகளை நாட்டுடைமையாக்க அன்னை இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் முனைந்தாரே, அது மிகப் பெரிய சோஷலிஸ நடவடிக்கை அல்லவா ? அதற்கு ஏற்பட்ட எதிர்ப்புகள் எத்தனை? இவைகளையெல்லாம் கண்டு இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் கவலை கொண்டாரா ? இல்லை. சாதனை சரித்திரம் படைத்தார்.

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

எப்படி? தடைகளை எல்லாம் அகற்ற, 1971 ஆம் ஆண்டில் இந்திய அரசியல் சட்டத்தில் 25-வது மற்றும் 26-வது திருத்தங்களை ஏற்படுத்தி வெற்றி கண்டார். 1973 ஆம் ஆண்டில் ஆந்திர மாநிலத்தில் உள்ள தெலுங்கானா மக்கள் தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபட்டார்களே, அப்போது இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் என்ன செய்தார்? தெலுங்கானா மக்களின் சமூகப் பிரச்சினைகளையும், கோரிக்கைகளையும் முழுமையாகப் புரிந்துகொண்ட அவர், தெலுங்கானா மக்கள் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் அரசியல் சட்டத்தில் 32-வது திருத்தத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றப் பாடுபட்டார் என்பதை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

முற்பகல் 10.30

தமிழ்நாட்டில் பன்னெடுங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு சமீபகாலமாக ஏற்பட்டுள்ள சோதனைகள் அன்னை இந்திரா அவர்களின் சாதனைகளை நினைவுக்குக் கொண்டு வந்துவிட்டன என்பதை இந்தப் பேரவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நமது உணர்வுகளை நாம் மறைக்கத் தேவையில்லை. அப்படி ஒரு சூழ்நிலை தமிழ்நாட்டில் இன்றைக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை மட்டும் சூசகமாகத் தெரிவிப்பது எனது கடமையெனக் கருதுகிறேன். இட ஒதுக்கீட்டின் அளவுகோல்களும், வரையறைகளும் சம்பந்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் அமைய வேண்டுமேயொழிய அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கும், தேவைகளுக்கும் முரணாக இருக்கக் கூடாது. இந்திய நாடு ஒரு மிகப் பெரிய நாடு. பல இனங்கள், பல சமயங்கள், பல மொழிகள் ஆகியவைகளை தன்னகத்தே கொண்ட நாடு. பலதரப்பட்ட மக்களின் சமுதாயப் பிரச்சினைகள் காலப்போக்கில் முழுமையாகத் தீர்க்கப்பட வேண்டுமென்றால், அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களைக் கருத்திற்கொண்டு, அரசியல் ரீதியாகவும், சட்டங்களின் அடிப்படையிலும், தேவையான மாற்றங்களைக் கொண்டுவந்து அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலமாகத்தான் இந்தப் பரந்த நாட்டில் மக்களிடையே அமைதியையும், மனநிறைவையும் உருவாக்க முடியும். இடஒதுக்கீடு முழுக்க முழுக்க ஒரு சமுதாயப் பிரச்சினையாகும். இந்தச் சமுதாயப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது மாநில அரசுகளின் கடமை என்பது மட்டுமல்ல, மத்திய அரசுக்கும் சமபங்கு உண்டு. அதற்கு உறுதுணையான சட்டத் திருத்தங்களைச் செய்திட மாநில அரசுகளுக்கு மத்திய அரசு துணை இருக்க வேண்டும் என்பதைத்தான் இன்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

சமூக ரீதியிலும், கல்வியிலும், பின்தங்கிய மக்களின் முன்னேற்றத்திற்கென மாநில அரசுகள் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளலாம். அரசியல் சட்டத்தின் பிற பிரிவுகள் அவற்றுக்குக்

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1993 நவம்பர் 9

குறுக்கீடாக இருக்கலாகாது என்ற வகையில் அரசியல் சட்டத்தின் 15 (4) பிரிவை இணைத்து முதல் அரசியல் சட்டத் திருத்தத்தை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்து பேசிய அன்றைய பிரதமர் பண்டித நேரு பெருமகனார் கூட, இதே கருத்தைத்தான் வலியுறுத்திப் பேசியுள்ளார். அன்று அவர் பேசும்போது குறிப்பிட்டார் :

"If this amendment is passed, the State Governments concemed will have a certain power to go ahead with the laws that they have already passed. We shall help them in examining them and dealing with them. They should, if necessary, amend their laws, here and there, so as to deal with these hard cases."

மிகத் தெளிவாக அன்று பண்டித நேரு தெரிவித்த கருத்துக்களுக்கு செயல் வடிவம் தரவேண்டிய அவசர அவசியம் இன்றைய மத்திய அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இந்தக் கடுமையானப் பிரச்சினையில், மாநில அரசுகளின் பிரச்சினைகளைத் தீர்க்க சட்டங்களை இங்கொன்றும், அங்கொன்றுமாகத் திருத்திக்கொள்வதற்கும், பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கும் நாங்கள் உதவிடுவோம் என அவர் சொல்லியதிலிருந்து சட்டத் திருத்தங்களைச் செய்ய மத்திய அரசு துணை இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. எனவே, மத்திய அரசின் மூலம் உரிய சட்டத் திருத்தத்தைச் செய்ய வேண்டிய அப்படிப்பட்ட ஓர் அவசியம் இன்று தமிழகத்திலே, ஏன் நாடு தழுவிய நிலையில் ஏற்பட்டுள்ளதென்றால் அதை அனைவரும் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் பெரும்பான்மையாக வாழும் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய சமூக முன்னேற்றம் கருதி, பொருளாதார நலம் கருதி, அவர்களுக்குத் தொடர்ந்து தேவையான அளவிற்கு இடஒதுக்கீடு செய்வது தமிழக அரசின் தலையாய கடமையாக அமைந்துள்ள இந்த நேரத்தில் இதற்காகக் தேவைப்பட்டால் அன்று பண்டித ஜவஹர்லால் நேரு குறிப்பிட்டதைப் போல, இந்திய அரசியல் சட்டத்தில் தகுந்த திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்றால் அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகத்தான் இருக்கும். நமக்கு நீதிமன்றங்களைப் புறக்கணிக்கும் எண்ணம் கிஞ்சித்தும் இல்லை. பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளைத் தெளிவுபடுத்தி அவற்றைப் பாதுகாப்பதும், அவற்றை நிறைவேற்ற எல்லாவித நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதும்தான் இப்பொழுது நம்மிடையே இருக்கக்கூடிய தலையாய பொறுப்பாகும். அன்று கம்யூனல் ஜி.ஓ.வைப் பாதுகாக்க எப்படி அரசியல் சட்டத்திலே முதல் திருத்தம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டதோ அதே நடவடிக்கை இன்றும் எடுக்கப்பட்டாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே தான், 69 சதவீத இடஒதுக்கீட்டினை உறுதிபடுத்துவதற்காக இந்திய அரசியல்

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

சட்டத்தில் திருத்தம் தேவைப்படுகிறது என்பதை நாம் உரிய முறையில் உணர்த்த வேண்டியவர்களாய் உள்ளோம். அதுதான் பிற்படுத்தப்பட்ட மக்களின் உள்ளங்களில் தற்பொழுது ஏற்பட்டுள்ள காயத்தைப் போக்கும் மாமருந்தாகும். அவர்களை எதிர்நோக்கி நிற்கும் பின்னடைவுகளிலிருந்து அவர்களை மீட்கும் ஒரே வழியாகும். இதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்." In a democracy neither the Constitution nor the Government is supreme. It is the people who are supreme and they have the right to change the Constitution partially or completely" (Thumping of desks)' The pre-condition for a Constitution to be really democratic is that it is adaptable and responsive to the peoples' will and the Government set up under it is not the Government of one, or of the few, but of all, by all and for all.' என்ற தத்துவதத்தை மிகுந்தப் பணிவோடு உங்கள் எல்லோருடைய கவனத்திற்கும் வைத்து இன்று ஏற்பட்டுள்ள சூழலில் உடனடியாக நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை உள்ளடக்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தத் தீர்மானத்தினை இந்தப் பேரவையில் முன்மொழிந்திட விரும்புகிறேன். தீர்மானம்.

முற்பகல் 10.35

"தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட மக்களின், சமுதாய, பொருளாதார, கல்வி மேம்பாட்டுக்கென, அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீட்டுக் கொள்கை, நீண்ட நெடுங்காலமாகவே நடைமுறையில் இருந்து வருகிறது. தற்பொழுது தமிழ்நாட்டில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்டோருக்கு என்றும், 1 சதவீதம் பழங்குடியினருக்கு என்றும், 30 சதவீதம் பிற்படுத்தப்பட்டோருக்கு என்றும், 20 சதவீதம் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு என்றும், 31 சதவீதம் பொதுத் தொகுப்பிற்கு என்றும் இட ஒதுக்கீடு கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில் பல நூற்றாண்டு காலமாக ஒடுக்கப்பட்டு நலிவடைந்த மக்கள் இந்த இருபதாம் நூற்றாண்டில்தான் தொடர்ந்து அமலில் இருந்துவரும் இட ஒதுக்கீட்டுக் கொள்கையினால் உரிய பயன்களையும் நல்ல வாழ்க்கை நிலையையும் பெற்று முன்னேறி வருகின்றனர். தமிழ்நாட்டில் நிலவிவரும் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் பரிணாம வளர்ச்சியை ஆராய்ந்து பார்க்கும்போது இட ஒதுக்கீட்டின் அளவு, பெரும்பான்மை மக்களின் தேவைக்கேற்ப ஒவ்வொரு கட்டத்திலும் மேல்நோக்கி வளர்ந்துள்ளதே அன்றி எந்த நிலையிலும் ஒதுக்கீட்டு அளவு இதுவரை குறைக்கப்படவில்லை என்ற வரலாற்று உண்மை புலனாகும்.

நம் தமிழகத்தில் உள்ள, பிற்படுத்தப்பட்ட மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் 30-9-1991 அன்று இந்தப் பேரவையில், "....மண்டல குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில் 27 விழுக்காடு

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1993 நவம்பர் 9

என்பதற்குப் பதிலாக 50 விழுக்காடு என்று இட ஒதுக்கீடு செய்வதைக் கொள்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், மத்திய அரசுத் துறைகள், மத்திய அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் வேலைவாய்ப்புகளில் மட்டுமின்றி அனைத்துக் கல்வி நிலையங்களின் அனுமதியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் இந்தச் சட்டப் பேரவை மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது" என்னும் தீர்மானம் எல்லா அரசியல் கட்சிகளையும் சார்ந்த உறுப்பினர்களின் பேராதரவோடு ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது. அந்தத் தீர்மானம் இந்தியப் பிரதமர் மாண்புமிகு திரு. நரசிம்மராவ் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, தேவையான வேண்டுகோளும் விடுக்கப்பட்டது.

மண்டல் குழு பரிந்துரைகள் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்குகளில் இந்திய உச்ச நீதிமன்றம் மொத்த ஒதுக்கீடுகள் 50 சதவீத உச்ச வரம்பினை மீறாத வகையில் அமைய வேண்டும் என்று 16-11-1992 அன்று ஆணை பிறப்பித்தது. இதனை நிறைவேற்றக் காலக்கெடு எதையும் உச்ச நீதிமன்றம் நிர்ணயிக்கவில்லை. கல்வி நிறுவனங்களில் இந்த ஆண்டிற்கான அனுமதி கொடுக்கும் பிரச்சனை சென்னை உயர்நீதி மன்றத்தில் எழுப்பப்பட்டபோது சென்னை உயர்நீதிமன்றம் இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரை நடப்பு ஆண்டில் தமிழ்நாடு அரசு ஏற்கெனவே பின்பற்றிவந்துள்ள கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றலாம் என்றும் 1994-95 கல்வியாண்டில் இட ஒதுக்கீட்டு அளவு 50 சதவீதமாகக் குறைக்கப்பட வேண்டும் என்றும் தீர்ப்பளித்தது. பிற்படுத்தப்பட்ட மக்களுடைய தொய்வில்லாத தொடர்ந்த முன்னேற்றம் கருதி இப்பொழுதுள்ள இட ஒதுக்கீட்டுமுறை தொடர வேண்டும் எனும் நிலையினை உறுதியாக மேற்கொண்டுள்ள தமிழ்நாடு அரசு சென்னை உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து இந்திய உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளது. இடைக்கால உத்தரவாக இந்திய உச்ச நீதிமன்றம் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கின்றபோது இட ஒதுக்கீடு 50 சதவீதத்திற்குள்தான் அமைய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

முற்பகல் 10.40

தமிழ்நாடு அரசு, இதுவரை கடைப்பிடித்து வந்துள்ள, 69 சதவீத இட ஒதுக்கீட்டுக் கொள்கை, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுத்து, அவர்களுடைய வாழ்க்கை மேம்பாடு அடையவும், வளம் பெறவும், ஒரு சிறந்த பயனுள்ள சாதனமாக அமைந்திருந்தது தமிழ்நாட்டின் வரலாற்று உண்மையாகும். ஆகவே, இந்தக் கொள்கை தொடர்ந்து நிறைவேற்றப்பட்டால்தான், பெரும்பான்மையான தமிழ் மக்களுடையை வாழ்க்கை, வளர்ச்சியடைய இயலும் என்று இந்தப்

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] *[டாக்டர் ஜெ. ஜெயலலிதா]*

பேரவை கருதுகின்றது. எனவே, தமிழ்நாடு அரசு இதுவரை மேற்கொண்டு வந்துள்ள 69 சதவீத இட ஒதுக்கீட்டுக் கொள்கை, தொடர்ந்து கடைப்பிடிக்கப்படவும், நிறைவேற்றப்படவும் இந்திய அரசியல் சட்டத்தில் தக்க திருத்தம் கொண்டு வருவதைத் தவிர, மாற்று வழி வேறு ஏதும் இல்லை என்று இந்தப் பேரவை கருதுகின்றது.

காலப் போக்கில் சமூகத்தில் இயல்பாகவே ஏற்படுகின்ற மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. பெருவாரியான மக்கள் நலனைக் கருதி இந்திய அரசியல் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதும், புதிய சட்டங்களை இயற்றுவதும், மத்திய மாநில அரசுகள் தங்கள் செயல் முறைகளில் மாற்றம் செய்து கொள்வதும் தேவைப்படுகின்ற ஒன்றாகும். இந்திய நாட்டு வரலாற்றில் இதுபோன்ற மாற்றங்கள் பல நேரங்களில் நிகழ்ந்துள்ளன.

எனவே, இப்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும் சமூக மறுமலர்ச்சிகளைக் கருத்தில் கொண்டு பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு எந்த வகையிலும் ஊறு நேராவண்ணம் எப்பொழுதும் போல் இனி வருங்காலம் முழுவதிலும், அரசுப் பணிகளிலும், கல்வி நிலையங்களின் அனுமதியிலும் 69 சதவீத இட ஒதுக்கீடு தொடர்ந்து அமலில் இருக்கத் தக்க வகையில் இந்திய அரசியல் சட்டத்தில் விரைவில் உரிய திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்று இந்த மாமன்றம் மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றது." *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்படுத்தப்பட்டோரின் மேம்பாட்டில் சோதனையும், வேதனையும் மிகுந்த இந்தக் காலகட்டத்தில் நான் முன்மொழிந்துள்ள இந்தத் தீர்மானத்தை இந்தப் பேரவையில் உள்ள எல்லா கட்சிகளையும் சார்ந்த உறுப்பினர்களும் ஒருமனதாக ஏற்று நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை தமிழகமே ஓர் உருக்கொண்டு எழுந்துள்ளது என்பதை உலகத்திற்கு உணர்த்திட இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற உணர்வினையும் கனிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தீர்மானம் பேரவையில் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பெறும் என்ற நம்பிக்கையுடன் தீர்மானத்தை முன்வைத்துள்ள இந்த நேரத்தில் அமைச்சரவைக் கூட்டத்தில் அரசு எடுத்துள்ள இன்னொரு முக்கிய முடிவினையும் பேரவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இத்தீர்மானத்தின் நியாயம் மிகுந்த உணர்வினை இங்குள்ள அனைத்து உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் அப்படியே ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பது மட்டுமல்லாது ஒட்டுமொத்த தமிழகமே இத்தீர்மானத்தோடு

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [*1993 நவம்பர் 9*

ஒன்றியுள்ளது என்பதைப் பறைசாற்றும் வகையிலும் அன்று 1951-ல் தந்தை பெரியார் தலைமையில் கிளர்ந்து எழுந்த தமிழகத்தின் உணர்வுகள் அப்படியே மங்காமல் மாறாமல் தமிழக மக்களிடம் உள்ளது என்பதை உணர்த்தும் வகையிலும் தமிழகம் தழுவிய பொது வேலைநிறுத்தம் ஒன்றினை வரும், (மேசையைத் தட்டும் ஒலி) 16-11-1993 அன்று நடத்துவது என முடிவெடுத்துள்ளோம். வழி, வழி வந்த தமிழகத்தின் தனி உரிமையை நிலைநாட்டிட அவ்வேலை நிறுத்தத்திற்கும் அனைவரது ஆதரவினையும், ஒத்துழைப்பினையும் வழங்கிட வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்கள் இதுவரை பெற்றதை இழந்திடத் தயாராக இல்லை. இழந்ததை மீட்க எல்லா முனைகளிலும், எல்லா முறைகளிலும் தொடர்ந்து முயற்சிப்போம்; ஓரணியாக நின்று குரல் கொடுப்போம் எனத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்துள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் இந்தப் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்படும் என்கிற நம்பிக்கை தமிழக மக்கள் மத்தியில் இருப்பதை அனைவரும் அறிவோம்.*

முற்பகல் 10.45

அந்த உணர்வோடு ஒன்றி விவாதத்தில் கலந்துகொள்கின்ற உறுப்பினர்கள் நம்முடைய கோரிக்கைக்கு வலுச்சேர்க்கிற வகையில் தங்கள் விவாதத்தை அமைத்துக்கொண்டு உரையாற்றக் கேட்டுக்கொள்கிறேன். எல்லா கட்சித் தலைவர்களும் இதிலே கலந்துகொண்டு உரையாற்ற இருக்கிறார்கள். நெடு நேரம் விவாதித்துக் கொண்டோம் என்று வருவது கூட இதிலேயும் பல்வேறு கருத்துக்கள் பேசப்பட்டன என்பது போல வந்துவிடும். எனவே அதையும் மனதிலே கொண்டு, நேரத்தின் அருமையையும் கருதி பேசி முடிக்கக் கேட்டுக் கொள்கிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கின்ற அரசினர் தனித் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தமிழகத்தில் 69 சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, ஆதிதிராவிடருக்கு, பழங்குடியினர் மக்களுக்கு மக்கள் தொகையினுடைய அடிப்படையிலே ஜாதி, சமூக அமைப்பிலே, கல்வி அமைப்பிலே வழங்கப்பட்டிருக்கக்கூடிய இட ஒதுக்கீட்டை சமீபத்தில் உச்ச நீதிமன்றம், 50 சதவிகிதம்தான் இட ஒதுக்கீடு என்று தீர்ப்பு வழங்கி இருக்கிறது. இன்றைக்கு தமிழக அரசு சார்பாகக் கொண்டு வந்திருக்கின்ற

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [*திரு. ஜி. பழனிசாமி*]

இந்தத் தீர்மானத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முழு மனதோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறது.

தொடர்ச்சியாக, தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற இட ஒதுக்கீட்டில், பொதுவாக சமூக கல்வி, பொருளாதார அடிப்படையில் இன்றைக்கு மக்களுடைய வளர்ச்சிக்கு ஆண்டு ஆண்டுக் காலமாக இருந்து வந்திருக்கின்ற இந்த இட ஒதுக்கீட்டினுடைய கொள்கையை இன்றைக்கு சுப்ரீம் கோர்ட்டு 50 சதவிகிதம்தான் என்று தீர்ப்பளித்து இருக்கின்ற நிலையினை மாற்ற மத்திய அரசு இதிலே உடனடியாகத் தலையீட்டு, அந்தந்த மாநிலத்திலே இருக்கக்கூடிய மக்களுடைய தொகை அடிப்படையிலே மக்களுடைய சமூக கல்வி அமைப்பினுடைய வகையில் அரசுப் பணியிலும், கல்வியிலும் இந்த இட ஒதுக்கீடு கொள்கையில் சுப்ரீம் கோர்ட்டு தலையிடக்கூடாது என்கின்ற இந்த நல்ல கொள்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எஸ். ஆண்டித்தேவர்.*

திரு. எஸ். ஆண்டித் தேவர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு சார்பிலே முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பில் ஆதரித்துப் பேசுவதோடு, என்னுடைய சில கருத்துக்களையும் நான் சொல்ல விரும்புகிறேன்.*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக கம்யூனல்-- ஜீ. ஓ.-ல் எப்படி பரிணாம வளர்ச்சி ஏற்பட்டது, எப்படி திராவிட இயக்கம் அதற்காகப் பாடுபட்டது, தந்தை பெரியார் அவர்கள் 1929 ஆம் ஆண்டு அண்ணா அவர்களோடு சேர்ந்து போராட்டம் நடத்தி, அது 1951-லே மத்திய ஆட்சியிலே பொறுப்பிலே இருந்த பிரதமர் அவர்கள் ஆர்டிக்கிள் 15(4) என்ற பிரிவின் கீழ் மாநில அரசுக்கு கம்யூனல் ஜீஓ., அந்தந்த மாநிலங்களிலே இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இட ஒதுக்கீடு செய்து கொள்ளலாம் என்று ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார்களோ அது போன்று-- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது-- கேரளா உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக இருந்த ஃபசல் அலி அவர்கள் ஒரு மாநிலத்திலே 80 சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட மக்கள் இருப்பார்களேயோனால் 50 சதவிகிதம் என்பது பொருந்தாது. அதற்கு மேலும் அந்த மாநில அரசு ஏற்றுக்கொள்ளலாம். அந்த மக்களுடைய நலன் கருதி மாநில அரசுகள் ஏற்றுக்கொள்வதில் தவறில்லை என்று தீர்ப்பு கூறியிருக்கின்றார்கள்--என்று சொன்னார்கள்.

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[திரு. எஸ். ஆண்டித் தேவர்] [*1993 நவம்பர் 9*

முற்பகல் 10.50

அதேபோன்று, உச்ச நீதிமன்றமாக இருந்தாலும், உயர் நீதிமன்றமாக இருந்தாலும், சட்டமன்றங்களும், பாராளுமன்றங்களும் இயற்றுகின்ற அந்தச் சட்டத்தினை - அவர்கள் அதிலே விளக்கங்களைச் சொல்லலாமே தவிர, பாராளுமன்றத்தால் ஏற்படுத்தப்பட்ட அல்லது இந்திய அரசியல் சட்டத்திலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற இட ஒதுக்கீடு இவ்வளவுதான் என்று குறிப்பிடப்படாமல் இருந்தாலும், மாநில அரசுகள் உயர்த்திக் கொள்ளலாம் அல்லது குறைத்துக் கொள்ளலாம். அந்தந்த மாநிலத்திலே இருக்கின்ற மக்களுடைய ஜனத்தொகை, மக்களுடைய பொருளாதார நிலை, கல்வி நிலை, அதைப்பொறுத்து அந்தந்த மாநில அரசுகள் உயர்த்திக் கொள்ளலாம் என்ற நிலை இருக்கும்போது, நமது மாநிலத்திலே 69 சதவிகிதம் இருப்பதை 50 சதவிகிதமாக ஆக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் சொல்லுமேயானால் அது நாட்டு மக்களுடைய நலனைக் கருத்தில்கொள்ளாமல் அவர்கள் இந்தத் தீர்ப்பினைக் கூறியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

தமிழ் மாநிலம் மட்டுமல்ல, இந்தியா முழுவதிலும் பல்வேறு இனத்தைச் சார்ந்தவர்கள், பல்வேறு மொழி பேசுகின்றவர்கள், பல்வேறு பொருளாதார நிலையில் தாழ்த்தப்பட்டவர்கள், அழுத்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்காக அளிக்கப்பட்ட சலுகை 69 சதவிகிதம்- தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, பொருளாதார ரீதியாக அழுத்தப்பட்ட ஜனத்தொகை உள்ள தமிழகத்திலே 69 சதவிகிதம்கூடப் போதாது. இன்னும் அதிகம் பெற வேண்டுமென்ற நிலை இருக்கின்ற நேரத்தில் 69 சதவிகிதத்தையும் குறைக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் கூறுமேயானால் அதற்காக தமிழக அரசு எடுத்திருக்கின்ற முடிவு 16 ஆம் தேதி தமிழகம் தழுவிய ஒரு போராட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு மேலும் விலைகொடுத்து வாங்கமுடியாத உயிரையே கொடுப்பதாக இருந்தாலும் நானும், என்னைச் சார்ந்த இயக்கமும் அதற்குத் தயாராக இருக்கிறோம் என்று நான் முதலமைச்சருக்கும், இந்த அமைச்சரவைக்கும், நாட்டு மக்களுக்கும் கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா.சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலே, பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினருக்காக இட ஒதுக்கீடு தொடர்ந்து 69 சதவிகிதமாக நீடிக்க மத்தியிலே சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று ஒரு

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [திரு. நா. சா. பழனிசாமி]

தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை முழுமையாக, முழுமனதோடு உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பில் வரவேற்று இந்தத் தீர்மானத்தை அமலாக்குவதற்கு என்ன உதவிகள் கேட்டாலும், என்ன விளைவுகள் நேரிட்டாலும் நம்முடைய தமிழக முதல்வர் கரத்தை பலப்படுத்தி, அவர்களுடைய இந்த ஆணித்தரமான உறுதியை நிறைவேற்றுவதற்கு தமிழகத்திலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் துணை நிற்பார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் உறுதியிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதோடு, வருகின்ற 16 ஆம் தேதி தமிழகம் தழுவிய அந்த வேலை நிறுத்தத்திற்கு அவர்கள் அறைகூவி இருந்ததையும் வரவேற்று அதற்கும் உறுதுணையாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்றைக்கு இந்த 69 சதவிகிதம் இட ஒதுக்கீட்டுக் கொள்கை என்பது இந்தியாவிலே முதல் முதலாக தமிழகம்தான் பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர்கள்., அவர்கள் பின்னடைவிலே இருந்து முன்னேறி கல்வியிலும், வேலைவாய்ப்புகளிலும், வேலைவாய்ப்புகளில் உயர்வு பெறுவதற்கும் உறுதுணையாக இருக்கின்ற இந்த சமூக நீதியை, திராவிட இயக்கத்தின் சார்பாக தமிழகம்தான் அன்று பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களை வற்புறுத்தி, அன்றைக்கு ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, அந்தச் சட்டத் திருத்தத்தில், 15, உட்பிரிவு 4-ன் கீழ் நமக்கு இந்த உரிமையை பெற்றுத் தந்திருக்கிறார்கள்.

முற்பகல் 10.55

இன்றைக்கு மண்டல் கமிஷனுடைய பரிந்துரையை ஒட்டி, பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு என்பது 50 சதவீதத்திற்கு மிகையாக இருக்கக்கூடாது என்ற தீர்ப்பினை உச்ச நீதிமன்றமானது வழங்கி இருக்கிறது. யாரை, எந்த இனத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கலாம், யார் பின்னடைந்துள்ளார்கள் என்று தீர்மானிக்கிற உரிமை தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு இருக்கிறது. அதைப்போல எவ்வளவு சதவீதம் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கவேண்டும், தாழ்த்தப் பட்டவர்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று தீர்மானிக்கிற உரிமையும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிகளுக்கல்லாமல், நீதி மன்றம் அதை ஒரு சடங்காக நிர்ணயம் செய்திடும் உரிமையை அப்படியே விட்டுவிட முடியாது. இந்திய நாட்டிலே மாநிலத்திற்கு மாநிலம் தாழ்த்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும் அதிகமாக மாறுபட்ட நிலையில் இருக்கின்ற நிலைமையில், மக்கள் பிரதிநிதிகளுக்குத்தான் அவர்களுக்கு எவ்வளவு சதவிகிதம் ஒதுக்க வேண்டுமென்ற உரிமை இருக்கவேண்டும், அந்த வகையில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளிப்பதற்கு முன்பாகவே, கடந்த 10 ஆண்டுக்காலமாகவே 69 சதவிகிதம் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்கும் மாநிலம் என்ற வகையில் இதுவரையில்

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[திரு. நா. சா. பழனிசாமி] [1993 நவம்பர் 9

தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் வழங்கி வந்த உரிமைகளை, அவர்கள் முன்னேற்றத்திற்கு உதவி வந்த உரிமைளைத் தமிழக அரசு விட்டுக் கொடுக்கக்கூடாது என்ற அந்த உயரிய நோக்கத்தில் தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை வரவேற்று, எந்த விளைவுகள் வந்தாலும், இதுவரை தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பழங்குடியினருக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும் கொடுத்து வந்த முன்னுரிமைகளைத் தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு இளம்வழுதி.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ அரசியல் புயல்கள், சூறாவளிகளுக்கு மத்தியிலேயும் இட ஒதுக்கீடு என்ற இந்த ஒளி விளக்கை அணையாமல் பாதுகாத்து வருபவரும், ஆலயங்களில் ஆதி திராவிடர்களும் அர்ச்சகர்களாகலாம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தவரும், ஆதிதிராவிடர்களுக்கும், பிற்படுத்தப்படோருக்கும் உள்ள இட ஒதுக்கீட்டை அதிகப்படுத்தியவரும், புழுதியில் வீசி எறியப்பட்ட பூமாலையாகக் காட்சியளித்த பிற்பட்டோருக்கு தனியாக ஒரு இலாக்காவை உருவாக்கி, அதற்கென தனியாக ஒரு அமைச்சர் பதவியை உருவாக்கியவரும், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத மிகவும் பிற்படுத்தப்பட்டோர்-மோஸ்ட் பேக்வார்ட்-என்ற பிரிவை ஏற்படுத்தி, வன்னியரும், சீர்மரபினரும் பயன் பெறத்தக்க வகையிலே பாதை அமைத்துக்கொடுத்தவரும், ஏழை எளிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தவரும் எங்களுடைய அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் தம்பிகளில் ஒருவன் என்ற பெருமையோடு, நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிட இயக்கங்களின் தலையான கொள்கைகளில் ஒன்றான இட ஒதுக்கீடு இன்றைய தினம் ஓட்டைப் படகாக ஆகிவிடுமோ என்ற அச்சம் நம்மையெல்லாம் ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கிறது. நீதிக் கட்சியின் காலத்திலே விதையிட்டு, முளைவிட்ட வகுப்புவாத உரிமை, அதனை நிலைநிறுத்த வகுக்கப்பட்ட இட ஒதுக்கீடு உரிமை இன்றையதினம் பேராபத்துப் புயலில் சிக்கித் தவிக்கிறது. அதனைக் காப்பாற்றி, கரை சேர்க்கும் முயற்சியாக இன்றைக்கு நம்முடைய அரசு கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். வரவேற்கிற அதே நேரத்தில் வரலாற்றை நினைவூட்ட விரும்புகிறேன்:

ஏழை எளிய தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால், வர்ணாஸ்வரம

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] *[திரு. இளம்வழுதி]*

தர்மத்தின் பெயரால், ஆண்டு ஆண்டுக்காலமாக அடைக்கப்பட்டு, அழுத்தப்பட்டு, நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு வந்தார்கள். சூத்திரனுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வியைக் கொடுக்காதே என்ற சமுதாய அமைப்பிலே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கல்வியும், வேலை வாய்ப்பும் மறுக்கப்பட்டு வந்தது. ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குக் கல்வி அறிவே பிரதானம். எண் சாண் உடம்புக்கு தலையே பிரதானம் என்பதுபோல ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு கல்வி அறிவே பிரதானம். அதனால் தான் அறிவுக் கடல், அண்ணல் அம்பேத்கார் அவர்கள் முதலிலே கற்பி, பிறகு ஒன்று சேர், பிறகு போராடு என்று சொன்னார். ஆனால் இங்கே சூத்திரனுக்கு எதைக்கொடுத்தாலும் கல்வியைக் கொடுக்காதே என்றார்கள். ஒரு வரலாற்றுச் செய்தியை நான் நினைவூட்ட விரும்புகிறேன். இத்தாலி நாட்டைசேர்ந்த ராபர்ட் நொபிலி என்பவர் 1610-ல் திருமலை நாயக்கர் மன்னன் மதுரையை ஆண்டு வந்த காலத்திலே மதுரையைச் சுற்றிப் பார்த்து வந்தபோது தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை ஒரு குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்.

அப்படி மதுரையைச் சுற்றிப் பார்க்கிற நேரத்திலே ஒரு குருகுலத்தையும் அவர் சுற்றிப் பார்க்கிறார். அந்த குருகுலத்திலே ஆயிரம் மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் படித்துக்கொண்டிருக்கிற ஆயிரம் மாணவர்களில் பிரம்மாவின் காலில் பிறந்தவர்கள் என்று சொல்லக்கூடிய சூத்திர சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவர் கூடக்கிடையாது. பிரம்மாவின் நெற்றியிலே பிறந்த உயர் ஜாதிக்காரர்கள்தான் இருந்தார்கள். இதிலிருந்தே இந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சூத்திர பெருமக்களுக்கு எந்த அளவுக்கு கல்வி மறுக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளமுடியும்.

முற்பகல் 11.00

மதம் பிடித்த யானையையும், குடித்த குதிரையையும், படித்த சூத்திரனையும் பக்கத்திலே வைத்துக்கொள்ளாதே என்ற உபதேசங்கள் நியாயப்படுத்தப் படுகின்ற இத்தகைய சமுதாய அமைப்பிலே, பொட்டுப் பூச்சிகளாய் புன்மைத் தேரைகளாய் இருட்டில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த பிற்படுத்தப்பட்ட மக்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்கு, 1928-லே சுப்பராயன் அமைச்சரவையிலே- அமைச்சராக இருந்த முத்தையா முதலியார் அவர்கள் ஏற்றி வைத்த ஒளி விளக்குதான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்ற இட ஒதுக்கீட்டுக் கொள்கை. நீதிக்கட்சி போட்ட அன்றைய உத்தரவிலிருந்து இன்றுவரை அணையாத ஒளிவிளக்காக அது நடைமுறைப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் பல்வேறு காலகட்டங்களிலே அதற்கு ஆபத்துகள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிவதற்கு

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[திரு. இளம்வழுதி] [*1993 நவம்பர் 9*

முன்பு குறிப்பிட்டதைப் போல, கற்பகம் துரைராஜ் என்பவர் அன்றைக்கு இந்திய அரசியல் சட்டம் வழங்கியிருக்கிற அடிப்படை உரிமைகளுக்கு முரணாக இட ஒதுக்கீடு முறை இருக்கிறது என்று சொல்லி, சென்னை உயர்நீதி மன்றத்திலே வழக்காடினார்கள். அந்த வழக்கிலே அரசியல் நிர்ணயசபை உறுப்பினராக அன்றைக்கு இருந்தவரான அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள்-நீண்ட நெடுங்காலமாக கோர்ட்டுக்கே போகாமல் இருந்தவர்-அவரே கழட்டி வைத்திருந்த தனது கறுப்புக்கோட்டை மாட்டிக்கொண்டு உச்சநீதிமன்றம் வரை சென்று அந்த வழக்கிலே வாதாடினார். உயர்நீதிமன்றத்திலேயும், உச்சநீதிமன்றத்திலேயும், அந்த இட ஒதுக்கீடு அரசியல் சட்ட அடிப்படை உரிமைகளுக்கு முரணானது என்று அன்றைக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதி மன்றங்களின் கதவுகள் எல்லாம் மூடப்பட்ட பிறகுதான் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் கிளர்தெழுந்து, போர்கோலம் பூண்டு இங்கே மக்கள் சக்தியைத் திரட்டிப் போராடினார்கள். தமிழகத்தின் வீதிகளிலே புரட்சி வெடித்தது. அதன் விளைவுதான் இந்தியாவின் அரசியல் சட்டத்திலே முதல் திருத்தமே வந்தது. அந்தத் திருத்தத்தைக்கொண்டு வந்து பேசுகின்ற நேரத்திலே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் என்ன கோடிட்டுக் காட்டினார் என்றால், "There issuch an happening in Madras." என்று சொல்லி இந்தத் திருத்தத்திற்குக் காரணமே அன்றைய மெட்ராஸ் ராஜதானியிலே வெடித்த போராட்டம் தான் காரணம் என்று சொல்லி அன்றைக்குப் பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதற்குப் பிறகு அரசியல் சட்டத்திலே, இங்கே முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, ஆர்ட்டிகிள் 15 செக்ஷன் 4 மற்றும் ஆர்ட்டிகிள் 16 செக்ஷன் 4 என்ற உட்பிரிவுகள் சேர்க்கப்பட்டன. அதாவது பின்தங்கிய மக்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் இல்லை என்று மாநில அரசு நினைக்குமேயானால் அவர்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் இட ஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற உட்பிரிவைச் சேர்த்து அன்றைக்கு அரசியல் சட்டம் திருத்தப்பட்டது. அதன்பிறகு இன்னொரு முறையும் இந்த இட ஒதுக்கீட்டுக்கு ஆபத்து வந்தது. நான் அதைச் சொல்கிற காரணத்தாலேயே தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது. நடந்த சம்பவங்களைத்தான் நான் சொல்கிறேன். மறைந்த முன்னாள் முதலமைச்சர் பெரியவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருந்த காலத்திலே, இட ஒதுக்கீடு பொருளாதார அடிப்படையில் என்று கொண்டு வந்து, ஆண்டுக்கு 9,000 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு அளிக்கப்படும் என்று அரசு உத்தரவைப் போட்டார். ஆனால் அன்றைக்கு [illegible] மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள்.

[illegible] முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம். இன்று மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள பல்வேறு அமைப்புகள் எல்லாம் அன்றைக்குச்

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [திரு. இளம்வழுதி]

சேர்ந்து போராடின. முன்னாள் முதலமைச்சர் பெரியவர் எம்.ஜி.ஆர். அன்றைக்கு அந்த உத்தரவைத் திரும்பப் பெறவில்லை. அதன்பிறகு, 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் படுதோல்வியைத் தழுவிய பிறகுதான் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர் அவர்கள் தான் போட்ட அந்த உத்தரவைத் திரும்பப் பெற்றுக்கொண்டது மட்டுமல்ல, இங்கே முதலமைச்சர் அவர்கள் பெருமையோடு குறிப்பிட்டதைப் போல பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அதுவரை இருந்த 31 சதவீதத்தை 50 சதவீதமாகவும் உயர்த்தினார். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், நான் சொல்வது மற்ற உறுப்பினர்களுக்கு **ஆனால் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்களைப் பார்த்து மற்ற உறுப்பினர்களுக்கு ** என்று (குறுக்கீடு) நீங்கள் என்ன பேச வருகிறீர்கள் என்பது எல்லோருக்கும் புரிந்துதான் இருக்கிறது. **என்று சொல்வது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

முற்பகல் 11.05

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலிலே தோல்விக்குக் காரணம் இது என்று சொன்னார். ஆனால் சட்டமன்றத் தேர்தலிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் வெற்றி பெற்றார். அதற்கு என்ன காரணம் என்பதை அவர் சொல்ல வேண்டும். இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. நாடாளுமன்றத் தேர்தலிலே நடந்ததற்கும்–தோல்விக்கும், அதற்குப் பின்னாலே சட்டமன்றத் தேர்தலிலே புரட்சித் தலைவர் வெற்றி பெற்றதற்கும் சம்பந்தம் கிடையாது. ஆனால், பிரச்சினையை அவர் திசை திருப்பாமல், இருந்த விவரங்களை அவர் எடுத்துச் சொன்னால், அவைகளை விவாதிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஏற்கனவே, நீங்கள் தெரிவித்ததைப்போல, இந்தப் பிரச்சினையின் உள்ளே சென்று பல்வேறு விஷயங்களை விவாதிக்கின்றபொழுது கருத்து மாறுபாடுகள் இருக்கலாம் என்ற உணர்வு வெளியே இருக்கின்றவர்களுக்கு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டு, இருக்கின்ற பிரச்சினைகளைத் தெளிவாக அவர் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[1993 நவம்பர் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் உண்மையைத் திசை திருப்புகிறார். உண்மையான நிலை என்னவென்றால், பொருளாதார அடிப்படையில் மிக மிகப் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற நோக்கத்தை நிறைவேற்றுவதுதான். அதற்குக் காரணம் சட்டநாதன் குழுவினுடைய அறிக்கையிலே உள்ளபடி பிற்பட்டோர் என்ற பட்டியலிலே முற்பட்டோர் பலரும் இடம்பெற்று இருப்பதன் காரணமாகவும், ஏற்படுத்தப்படுகின்ற இட ஒதுக்கீடுகள் எல்லாம் வசதி பெற்றவர்கள், வாய்ப்பு பெற்றவர்கள், பிற்பட்டோர் என்ற பெயரிலே எடுத்துக்கொண்டு செல்வதன் காரணமாகவும், அதிலே இருக்கிற முற்பட்டோர் வகுப்பை எல்லாம் பிரித்துவிட்டு பிற்பட்டோர் வகுப்புக்கு பொருளாதார அடிப்படையிலே தர வேண்டும் என்ற ஒரு கருத்தை அவர்கள் சொல்லி இருந்தார்கள். அந்த அடிப்படையிலே தான், 9 ஆயிரம் ரூபாய் வருமானத்திற்குக் கீழே இருக்கிற பிற்பட்டோருக்குச் சலுகை காட்டப்பட்டது. பிற்பட்ட வகுப்புக்காக ஒதுக்கப்பட்ட இடம் பிற்பட்ட வகுப்பினருக்குத்தான்; ஆனால், 9 ஆயிரம் ரூபாய் வருமானத்துக்குக் கீழே இருக்கிற ஏழை பிற்பட்ட வகுப்பினர்களுக்கு அந்த இடங்கள் இருக்க வேண்டும் என்ற கருத்தில், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு, அது சரியாக ஏற்றுக்கொள்ளப்படாமல் அதற்கு எதிர்ப்புகள் எல்லாம் கிளம்பிய உடனே, அதை நடைமுறைப்படுத்தாமல் 50 சதவிகித இடங்களை புரட்சித் தலைவரே உருவாக்கினபோது நாடாளுமன்றத் தேர்தல் வந்துசேர்ந்தது. அதற்குப் பிறகுதான் நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று, இந்திய அரசு அமைத்து ஒரு 17, 18 நாட்களிலேயே மாநில ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு, 4 மாதங்களுக்குப் பிறகு, மறுபடியும் தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வெற்றி பெற்றார்கள். ஆகவே, இந்தத் தேர்தலுக்கும், புரட்சித் தலைவர் 50 சதவீதம் என்று கொண்டு வந்ததற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் வருவதற்கு முன்னாலேயே நடைபெற்று முடிந்துவிட்டது என்பதை உணர வேண்டும், (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அரங்கநாயகம், அந்த நேரத்தில் இருந்தவர், சொல்கிறார்.

டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர்

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9]

அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தைத்தான் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். பொருளாதார அடிப்படையிலே மட்டுமே அந்த 9 ஆயிரம் என்கிற அந்தத் திட்டம் கொண்டுவரப்படவில்லை. பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மக்களில் 9 ஆயிரம் என்கிற அடிப்படையிலேதான் கொண்டு வரப்பட்டது. அது பிற்பட்ட சாதியைச் சேர்ந்த ஏழைகளுக்காகக் கொண்டுவரப்பட்ட திட்டமே தவிர, வேறு தவறான திட்டம் அல்ல. இதே சட்டமன்றத்தில் இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய தலைவர் அங்கே அமர்ந்துகொண்டு இருந்தபோது இதேமாதிரியான விவாதம் வந்த நேரத்தில், 'நீங்கள் பிற்பட்ட சாதியைச் சேர்ந்த ஏழைகளுக்குத் துரோகம் செய்கிறீர்கள்' என்ற கருத்தைச் சொன்ன போது, அப்போது அவர் வாய் மூடி மௌனியாக அமர்ந்து இருந்தாரே தவிர எதிர்த்துப்பேச முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிதி, இதனால் விவாதத்திற்குள்ளே போக வேண்டாம், ஏதோ கருத்து மாறுபாடு இருக்கிற மாதிரி தெரியும்.

திரு. இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே, யாருக்கும் எந்தக் கருத்து வேறுபாடும் இதிலே இருக்கமுடியாது. இருக்கவும் கூடாது. ஒருமித்த கருத்து. ஆனால், சில உண்மைகளை நாம் ஒப்புக்கொண்டு ஆகவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அரங்கநாயகம் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே சொன்னார். ஏதோ அவர் சொன்னதாகவும், எங்கள் தலைவர் மௌனியாக இருந்ததாகவும் சொன்னார். எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்த அந்த பொருளாதார அடிப்படையிலே 9 ஆயிரம் என்கின்ற அந்தப் பிரச்சினை, அது நல்ல திட்டமாக இருந்தால், அன்றைக்கு ஏன் திராவிடர் கழகம் உட்பட காங்கிரஸ் கட்சியில் இருக்கிற பல்வேறு தலைவர்களும் அதை எதிர்த்தார்கள்? அதுமட்டுமல்ல, அந்த அரசு ஆணை தமிழகத்தின் வீதிகளிலே கொளுத்தப்பட்டு, அந்த சாம்பல் கோட்டைக்கு அனுப்பப்படும் என்று சொன்னபோது, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள், 'அனுப்பி வையுங்கள்; கோட்டையிலே இருக்கிற குரோட்டன் செடிகளுக்கு எருவாகப் போடுகிறோம்' என்றெல்லாம் சொன்னது நினைவு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவெல்லாம் பேசினால் விவாதம் ரொம்ப திசை மாறிப் போய்க்கொண்டிருக்கும், வேண்டாம்; அதனால், இப்போது இருக்கிற பிரச்சினைக்கு வாருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் ரீதியான கட்சி மாச்சரியங்களும், ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுவதும் அன்றாடம் எப்போதும் நடக்கும் விஷயங்களாகும். ஆனால் இன்றைய இந்தப் பேரவையின் சிறப்புக்கூட்டத்தில் அத்தகைய

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [*1993 நவம்பர் 9*

கட்சி மாச்சரியங்களுக்கு இடம் தராமல் ஒருமனதாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்றுதான் இங்கு உள்ள பெரும்பான்மையோர் விரும்புகிறார்கள். இன்று தமிழ்நாட்டில் பெரும்பான்மையாக வாழும் பிற்படுத்தப்பட்ட மக்களின் எதிர்காலத்திற்கு ஒரு பெரிய சோதனை ஏற்பட்டு உள்ளது. இந்தக் கால கட்டத்தில் தமிழகமே ஓர் அணியில் ஒன்றாக நிற்கிறது என்ற நம்முடைய ஒருமித்த உணர்வை நாம் மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டும் வகையில் இந்தப் பேரவைக் கூட்டம் அமைய வேண்டுமென்றுதான் நான் விரும்புகிறேன். பரிதி இளம்வழுதி அவர்கள் விரும்பினால் இன்னும் எத்தனையோ அசெம்பிளி செஷன்கள் நடைபெற இருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது இதுபோன்ற பேச்சுக்களை அவர் பேசுவார்களானால், அதற்கு பதில் அளிக்கவும் எங்கள் தரப்பில் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆகவே, இத்தகைய விவாதங்களை எல்லாம் வேறு சந்தர்ப்பத்தில் வைத்துக்கொள்ளலாம். இன்று இத்தகைய விவாதங்களை தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11.10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிதி அவர்கள் கவனிக்கவேண்டும். பரிதி இளம்வழுதி அவர்கள் பேசுகிறபோது ஆளுங்கட்சியிலிருந்து பலர் குறுக்கிட்டார்கள் என்று வருவதே கூட, ஏதோ இங்கே சுருத்து மாறுபாடு நிகழ்ந்தது என்பதைப்போல வெளியில்போய் விடும். ஆகவே, அதை மனதில் வைத்துப் பேசுங்கள்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி இதிலே ஒருமித்த கருத்துதான் இருக்கிறது என்பதை வெளியில் உள்ளவர்களுக்கு உணர்த்துகிற வகையில் நான் அந்தப் பிரச்சினையை அதோடு நிறுத்தி விட்டு, அடுத்தபடியாக நாம் அனுபவித்து வந்த 69 சதவீத இடஒதுக்கீடு என்பதற்கு இன்றைக்கு ஆபத்து வந்திருக்கிறது. ஏற்கனவே இன்னும் அதிகம் தேவை என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற நேரத்தில் இருப்பதையும் பறிக்கிற நிலையில் இன்றைக்கு உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எந்தெந்த ஆண்டு, எந்தெந்த அளவிற்கு இடஒதுக்கீடு எந்தெந்த வகுப்பினருக்கு, எப்படி எப்படி உயர்த்தப்பட்டது என்பதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. நம் மாநில அரசாங்கத்திலே, தமிழ் நாட்டிலே 69 சதவீதம் அனுபவித்து வருகிறோம். இதேபோல மத்திய அரசாங்கத்தினுடைய கல்வி நிலையங்களில், வேலை வாய்ப்புகளில் ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடுகள் வேண்டுமென்று பன்னெடுங்காலமாகப் போராடி வந்தார்கள். 1953 ஆம் ஆண்டு காக்கா கலேல்கர் என்பவர் தலைமையில் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டு, 1955 ஆம் வருடம் அந்தக் கமிஷன் தன்னுடைய அறிக்கையை மத்திய அரசாங்கத்திலே சமர்ப்பித்தது. ஆனால்

1993 நவம்பர் 9] [திரு. இளம்வழுதி]

நான் வேதனையோடு சொல்கிறேன். ஏறத்தாழ 24 வருடங்கள் கோல்ட் ஸ்டோரேஜில் போட்டு வைத்திருந்தார்கள். அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதன்பிறகு 1979 ஆம் ஆண்டு நம்முடைய மரியாதைக்குரிய முன்னாள் பாரதப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களுடைய காலத்தில் டி.பி. மண்டல் அவர்களைத் தலைவராகக் கொண்டு மண்டல் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு இரண்டாண்டுக்காலம் இந்தியா முழுவதும் சுற்றிப்பார்த்து, அலசி ஆராய்ந்து தன்னுடைய அறிக்கையை மத்திய அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தது. குழுவை நியமித்தவர் மொரார்ஜி தேசாய். அந்தக் குழு தன்னுடைய அறிக்கையை சமர்ப்பிக்கிற நேரத்தில் மொரார்ஜி தேசாய் அவர்கள் பதவியில் இல்லை. அன்னை இந்திரா காந்தி பதவிக்கு வந்தார். அதன் பிறகு அவருடைய மகன், திருவாளர், மரியாதைக்குரிய ராஜிவ் காந்தி அவர்கள் பதவிக்கு வந்தார். ஆனால் யாரும் அந்த அறிக்கையை புரட்டிக்கூடப் பார்க்கவில்லை. தட்டிக்கூடப் பார்க்கவில்லை. தூசு தட்டிக்கூடப்பார்க்கவில்லை. ஆனால் அதன் பிறகு ஆட்சி மாற்றம் நிகழ்ந்தபோது தேசிய முன்னணி அரசு அங்கே ஆட்சிப்பொறுப்பை ஏற்றபோது, மரியாதைக்குரிய வி.பி.சிங். அவர்கள் பிரதமராக வந்தார். அந்த நேரத்தில் இங்கே திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இருந்தது. எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். மண்டல் குழு அறிக்கையை, பரிந்துரையை நிறைவேற்றவேண்டுமென்று சொல்லி, இதே மாமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தோம். அதன்பிறகு அந்த மண்டல் குழுவினுடைய பரிந்துரையை அமல் செய்வோம் என்று உத்தரவு போட்ட வி.பி.சிங். அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், பாராட்டு தெரிவித்தும் இந்த மாமன்றத்தின் மூலமாக நாங்கள் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி இருக்கிறோம்.

இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இன்றைக்கு உச்ச நீதிமன்றம் தேவையில்லாமல் மாநில அரசாங்கத்தினுடைய அதிகாரத்தில் தலையிட்டு இருக்கிறது. நான் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) சட்டம் இயற்றுதல், சட்டத்தை செயல்படுத்துதல்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிதி இளம்வழுதி அவர்கள் இங்கே இரண்டொரு ஆண்டுகளாகப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். நான் அவரை குறுக்கிடுவதே இல்லை. ஒரே ஒரு முறைதான் குறுக்கிட்டு இருக்கிறேன். இப்போது இரண்டாவது முறை குறுக்கிடுகிறேன். இப்போது குறுக்கிடுவதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக்கழக அரசும், தேசிய முன்னணியும்

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[திரு. எஸ்.டி. சோமசுந்தரம்] [1993 நவம்பர் 9

மண்டல் குழுவினுடைய அறிக்கையை நாட்டுக்கு அறிமுகம் செய்து நடைமுறைப்படுத்தப்பட்டதாக ஒரு தவறான கருத்தை இங்கே சொல்லிக்கொண்டு இருக்கிறார். அதற்குப் பிறகுதான் மண்டல் அறிக்கையை முழுமையாக நிறைவேற்ற வேண்டும், முழுமையாக நிறைவேற்றுவது மட்டுமல்ல, அதிலே இட ஒதுக்கீட்டில் 50 சதவீதம் நிறைவேற்ற வேண்டுமென்று புரட்சித்தலைவி அவர்கள் இங்கே தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள்.

முற்பகல் 11.15

மண்டல் கமிஷன் அறிக்கை பற்றிச் சொல்கிறபோது ஒரு விளக்கத்தை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். வி.பி.சிங் அவர்கள் மண்டல் கமிஷன் பரிந்துரையை அமுல் செய்வதாக அறிவித்த தேதி 7-8-1990. அப்போது பிரதமராக இருந்த தேவிலால் அவர்களுக்கும், திரு. வி.பி.சிங் அவர்களுக்கும் மாறுபட்ட கருத்து வந்தபோது, டெல்லியிலே இருக்கிற. . . (குறுக்கீடு) துணைப் பிரதமர். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான விளக்கத்தைத் தாங்கள் பேசுகிறபோது சொல்லலாம்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : அன்றைக்கு 9-8-1990-லே ஒரு பேரணி வைத்திருந்தார்கள். திரு. வி.பி.சிங். அவர்கள் அரசியல் வாழ்வில் தன்னுடைய செல்வாக்கை நாட்டிக்கொள்வதற்காகத்தான் அன்றைக்கு இதைச் செய்தார்களே ஒழிய வேறில்லை. மேலும் அரசியல் சட்டம் 340 பிரிவின்படி நியமிக்கப்பட்டது இந்த மண்டல் கமிஷன். அது பரிந்துரை அல்ல, அறிக்கை. அந்த அறிக்கையில் அவர்கள் சொல்லியிருப்பது, கல்வி நிலையங்களில் இது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அது மட்டுமல்ல, மாநில அரசு இதை ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் பாதகம் இல்லை. அதுமட்டுமல்ல, வேலைகளிலேகூட, ஆராய்ச்சி நிறுவனம், ராணுவம் போன்றவற்றில் எல்லாம் இது தேவையில்லை என்று அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். சொன்னது மட்டுமல்ல, அதை அப்படியே ஏற்றுக்கொண்டு, இங்கே வெற்றி விழா எல்லாம் கொண்டாடினார்கள். எனக்கு வேதனையாக இருந்தது, வெற்றி விழாவைக் கொண்டாடியபோது ஒன்றை உங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றால், மண்டல் கமிஷனுடைய அறிக்கையில் 27 சதவீதம் என்று சொன்னதற்கு-மண்டல் அவர்கள் சொல்கிறார்கள், இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டம் பூராவும் 52 சதவீதம் பேர்கள் இருக்கிறார்கள், ஆனால் 52 சதவீதம் என்று சொல்லாமல், நான் 27 சதவீதம் என்று ஏன் சொல்கிறேன் என்றால், மற்ற மாநிலங்களில் இவைகள் எல்லாம் அதிகமாக இருந்தாலும், அதைப் பின்பற்றலாம் என்பதை அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் பேசுகிறபோது, விரிவான

விளக்கத்தைச்சொல்லலாம். அரசியல் நெருக்கடி காரணமாகக் கொண்டு வந்தார்கள் என்பது வேண்டுமானால் இருக்கலாம். அடுத்து தாங்கள் தான் பேசுகிறீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.டி.. சோமசுந்தரம் : மண்டலின் சிபாரிசின்படி வேலையில் சேர்த்துக்கொள்ள, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கு அளிக்கும் வயது சலுகை முக்கியமானது. மண்டல அறிக்கையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படுகிற வயது சலுகை, பிற்பட்ட சமுதாயத்தினருக்கும் தரவேண்டும் என்று சொன்னார்கள். இதை வி.பி.சிங் ஏற்றுக்கொண்டார, அல்லது உங்களுடைய தலைவர் கருணாநிதி ஏற்றுக்கொண்டாரா?

அதுமட்டுமல்ல, எல்லாக் கல்வி நிலையங்களிலும் இல்லை என்று சொன்னதை உங்கள் தலைவர் ஏற்றுக்கொண்டாரா? அதுமட்டுமல்ல, அரசாங்கத்திலிருந்து நிதி உதவி பெறும் எல்லாத் தனித் துறைகளிலும் இருக்கவேண்டும் என்று சொன்னார்களே, இதை வி.பி. சிங் ஏற்றுக்கொண்டாரா, கருணாநிதி ஏற்றுக்கொண்டாரா? மாநில அரசு, மத்திய அரசுசின் கீழ் உள்ள எல்லாக் கல்வி நிலையங்களும்–மாநில அரசின், மத்திய அரசின் நிதி உதவி பெறுகிற கல்வி நிலையங்களிலும்– பல்கலைக்கழகங்களிலும், இட ஒதுக்கீடு வேண்டும் என்று, மண்டல் அவர்கள் பரிந்துரை செய்தார்களே, அதை வி.பி.சிங் ஏற்றுக்கொண்டாரா, கருணாநிதி ஏற்றுக்கொண்டாரா? நிலச் சீர்திருத்தச் சட்டத்திலே அவர்களுக்கும் நிலம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்களே அதை ஏற்றுக்கொண்டாரா? அதுமட்டுமல்ல, பேக்வார்ட் கிளாஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் ஒன்றை மத்திய அரசு நியமிக்கவேண்டும், மாநில அரசும் நியமிக்கவேண்டும், இதை ஏற்றுக்கொண்டாரா? எதையுமே செய்யாமல், அப்போது வந்தவுடன் ஏதோ சிலவற்றைச் சொல்லிவிட்டு, இன்றைக்குச் செய்தோம், செய்தோம் என்று சொன்னால், நான் உங்களுக்குச் சொல்வேன், மண்டல் கமிஷனுடைய சிபாரிசில் 5 சதவீதத்தைக் கூட, வி.பி. சிங் அவர்கள் சிபாரிசு செய்யவில்லை.

அதுமட்டமல்ல, 5 சதவீதம் சிபாரிசு செய்ததை வைத்துக்கொண்டு, பூராவையும் சிபாரிசு செய்தார்கள் என்று கலைஞர் கருணாநிதி அவர்கள் சொல்வது இந்த நாட்டு மக்களைத் தவறான திசையில் கொண்டு போவதாகும்.

அதுமட்டுமல்ல, பின்னால் இருக்கிற மக்கள் 50, 60 ஆண்டுகளாக, 100 ஆண்டுகளாக, பின்னால் இருக்கிற மக்கள் வி.பி.சிங்கினுடைய சிபாரிசு மட்டும் வைத்துக் கொண்டு, முன்னேற்ற முடியும் என்று சொல்வதற்குதான் வேதனையோடு சொல்ல விரும்புகிறேன்.

நீங்கள் சொன்னது காளை மாட்டில் பாலை பீய்ச்ச முடியும் என்று

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[திரு. எஸ்.டி. சோமசுந்தரம்] [1993 நவம்பர் 9

சொல்வதற்கு ஒப்பாகும்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளை மாட்டிலிருந்து பாலை பீய்ச்ச முடியாது என்று சொல்வதற்கு இவ்வளவு சிரமப்பட்டுச் சொல்லியிருக்கிறார்கள். நான் சொன்னதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளை மாட்டிலே பாலை கறக்கமுடியாது என்பதை இவ்வளவு சிரமப்பட்டுச் சொல்லியும் உங்களுக்குப் புரியவில்லை என்பது தான் கருத்து.

முற்பகல் 11-30

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை நீங்கள் சரியாகப் புரிந்துக்கொள்ளவில்லை என்பதற்குத்தான் சொன்னதை மீண்டும் எழுந்து நிற்கிறேன். நான் சொல்ல வந்தது, 10 ஆண்டுகளுக்கு மேலாக கிடப்பில் போட்டுக் கிடந்த ஒரு அறிக்கையை தூசி தட்டி எடுத்து. . .(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு.தாமரைக்கனி, உட்காரவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் மண்டலுடைய அறிக்கையை வி.பி. சிங் அரசு கொண்டுவந்து அறிவித்தும், அதை நடைமுறைப்படுத்தவும் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டுமென்று தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் மண்டல் கமிஷனுடைய அறிக்கையை முழுமையாக-அவர்கள் சொன்ன வார்த்தைகளை பிறகு படித்துக் காண்பிக்கிறேன். ஒன்று விடாமல் முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென்று சொல்வது ஒன்று. ஆனால் தேவைப்படுகின்ற இடங்களில் 50 சதவீதம்-27 சதவீதம் என்று இருப்பதை 50 சதவீதம் நிறைவேற்ற வேண்டுமென்று தீர்மானம் போட்டு நிறைவேற்றியிருக்கிறோம்.

அது மட்டுமல்ல. இதைச் சொல்லிச் சொல்லி, திரும்ப திரும்ப இல்லை என்று சொன்னால், நான் என்ன சொல்ல வருகிறேன் என்று சொன்னால் காளை மாட்டில் பாலை பீய்ச்சுவதற்கு கயிரையும் துண்டையும் எடுத்துக்கொண்டு போவதற்குத் தயாராக இருப்பது போல் தோன்றுகிறது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாமரைக்கனி உட்காரவேண்டும். அனுமதி இல்லை. (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்

1993 நவம்பர் 9]

சொல்லியதை இன்னும் சரியாகப் புரிந்துக்கொள்ளவில்லை. 10 ஆண்டுகளாகக் கிடப்பில் கிடந்த ஒரு அறிக்கையை எடுத்து தூசு தட்டி, அதில் 27 சதவீதம் ஒதுக்கியதைக் குறைவு என்று சொல்லி . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.*

திரு. எஸ். டேனியல்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் ஆரம்பத்திலிருந்தே அரசியல் லாபம் தேட வேண்டுமென்ற நோக்கத்தோடு பேசிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஆரம்பத்தில், பேசுகின்றவர்கள் தேவையில்லாமல் பேச வேண்டாம் என்று சொன்னீர்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் இட ஒதுக்கீடு தீர்மானத்தை ஒரு மனதாக நிறைவேற்றவேண்டுமென்று ஆரம்பத்திலிருந்து சொல்லிக்கொண்டிருக்கிறபோது அரசியல் லாபத்திற்காக இடையில் வி.பி.சிங் அரசுதான் இட ஒதுக்கீட்டிற்குக் காரணம் என்று சொல்வது நலம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *வி.பி. சிங் செய்தார் என்ற செய்தியைச் சொல்வதில் தவறில்லை. இது விவாதப் பொருளாகப் போய்க்கொண்டே இருக்கக்கூடாது என்று நான் முதலிலே சொன்னேன். இவ்வளவு விவாதம் நடந்தது. இங்கே கருத்து மோதல் இருந்தது என்று வருகிறபோது இந்தத் தீர்மானத்தின் மீது அவ்வளவு வாதப் பிரதிவாதங்கள் இருந்திருக்கின்றன என்பதுதான் வெளியே தெரியும். எனவே அது வேண்டாம், விரிவாகப் போக வேண்டாம் என்று சொன்னேன். திரு போளூர் வரதன்.*

திரு. போளூர் வரதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது அதனுடைய முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் உரிமைகள் தந்தார்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 10 ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சியில் பிரதமராக இருந்தவர்கள் அதைக் கிடப்பிலே போட்டார்கள் என்று சொன்னார்கள். வேதனையுடன் ஒரு கருத்தைச் சொல்லவிரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபோது தாழ்த்தப்பட்டவர்கள் கிளாஸ் 1 ஆபிசர்-குரூப் 1 ஐ.ஏ.எஸ். அதாவது .. . . (குறுக்கீடு).*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *காங்கிரஸ் கட்சி 10 ஆண்டுக்காலம் கிடப்பில் போட்டது என்று சொன்னதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். வாதப்பிரதிவாதங்கள் போய்க்கொண்டேயிருக்கும். நான் அவருக்குச் சொன்னதைத்தான் உங்களுக்கும் சொல்கிறேன். தவறான வாதம் என்பதற்கு ஒரு கருத்தை மட்டும் சொல்லுங்கள்.*

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[1993 நவம்பர் 9

திரு. இளம்வழுதி: நான் சொல்ல வந்தது என்னவென்றால், அவருடைய கட்சியைச் சார்ந்தவர்கள் பேசும்போது பதில் சொல்லட்டும், நேரமாகிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறார். (குறுக்கீடு) நான் கேட்டுக் கொள்கிறேன். அமருங்கள். திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன்: பேரவைத் தலைவர் அவர்களே, எம்.ஜி.ஆர். ஆட்சி கலைக்கப்பட்டது என்று சொன்னார்கள். அதற்குப் பின்னாலே வந்த கவர்னர் ஆட்சியிலே 90 இடங்கள் காலியாக இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டு, ஆண்டுக்கு 10 பேர்கள் நியமனம் செய்கிறோம் என்று தமிழக அரசு சொன்னது. அதற்குப் பின்னாலே ஆட்சிக்கு வந்த திரு. கருணாநிதி அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திலே தடை வாங்கினார். இன்றைய முதலமைச்சர் மரியாதைக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1991ஆம் ஆண்டு–அது இந்தப் பேரவையிலே இருந்த அனைவருக்கும் தெரியும். 10 தாழ்த்தப்பட்டவர்களை அந்த பேக்-லாக் சிஸ்டத்தின் மூலம் நியமனம் செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி இருக்கிறபோது தி. மு. க. ஆட்சியில் இருந்தபோது கருணாநிதி செய்த ஒரு சாதனை எஸ். டி. இன மக்களுக்கு 1 பெர்சன்ட் மட்டும் கொடுத்திருக்கிறார்கள். மற்றவை அனைத்தும் புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். காலத்தில் கொண்டு வரப்பட்ட ஒதுக்கீடுகள் தானே தவிர தி. மு. க. ஆட்சியில் கொண்டு வரப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி இருக்கிறபோது காங்கிரஸ் பிரதமர்கள் மண்டல் கமிஷன் ரிப்போர்ட்டை குப்பையிலே போட்டார்கள். போட்டார்கள் என்று சொல்லிவருகிறபோது, 69 சதவீதத்தை குறைக்க வேண்டும் என்று நினைக்கிறார்களா, 69 சதவீதம் என்று தமிழகத்திலே கொண்டு வந்த புரட்சித் தலைவியின் அரசு செய்த சாதனையை மறைப்பதற்காக இப்படிச் சொல்லுகிறார்களா என்று தெரியவில்லை. அன்றைக்கு இருந்த பிரதமர்கள் அதை எடுத்திருப்பார்களேயானால் மக்கள் மத்தியிலே பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கும். ஆகவே இருக்கிற ஒதுக்கீடுகள் அப்படியே இருக்கட்டும் என்ற நல்ல எண்ணத்தோடு தான் அன்றைய பிரதமர்கள் அதைக் கையாண்டிருக்கிறார்கள். மக்கள் மத்தியிலே குழப்பம் உண்டாக்க வேண்டும் என்பதற்காக கருணாநிதியும் வி.பி. சிங்கும் சேர்ந்து செய்த நாடகத்தை இங்கே பேசி இந்த அவையினுடைய நேரத்தை வீண் அடிக்கவேண்டாம் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டல் கமிஷன் ரிப்போர்ட்டே இந்திரா காந்தி இல்லாவிட்டால் வந்திருக்காது என்று திரு. மண்டல் அவர்கள் அன்றைய ஜனாதிபதி சஞ்சீவி ரெட்டிக்கு எழுதிய ஒரு கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தின் ஐந்தாவது பத்தியில் "..It may be mentioned that

1993 நவம்பர் 9] [திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்]

although this Commission was appointed by the previous Janata Government, Shrimathi Indira Gandhi's Government not only gave two extensions but extended all support and co-operation in the discharge of our work. This clearly shows her devotion and commitment to the cause of the suppressed, depressed and the oppressed." *என்று மண்டல் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். எனவே மண்டல் கமிஷன் பரிந்துரைக்கு இந்திரா காந்தியும், காங்கிரசும்தான் காரணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).*

திரு. இளம்வழுதி : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டல் கமிஷன் பரிந்துரைக்கு காங்கிரஸ் கட்சி தான் காரணம் என்று.. . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஜி. பழனிசாமி.*

திரு. ஜி. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டல் கமிஷன் அமைப்பதற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது. அதை அமல் படுத்துவதிலும் சம்பந்தமே கிடையாது. இந்த அவையிலே அது குறித்துப் பேசப்பட்டபோது-100 ஆண்டு காலம் காங்கிரஸ் கட்சி மத்தியிலே ஆட்சியிலே இருந்தது. . . . (மணியடிக்கப் பெற்றது).*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *இது பாயின்ட் ஆப் ஆர்டராக வராது. இதில் அரசியல் பேசுவதற்காக பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்பது சரியல்ல. இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை (குறுக்கீடுகள்) திரு. பரிதி உட்காருங்கள் (குறுக்கீடு).*

திரு. இளம்வழுதி : *வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்..*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் சொன்னது வேறு. (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டார்கள். நான் அனுமதி கொடுத்தேன். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அரசு அமல் படுத்தியதா என்று கேட்டார்கள். அந்த அரசு அமல்படுத்தவில்லை என்றுதான் சொல்கிறேன். இன்னும் சொல்லப்போனால் விதையைப் போட்டு மொட்டு வரும்போது அதை கிள்ளிவிட்டு மொட்டு மலரவில்லை என்று சொல்வது போல, அதே போல குழந்தை பிறந்த பிறகு, பிறந்த குழந்தையைக் கொன்று விட்டு, குழந்தை திருமணத்திற்கு நாள் பார்ப்பதுபோல இருக்கிறது. ஆனால் இந்த மண்டல் கமிஷனுடைய அறிக்கை குறித்து 5 சதவீதம் அல்ல 2½ சதவீதம் தான் திரு. வி.பி. சிங் சொன்னார்களே தவிர, அந்த மண்டல் கமிஷனுடைய சிபாரிசைக்கொண்டு வந்து நிறைவேற்றவில்லை என்பதைத்தான் என்னுடைய தாழ்மையான கருத்தாகச் சொல்லுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, தங்களுடைய வேண்டுகோளாகச் சொன்னார்கள். இதை அரசியல் விவாதத்திற்கும் கட்சி விவாதத்திற்கும் கொண்டு சென்றால் நம்முடைய*

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[பேரவைத் தலைவர்] [*1993 நவம்பர் 9*

நோக்கம் திசை மாறிச் சென்று கொண்டிருப்பது போல் ஆகும். எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும். பரிதியும் ஒத்துழைக்க வேண்டும். இந்தப் பிரச்சினையை எல்லாம் விட்டுவிட்டு இப்போது இந்தத் தீர்மானத்தின் மீது உங்களுடைய ஆதரவைத் தெரிவியுங்கள் போதும்.

முற்பகல் 11.30

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டல் கமிஷன் வந்ததற்குக் காரணமே காங்கிரஸ் கட்சிதான் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார். *(கூச்சல்--குழப்பம்).*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மண்டல் கமிஷனை நியமித்தது இந்திரா காந்தி அம்மையார் அவர்களுடைய அரசாங்கம்தான் என்பது உண்மை. அதில் ஒன்றும் பெரிய விவாதத்திற்குப் போக வேண்டாம். விவாதத்திற்குப் போகாமல் முடியுங்கள்.

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் குறுக்கிட்டு அவரவர்களுடைய பிரச்சினைகளை வளர்த்துக்கொண்டே போகாமல்-ஏற்கனவே இருக்கின்ற உரிமையே போதாது என்று இருக்கின்றபோது, இருக்கின்ற உரிமையையும் பறிக்கின்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் மீது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் நான் ஒரே ஒரு கருத்தை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சட்டம் இயற்றுதல், செயல்படுத்துதல், நீதி நிர்வாகம் எல்லாம் தனித்தனி அமைப்புகள், ஒன்றின் மீது ஒன்று அதிகாரம் செலுத்த முடியாது, இட ஒதுக்கீடு, மக்களுக்குச் சலுகை வழங்குவது என்பது அரசாங்கத்தினுடைய பிரச்சினை. இதிலே நீதிமன்றம் தலையிட்டுத் தீர்ப்பு வழங்க முடியாது. இந்தத் தீர்ப்பே நிரந்தரமான தீர்ப்பு அல்ல. தீர்ப்புகள் திருத்தப்படலாம். ஏற்கனவே திருத்தப்பட்டிருக்கிறது. 1963 ஆம் ஆண்டு மைசூர் மாநில அரசாங்கத்தின் மீது பாலாஜி என்ற ஒருவர் இதே போல ஒரு வழக்குத் தொடர்ந்தார். அந்த வழக்கிலும் அவர் அதைத்தான் குறிப்பிட்டார். அரசியல் சட்டம் வழங்கியிருக்கின்ற அடிப்படை உரிமைகளுக்கு முரணானது என்று சொன்னார். அப்போது அந்த நீதிமன்றம் அவருடைய கருத்தை ஏற்று இட ஒதுக்கீட்டுக்கு எதிராகத் தீர்ப்பளித்தது. ஆனால் அதே கர்நாடக மாநிலத்தில் 1985 ஆம் ஆண்டு வசந்த குமார் என்பவர் இதே போன்ற ஒரு வழக்கைத் தொடுத்தபோது அன்றைக்கு நீதிமன்றம் அரசியல் சட்டத்திற்கு முரணாக ஆகாது என்று தெளிவாகத் தீர்ப்பு அளித்திருக்கிறது. அதுமட்டமல்ல, 15 உட்பிரிவு 4-லும், 16 உட்பிரிவு 4-லும் குறிப்பிட்டு இருப்பது என்னவென்றால் ஒரு அரசாங்கம், பிரதிநிதித்துவம் போதிய அளவுக்கு இல்லை என்று கருதுமேயானால், அவர்கள் வழங்கிக்கொள்ளலாம் என்று அந்தச் சட்டப் பிரிவு வழி வகுக்குகிறது. ஆகவே அரசியல் சட்டத்தின் மீது தன்னுடைய அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் புகுத்துவது* நமக்கு ஏற்புடையது அல்ல என்பதை

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

1993 நவம்பர் 9] [திரு. இளம்வழுதி]

எடுத்துக்கூறி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை பேரவை முழு மனதோடு நிறைவேற்றுகின்ற வகையிலே எங்களுடைய ஆதரவையும் தெரிவித்து, இந்தப் பேரவைத் தீர்மானத்தை உடனடியாக மத்திய அரசாங்கம் ஏற்று அரசியல் சட்டத்திலே திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும்; இதற்காக இந்த அரசாங்கம் மேற்கொள்கின்ற அனைத்து முடிவுகளுக்கும் நாங்களும் துணையாக இருப்போம் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பரிதி இளம்வழுதி பேசுகின்ற போது உச்ச நீதிமன்றம் தெரிவித்திருக்கின்ற தீர்ப்பு ** என்ற ஒரு கருத்து வருகிறது. பேரவையில் அப்படிப்பட்ட ஒரு கருத்து பேசப்பட்டதாக வருவது சரியல்ல. அந்த ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பின்னாலே தள்ளப்பட்ட மக்களுக்கு ஏற்படுகிற அநீதியிலிருந்து அவர்களைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காக தமிழக முதல்வர் அவர்கள்... (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற வார்த்தை இருக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறீர்கள். உச்ச நீதிமன்றம் தீர்ப்பு ** என்று இங்கே தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானத்திலே அப்படி ஒன்றும் சொல்லவில்லை. அதைப்பற்றி ஒன்றும்.....

திரு. ச. இராமச்சந்திரன்: ஜட்ஜைப் பற்றித்தான் சொல்லக்கூடாது. ஜட்ஜ்மெண்ட் பற்றி நாம் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த ஜட்ஜ்மெண்ட் ** என்று சொல்கின்றபோது, அது ஜட்ஜைப் பற்றியும் வருகிறது.

Thiru S. RAMACHANDRAN: Judges' conduct only cannot be criticised..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கான்டக்ட் என்று வரும்போது அவர் சொன்ன தீர்ப்பும் அதிலே வருகிறது. கான்டக்ட் என்பது அவருடைய பெர்ஸனல் கான்டக்டைப் பற்றி நாம் பேசுவதல்ல. இப்படிச் சொல்லிருக்கிறார்கள், அது நமக்கு இப்போது ஏற்புடையதாக இல்லை. எனவே வேறு வகையில் இருக்கலாம் என்று அந்த மாதிரி இருக்கலாமே தவிர....

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்புடையதாக அல்ல என்று மாற்றிக்கொள்ளவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி ** என்பதை *நமக்கு ஏற்புடையது அல்ல என்று வேண்டுமானலும் மாற்றிக்கொள்ளலாம். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[1993 நவம்பர் 9

முற்பகல் 11.35

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து இங்கே நிறைவேற்ற வேண்டும் என்று அவையின் முன்னே வைத்திருக்கிறார்கள். இந்த அவைக்கு வருவதற்கு முன்னால் அவர்கள் குறிப்பிடுகிறபடி அமைச்சரவையைக் கூட்டி இதைப்பற்றி விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு அமைச்சரவையில் அவர்களுடைய கருத்துக்களை எல்லாம் தெரிவித்து அமைச்சர்களை எல்லாம் பார்த்து உங்களுடைய கருத்துக்கள் என்னவென்று கேட்டார்கள். அப்போது என்னையும் கேட்டார்கள். நான் பதில் சொல்ல முடியாமல் இருந்தேன் என்றால் அவர்கள் கொண்டு வந்து சொல்கிற அந்தக் கருத்துக்கள் எல்லாம், பின்னால் தள்ளப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு கொண்டு வந்து இருப்பது என்பது வெட்டி எடுக்கப்பட்ட ஒரு வைரம். தியாகராயர் அவர்களால் வெட்டி எடுக்கப்பட்ட வைரம். ஆனால் அமைச்சரவையில் கொண்டு வந்து அவர் சொல்லி எங்களுடைய கருத்துக்களை எல்லாம் கேட்கிறபோது நான் கருத்து சொல்ல முடியாமல் இருந்தேன் என்றால் தியாகராயருடைய எண்ணங்களையும் கருத்துக்களையும் புரட்சித் தலைவி உருவத்தில் இன்றைக்கு நான் தியாகராயரைப்பார்த்தேன். அன்றைக்கு தியாகராயர் என்ன கொண்டு வந்தார்களோ; அவர்கள் வெட்டி எடுத்த வைரம்தான் இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகக் கொண்டு வந்தது; அந்த வைரத்திற்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்குப் பட்டைத் தீட்டிக்கொண்டிருக்கிறார்கள். பட்டைத் தீட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிற அதே நேரத்தில் இன்றைக்கு இதையெல்லாம் அரசியல் சட்டத்தில் கொண்டு வந்து அதில் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று இங்கே சொன்னார்கள். அப்படிக் கொண்டு வரவேண்டுமென்று சொல்லுகிறபோது பழைய வரலாறுகளையெல்லாம் சொன்னார்கள். பழைய வரலாறுகளைச் சொல்லுகிறபோது ஒன்றைச் சொல்லவேண்டுமென்றால், இட ஒதுக்கீடு கல்வி நிலையங்களில் செல்லாது என்று உச்ச நீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் சொல்லுகிறபோது அன்றைக்குத் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் போராடினார்கள் என்று சொன்னார்கள். அன்றைக்குப் போராடுகிறபோது உங்களில் 65 பேருக்கு ஞாபகம் இருக்கும், 50 பேருக்கு ஞாபகம் இருக்காது. ஆயிரக்கணக்கானவர்கள் சிறைச் சாலைக்குச் சென்றார்கள். பள்ளி மாணவர்கள் வெளியே வந்து விட்டார்கள். பள்ளி மாணவர்கள் வெளியே வந்துவிட்டார்கள் என்று சொல்லுவதைவிட பள்ளி மாணவர்களாகிய நாங்கள் எல்லாம் வெளியே வந்து விட்டோம் என்று சொன்னார்கள். ஆனால் அன்றைக்கு ஒரு போராட்டமே நடைபெற்றது. அந்தப்

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

போராட்டத்திற்குப் பிறகு மத்திய அரசு அதை நடைமுறைப்படுத்தி அரசியல் சட்டத்தில் திருத்தத்தைக்கொண்டு வந்தது. ஆனால் இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கிற மக்கள், பின் தங்கியிருக்கிற மக்களுக்கு இது செல்லாது, 69 சதவீதம் இல்லை. 50 சதவீதம் என்று சொன்னால் ஏன் போராடாமல் அமைதியாக இருக்கிறார்கள் என்றால்- போராடினால் தான் வரும் என்று அன்றைக்கு இருந்த திராவிட இயக்க அரசு போராடியது. ஆனால் இன்றைக்கு இருக்கிற அரசு திராவிட இயக்கத்தினுடைய அரசு. அதன் முதலமைச்சராக இருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எப்படியும் 69 சதவீதத்தைக் கொண்டு வந்து விடுவார்கள், அதற்காகப் போராடுவார்கள், அதை நிலைநாட்டுவார்கள் என்ற எண்ணத்தில்தான் தமிழ்நாட்டு மக்கள் அமைதியாக இருக்கிறார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் அமைதியாக இருக்கிறார்கள் என்பதனாலேயே, நான் மையப் பேரரசுக்குத் தெரிவித்துக்கொள்வேன், இதில் ஏதோ அரசியல் சட்டத் திருத்தம் தேவையில்லாத ஒன்று என்று கருதிவிடக்கூடாது என்பதை நான் இந்த அவையின் மூலமாக மத்திய அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்றைக்கு அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று சட்டப்பேரவையில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் குரல் கொடுத்து இருக்கிறார்கள். குரல் கொடுத்தால் மட்டும் போதாது என்று போர் முரசும்- ஒரு நாள் பொது கடை அடைப்பு, பந்த் என்பதையும் இன்றைக்கு முதல் கட்டப் போர் முரசாக அறிவித்திருக்கிறார்கள் என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இது முதல் போர் முரசாக இருக்கட்டும். தொடராமல் இருக்கவேண்டும் என்றால் மத்தியப் பேரரசுதான் அதற்கு உதவி செய்யவேண்டும். மத்தியப் பேரரசுதான் அதற்கு வழி செய்யவேண்டும். ஆகவே, இது தொடர் போராட்டமாக ஆகாமல் தமிழ்நாட்டு மக்களுடைய எண்ணங்களை அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11.40

இங்கே பலர் சொல்கிறபொழுது, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு சாதாரணமாக இதை விட்டுவிட்டது; இதற்கு முயற்சி செய்யவில்லை. வஞ்சகம் என்றெல்லாம் பலவற்றை இங்கே சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள் ஆனால் இந்த 9 ஜட்ஜுகளில் நீதிபதி திரு. ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் சொல்கிறபொழுது அவர்கள் மிகத் தெளிவாக ஒன்றைச்சொல்லியிருக்கிறார்கள்.

"The State of Tamil Nadu Counsel referred to the speech of the Chief Minister of Tamil Nadu in the Chief Minister'. conference held on the 10th April 1992 and produced a copy of the printed speech of the Chief Minister issued by the Government of Tamil Nadu

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1993 நவம்பர் 9

in an Annexure. It is seen from the said Annexure that the Chief Minister has categorically emphasised the stand of the Government of Tamil Nadu stating that the total reservation for the Backward Classes, Scheduled Castes and Scheduled Tribes is 69% and that it is but fair and proper that the socially and educationally backward classes. . . . . .

என்று இதற்காகப் போராடிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை, இதை விட மாட்டார்கள் என்பதை அந்த ஜட்ஜுகளில் ஒருவரான நீதிபதி திரு. ரத்தினவேல்பாண்டியன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகையினால், இதற்காக நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எந்த அளவுக்கு இதிலே விடாமல் இருப்பார்கள் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று சொல்லுகிறபொழுது, 9 ஜட்ஜுகள் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள், 9 ஜட்ஜுகள் சொன்னாலும், அதிலே எந்த ஜட்ஜும், எந்த இடத்திலும் அரசியச் சட்டத்தில் 50 சதவீதத்திற்கு மேலே போகக்கூடாது என்றோ, இந்த விதிப்படி இருக்கிறது என்றோ யாரும் சொல்லவில்லை. இந்தச் சாப்டரில் என்று சுட்டிக் காண்பிக்கவில்லை. ஒவ்வொரு சாப்டருக்கும் அவர்களாகவே இன்டர்பிரடேஷன், அவர்களாகவே அதற்கு ஆலோசனை சொல்லி, அந்தந்தக் காரணத்தினாலேதான் 50 சதவீதத்திற்கு மேல் போகாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 50 விழுக்காடுக்கு மேல் இருக்கலாம் என்று சொல்லுகிற பொழுது, இதிலே சொல்லுகிறார்கள், நீதிபதி திரு. சாவண்ட் அவர்கள், இட ஒதுக்கீடு இயல்புகளை, in an extraordinary case, அவர்கள் சொல்கிறபொழுது எக்ஸ்ட்ரார்டினரி கேஸ் வந்தால் 50 சதவீதத்திற்கு மேலே போகலாம் என்று, இந்தத் தீர்ப்பில் பக்கம் 486-இல் சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோலத்தான் வேறு ஒரு நீதிபதி சொல்கிறபொழுது, நீதிபதி திரு. சிவன்ரெட்டி அவர்களும், நீதிபதி திரு. எம்.எம். கன்னியா அவர்களும், நீதிபதி திரு. எம்.என். வெங்கட செல்லையா அவர்களும் சொல்கிறபொழுது, பக்கம் 670-இல் சொல்கிறார்கள், இட ஒதுக்கீடு செய்வதில் இந்த நாட்டிலுள்ள மக்கள், மாறுபட்ட வாழ்க்கைத் தரத்தில், அடிப்படையில் இயல்பு கடந்த சூழ்நிலையில், in an extraordinary case, 50 சதவீதத்திற்கு மேலே போகலாம் என்று இவர்கள் சொல்லி இருக்கிறார்கள், அப்படி இருக்கிற 9 நீதிபதிகளில், 5 நீதிபதிகள், எக்ஸ்ட்ரார்டினரி கேஸ் வருகிறபொழுது அதிலே அதிகமான இடங்களிலே போகலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல, மேகாலயாவிலே என்று வருகிறபொழுது, இன்றைக்கு 90 சதவீதம் தந்திருக்கிறார்கள். 90 சதவீதம் என்று வருகிறபொழுது in an extraordinary case, என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல

1993 நவம்பர் 9] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

எக்ஸ்ட்ரார்டினரி கேஸ் இன்றைக்குத் தமிழ் நாட்டிலே இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டிலே இரண்டாவது பின்தங்கிய குழு அறிவிக்கிற பொழுது இன்றைக்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் பின்னாலே தள்ளப்பட்ட மக்கள் 3 கோடியே 35 லட்சத்து 70 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள், அதாவது 67 சதவீதம். அப்படி 67 சதவீதம் தமிழ்நாட்டிலே இருக்கிறபொழுது, இன்றைக்கு 67 சதவீதம் அதாவது எக்ஸ்ட்ரார்டினரி கேஸ், அதுமட்டுமல்ல, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் சொல்லியபடி, இது நீண்ட பலகாலமாக, 100 ஆண்டுகள் என்று சொன்னார்கள். இதை நடைமுறைப்படுத்தியது 1921-இல், 1921-இல் நடைமுறைப்படுத்தி, நீண்டகாலமாக தமிழ்நாட்டு மக்கள் அனுபவித்து வருகிறார்கள்.

முற்பகல் 11-45

அனுபவித்து வருகிறபோது பிறருடைய உரிமையை இன்றைக்குப் பின்னால் தள்ளப்பட்ட மக்கள் அனுபவிக்கவில்லை. பிறருடைய உரிமையை அனுபவித்தால் அதைப் பறிப்பது நியாயமாக இருக்கலாம். ஆனால் பின்னால் தள்ளப்பட்ட மக்களுக்கு எவ்வளவு உரிமையோ அந்த உரிமையை 67 சதவீத உரிமை என்கிறபோது 50 சதவீதம் தான் இன்றைக்கு அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். அப்படி 67 சதவீதம் இருக்கிறபோது 50 சதவீதம் தான் இன்றைக்கு அனுபவித்துக்கொண்டு இருக்கிறபோது அந்த உரிமையை அளிக்க, இன்றைக்குத் தமிழ்நாட்டையும் எக்ஸ்ட்ரா ஆர்டினரி கேஸ்-ஆக எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படி தமிழ்நாட்டை எக்ஸ்ட்ரா ஆர்டினரி கேஸ்-ஆக எடுத்துக் கொண்டாலும் பல்வேறு கட்டங்களில் பல்வேறு நேரங்களில் இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திற்குப் போகிறபோது அதற்குப் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. அப்படி பல்வேறு விளக்கங்கள் கொடுத்தாலும், இதை திருத்தக் கூடியதில் ஏற்றுக்கொள்ளப்படுவது என்பதற்கு இங்கே 9 நீதிபதிகளில் 5 நீதிபதிகள் 50 சதவீதத்திற்கு மேல் போகக்கூடாது என்று சொன்னாலும், எக்ஸ்ட்ரா ஆர்டினரி கேஸ்ஸில் 50 சதவீதத்திற்கு மேல் போகலாம் என்று அவர்கள் சொல்லுவதாலும் நீதிபதிகளுடைய எண்ணங்கள் அதற்கு சாதகமாக இருப்பதாலும், அப்படி இருந்தாலும் பல்வேறு இடங்களில் அதற்கு புதிய புதிய விளக்கங்கள் வருகிறபோது பின்னால் தள்ளப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போய் விடும். அப்படி பின்னால் தள்ளப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போகாமல் இருப்பதற்காக அரசியல் சட்டத்தில் தேவையான திருத்தத்தைச் செய்யவேண்டும்; அதைச் செய்வதற்காக இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்திற்கு ஏற்றவாறு மத்திய அரசு அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. கு. தமிழரசன்.

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[1993 நவம்பர் 9

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தை இன்று தமிழகத்திலே சமுதாயப் புரட்சியை சமத்துவப் புரட்சியாக ஆக்கிவிடுகிற அளவில் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த மாமன்றத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை மனப்பூர்வமாக வரவேற்று இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த இட ஒதுக்கீடு முறைக்கு ஒரு மிகப்பெரிய வரலாறு உண்டு. இந்தியாவில் சமஸ்தானங்களாகப் பிரித்து மன்னர்கள் கோலோச்சிக் கொண்டிருந்தபோது கோலாப்பூர் சமஸ்தானத்தில் அன்றைக்கு இருந்த ஒரு மன்னர் அவருடைய சமஸ்தானத்தில் இருந்த அமைச்சுப் பணிகளை ஜாதி வாரியாக ஒதுக்கித் தந்தார்கள் என்று அப்போதே சொல்வார்கள். அதற்குப் பிறகு இந்தியத் துணைக் கண்டத்தில் இட ஒதுக்கீடு முறைக்கு வித்திட்டது நம்முடைய இந்தச் சட்டப்பேரவை. இந்த மன்றத்திலே 1921-லேயே அத்தகைய ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அன்றைக்கு ஜஸ்டிஸ் கட்சியின் பெருந்தலைவராகவும் தாழ்த்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட ஆதி திராவிட மக்களின் பெருந்தலைவராகவும் விளங்கிய தாத்தா இரட்டை மலை சீனிவாசன் போன்றவர்கள்; பேராசிரியர் தந்தை சிவராஜ் போன்றவர்கள்; சுவாமி சகஜானந்தர் போன்றவர்கள் இவர்கள் எல்லாம் இந்தப் பேரவையில் இருந்து, ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக இருந்து அன்று அந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து இருக்கிறார்கள். பேரறிஞர் அம்பேத்கர், தந்தை பெரியார் ஆகியோர் எல்லாம் போராடி, போராடி ஒடுக்கப்பட்ட அடித்தளத்து மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய வாழ்வில் அரசியல், சமுதாய, பொருளாதார வளர்ச்சியைக் காண்பதற்காக பெற்றுத் தந்த இந்த இட ஒதுக்கீடு முறைக்கு இன்றைக்கு மேலும் மேலும் பங்கம் விளைந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது சமுதாய சமத்துவத்தில் அக்கறை கொண்டவர்கள் வேதனைப்படாமல் இருக்க முடியாது. 1921-க்கு பிறகு 1932-ல் புனா ஒப்பந்தம் விளைந்த போது புனா ஒப்பந்தத்தின் வழியாக சில அரிய உரிமைகளை பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள் ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வாங்கித் தந்தார்கள். அதற்குப் பிறகு 1935-ல் முதல் கவர்மெண்டு ஆப் இந்தியா ஆக்ட், நலிந்த மக்களுக்கு இட ஒதுக்கீடு என்பது வந்தது.

முற்பகல் 11.50

1942-இலேதான் எஸ்.ஸி., எஸ்.டி., மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்கு ஒரு முதல் ஆணையத்தை மத்திய அரசு உருவாக்கியது. 1950-இல் அது அரசியல் சட்டமாக ஆக்கப்பட்டு, 16, 17 போன்ற உட்பிரிவுகளெல்லாம் அதிலே அமைந்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசியல் சட்ட ரீதியான பாதுகாப்பு கிடைத்தது.

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [திரு. செ. கு. தமிழரசன்]

46-ஆவது பிரிவு அந்த மக்களின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கும் உத்தரவாதம் அளித்தது.

இப்படியெல்லாம் அரசியல் சட்டப் பிரிவுகளும், அதன் கோட்பாடுகளும் நலிந்த, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசியல் சட்ட ரீதியான பாதுகாப்பை வழங்கியது.

நான் குறிப்பாக, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் பிரச்சினைகளை இங்கே கொஞ்சம் கோடிட்டுக் காட்ட வேண்டுமென்று விரும்புகிறேன்.

இதுவரையில் பல இட ஒதுக்கீடுகள், பல அரசுகளிலே பின்பற்றப்பட்டபோது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு மட்டும் பிரச்சினைக்குரிய ஒன்றாகவே கருதப்படாமல் இருந்தது. அது ஒரு கேள்விக்கு இடம் இல்லாமலேயே இருந்தது. ஆனால் இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே வழங்கியிருக்கிற இந்தத் தீர்ப்பின் மூலம் இனி தாழ்த்தப்பட்ட மக்களுடைய இட ஒதுக்கீடு கூட ஒரு கேள்விக்குரியாக வந்து விடுகிற நிலைமை இன்றைக்கு எழுந்திருக்கிறது. ஏனென்றால், அவர்கள் மொத்தமாகச் சொல்கிறபொழுது, 50 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு மேலே கூடாது என்று சொல்கிறபொழுது, அந்த 50 சதவீதத்திற்குள்ளே தாழ்த்தீப்பட்ட மக்களின் இட ஒதுக்கீடும் வருவதனால், இதுவரையிலும் ஒரு பிரச்சினையாக, ஒரு கேள்வியாகவே இல்லாமல் இருந்த தாழ்த்தப்பட்ட மக்களின் இட ஒதுக்கீடு பிரச்சினையே இன்றைக்கு ஒரு கேள்விக்குறியாக எழுந்திருக்கிறது என்கிறபொழுது, அந்த ஆபத்தை எண்ணி எண்ணி ஒடுக்கப்பட்ட மக்கள் அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள், பயந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லா வகையிலும் கை தூக்கி விட்டு, வாழ்க்கைக்கு உத்தரவாதம் தந்து, மனிதர்களாகவே நடத்தியது இந்த அரசியல் சட்டப்பாதுகாப்பும். இந்த இட ஒதுக்கீட்டு முறையும்தான். அதற்கான ஒரு உத்தரவாதமின்மையும், பயமும் இன்றைக்கு விளைந்தபின்னாலே, ஒடுக்கப்பட்ட மக்கள் அஞ்சி, கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்கிற நிதர்சனமான உண்மையை இந்த மாமன்றத்திலே, இந்தச் சந்தர்ப்பத்திலே நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பாபா சாஹிப் அம்பேத்கார் அவர்கள் அரசியல் சட்டத்தின் சிற்பியாக இருந்து, இட ஒதுக்கீட்டின் பிதாமகராக விளங்கி, அவர் இந்த இட ஒதுக்கீட்டு முறைக்கு எளிய முறையிலே ஒரு விளக்கத்தைத் தந்தார்கள். அவர்கள் சொன்னார்கள், இந்த ஒதுக்கீடு பெரிய விஷயம் அல்ல; ஆயிரக்கணக்கான ஆண்டுக்களாக பல யுகங்களாக சில சமுதாயத்தினர்கள் கோயிலுக்கு உள்ளே வரக்கூடாது என்று ஒதுக்கி வைக்கப்பட்டார்கள்; கல்வி நிலையங்களுக்கு உள்ளே வரக்கூடாது என்று ஒதுக்கி வைக்கப்பட்டார்கள்; அலுவலகங்களுக்கு உள்ளே வரக்கூடாது என்று ஒதுக்கி வைக்கப்பட்டார்கள்; அமைச்சுப் பணிகளுக்கு உள்ளே வரக்கூடாது என்று ஒதுக்கி வைக்கப்பட்டார்கள்; எல்லாவகையிலும் ஒதுக்கிவைக்கப்பட்ட

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[திரு. செ. கு. தமிழரசன்] [1993 நவம்பர் 9

அந்த மக்களுக்கு, ஆண்டாண்டுக் காலமாக நசுக்கப்பட்டு, பழி வாங்கப்பட்ட அந்த மக்களுக்கு, அவர்களுக்கு ஏதாவது நாம் செய்ய வேண்டுமானால், அவர்களுக்கு நாம் இந்தப் பணிகளிலே ஒதுக்கீடு தர வேண்டும்; ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு தருவதன் மூலம்தான் உண்மையாக அந்த மக்களைக் கை தூக்கி விட வேண்டுமென்று மிக எளிமையாக, மிக மிக எளிமையாக அவர்கள் அந்த விளக்கத்தைத் தந்தார்கள். ஒதுக்கி வைத்த மக்களுக்கு, இவ்வளவு காலமாகத்தள்ளி வைக்கப்பட்ட மக்களுக்கு இவ்வளவு காலமாகப் புறக்கணித்து வைக்கப்பட்ட மக்களுக்கு நாம் ஒதுக்கீடு செய்துதான் அவர்களுக்கு உரிய பாதுகாப்பையும், நல்வாழ்வுக்கான உத்தரவாதத்தையும் தர முடியும் என்று அவர்கள் சொன்னார்கள்.

அந்த வகையிலேதான், மிக நீண்ட பாரம்பரியமான இந்த இட ஒதுக்கீட்டு முறையை இன்றைக்குப் பாதுகாக்கிற வகையிலே இந்த மாமன்றத்திலே நம்முடைய தமிழக முதல்வரவர்கள் ஒரு மிகப்பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன்.

நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். 1922-இலே இட ஒதுக்கீட்டு முறை வந்து இன்றைக்கு 1993 ஆம் ஆண்டிலே நாம் அடிபோட்டுக் கொண்டிருக்கிறோம். கடந்த 71 ஆண்டுகளிலே, 72 ஆண்டுகளிலே இந்த இட ஒதுக்கீட்டு முறையினாலே எவ்வளவு பெரிய பலன் விளைந்திருக்கிறது என்பதற்கு நான் தாழ்த்தப்பட்ட மக்களின் வளர்ச்சியை ஒரு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

72 ஆண்டுக்கால இட ஒதுக்கீடு முறைக்குப் பின்னாலே என்ன நடந்திருக்கிறது என்றால் இன்னமும் நூற்றுக்குப்பத்து தாழ்த்தப்பட்ட மக்கள்தான் எழுதப்படிக்கத் தெரிந்த மக்களாக இருக்கிறார்கள். 90 பேருக்கு எழுதப்படிக்கத் தெரியாது. நூற்றுக்கு ஒருவர்-நூற்றுக்கு ஒருவர் என்பதுகூட அதிகம்தான். ஒரு பர்சென்டும் கூட நிரப்பப்படவில்லை. ஒரு பர்சென்டும் இல்லாத வகையிலே அரசு வேலைகளுக்குப் போயிருக்கிறார்கள். நூற்றுக்கு ஒருவர் போய் இருக்கலாம். ஆயிரத்திற்கு ஒருவர்கூட இன்னும் தாழ்த்தப்பட்டவர் வருமான வரி கட்டுப்பவராக இல்லை. பத்தாயிரத்திலே ஒருவர் கூட இன்னமும் விமானப் பயணத்தைப் பார்க்கவில்லை. விமானப் பயணம் என்பது இப்பொழுது இந்த சயன்டிஃபிக் வோர்ல்ட்-லே விஞ்ஞான உலகத்திலே பொருளாதார வளர்ச்சியின் ஒரு குறியீடு. இன்னமும், பத்தாயிரத்திலே ஒருவர்கூட விமானத்திலே பயணம் செய்யவில்லை. பார்த்திருப்பாரா என்பதே சந்தேகம். 72 ஆண்டுக் காலமாக நாம் பின்பற்றி அதை ஆட்சியிலே கொண்டு வந்து நடைமுறைப்படுத்தி, கடைப்பிடித்து எவ்வளவு வளர்ச்சியைப் பெற்றிருக்கிறோம் என்றால், இந்த வளர்ச்சியைத்தான் பெற்றிருக்கிறோம். இந்த வளர்ச்சி போதுமா ? ஆயிரம்

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] *[திரு. செ. கு. தமிழரசன்]*

ஆயிரம் ஆண்டுகளாக யுகம் யுகமாக ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, நலிந்து வாழ்ந்து கிடந்த மக்களைக் கைதூக்கி விடுவதற்கு. இந்த வளர்ச்சிப் பாதையிலே, நாம் இவ்வளவு வளர்ச்சியைத்தான் பெற்றிருக்கிறோம். இந்த வளர்ச்சி போதுமானதா ? இன்னும் ஐந்திலே ஒருபங்கு மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கிறார்கள். மக்கள் தொகையிலே ஐந்திலே ஒருபங்கு தாழ்த்தப்பட்ட நலிந்த மக்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த வளர்ச்சி போதுமானதாக இல்லை. எனவே, இன்னும் இதைக் கடுமையாக, வலிமையாக நாம் பின்பற்ற வேண்டும் என்பது நிதர்சனமாகவும், கட்டாயமாகவும் தேவைப்படுகிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'காலாகலேசர் கமிஷன்' ஆனாலும், அதற்கு பின்னர் வந்த 'பிந்துஸ்வரே பிரசாத் பிப்பி. மண்டல் கமிஷன்' ஆனாலும், அப்படி பல கமிஷன்கள் போடப்பட்டாலும்கூட, அதே நிலைமைதான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். நான் நீண்ட விவாதத்திற்குப் போக விரும்பவில்லை.

முற்பகல்11.55

மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் 'புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வருமான வரம்புக்கு ஒரு சட்டம் கொண்டுவந்தார்கள்' என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அப்போது நியாயமாக பிற்படுத்தப்பட்ட மக்களிலே ஒரு வருமான வரம்பைக் கொண்டுவந்தார்கள். அது நியாயம்.. நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், இந்த 40 ஆண்டுக்காலத்திலே, முழுமையாக தாழ்த்தப்பட்ட மக்கள் வளர்ச்சி பெறாவிட்டாலும்கூட இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு விட்டார்கள். ஒரு தலைமுறையினர் வளர்ந்திருக்கிறார்கள். ஒரு தலைமுறையினர் தாழ்ந்திருக்கிறார்கள். வளர்ந்த தலைமுறையே இருக்கிற உரிமைகளை அனுபவித்துக்கொண்டிருக்கிறது. தாழ்ந்த தலைமுறை, வழியே தெரியாமல் தடுமாறிக்கொண்டிருக்கிறது. ஆக, அந்தத் தலைமுறை வித்தியாசமும் கூடவந்துவிடுகிறது.

இன்றைக்குக்கூட, மண்டல் கமிஷனிலே உறுப்பினராக-தாழ்த்தப்பட்ட உறுப்பினராக-இருந்த எல்.ஆர். நாயக் அவர்கள், மண்டல் கமிஷனிலேயே ஒரு எதிர்ப்பான கருத்து, அந்தக் கமிஷனுக்குள்ளேயே இருந்து சொன்னார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள் ? "இந்த 27 சதவிகிதத்தைப் பிரிக்கிறபோதே, அதை இரண்டாக பிரிக்கலாம். 'Backward Class' என்ற ஒரு சமுதாயமாகப் பிரிக்கலாம். DBC- 'Depressed Backward Class' என்ற ஒரு சமுதாயமாகப் பிரிக்கலாம். அப்படி ஒரு சமுதாயமாகப் பிரிக்கிறபோது, பிற்படுத்தப்பட்ட மக்களிலேயே நலிந்து கிடக்கிற மக்களுக்கும் நாம் உத்தரவாதம் தரமுடியும்" என்று திரு. எல்.ஆர். நாயக் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டிலேகூட, அந்தக் கமிஷன் 16 மாவட்டங்களிலே சுற்றுப்பயணம் செய்து, 171 சாதிகளை

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[திரு. செ. கு. தமிழரசன்] [*1993 நவம்பர் 9*

அப்படிப்பட்ட 'Depressed Backward Class' ஆக 'identify' செய்திருக்கிறது. எனவே, இரு ஒரு நியாயமான நீண்ட கண்ணோட்டத்தோடு கூடிய ஒரு கருத்தாக இருக்கிறது என்பதனாலேயே, அது தவறில்லை என்பதுதான் என்னுடைய கருத்துங்கூட. நம்முடைய மாநில அரசு, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய தலைமையிலே இன்றைக்கு மிக வேகமாக இட ஒதுக்கீட்டுக் கொள்கையிலே இருந்து கொண்டிருக்கிறது. எப்போதுமே இல்லாத பேரறிஞர் அம்பேத்கர் அவர்கள் சொன்ன இட ஒதுக்கீட்டை, தந்தை பெரியார் அவர்கள் வலுயுறுத்திய அந்த இட ஒதுக்கீட்டைக்காட்டிலும், வேதாகமக் கல்லூரிகளிலேகூட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்று இன்றைக்கு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட சமுதாய வளர்ச்சிக்கு இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் வித்திட்டிருக்கிறார்கள். பாபாசாஹேப் அம்பேத்கர் அவர்கள் 40 ஆண்டுகளுக்கு முன்னாலே சொன்னார்கள். தந்தை பெரியார் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே சொன்னார்கள். அதை இன்றைக்கு முடிக்க துணிச்சலாக முடியும் என்கிற முடித்துக்காட்டுகிற அந்த உணர்வோடு தமிழக முதல்வர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன்.

இன்றைக்குகூட, கடந்த வாரத்திலே பிறப்பிக்கப்பட்டிருக்கிற ஆணையிலேகூட, 'Capitation Fee' பணம் கட்டிப் படிக்கிற மாணவர்களிலேகூட இட ஒதுக்கீட்டு முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலே இது கிடையாது. தனியார் கல்லூரிகளிலே கட்டணம் செலுத்திப் படிக்கும் முறை இருக்கும் பல மாநிலங்களிலேகூட இப்படிப்பட்ட இட ஒதுக்கீட்டைப் பின்பற்றுவது இல்லை. ஆனால் நம்முடைய மாநிலத்திலே கட்டணம் செலுத்திப் படிக்கிற அந்தக் கல்லூரியிலேகூட, 'கம்யூனல் உத்தரவு' வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைக் கொண்டு வரவேண்டும்; அதிலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உரிய விகிதாச்சாரம் தரப்பட வேண்டும் என்கிற கட்டாயத்தை நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியிருக்கிறார்கள். இதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

இவ்வளவு அவர்கள் வேகமாக இருந்தாலும்கூட, சில அரசு நிறுவனங்கள், அரசு அலுவலர்கள் அவர்கள் எல்லாம் அந்த சமுதாய சனாதன வழியிலே வந்தவர்கள் சிலர் இருக்கிறார்கள் அவர்கள் எல்லாம் முட்டுக்கட்டைகளாக இருக்கிறார்கள். இன்னும் பல மாநிலங்களிலே, மத்திய அரசு மாநில அரசு அலுவலகங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான 18 விழுக்காடோ அல்லது அந்தந்த மாநிலங்களிலே ஒதுக்கப்பட்டிருக்கிற விழுக்காடோ நிரப்பப்பட்டிருக்கிறதா என்றால் முழுமையாக இல்லை. அதற்கு என்ன

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [திரு. செ. கு. தமிழரசன்]

காரணம் என்றால் 'Official Bureaucrats' என்று சொல்லப்படுகிற அந்த அதிகார வர்க்கம் இருக்கிறதே, அது எப்போதுமே ஒரு தவறான கணக்கைக் கொடுக்கும். ஒவ்வொரு துறையிலேயும் 18 சதவிகிதம் நிரப்பப்பட்டிருக்கிறதா என்று கேட்டால், நிரப்பப்பட்டிருக்கிறது. எப்படியெல்லாம்? அதிலே இருக்கிற பியூன்ஸ்; அதிலே இருக்கிற ஸ்கேவஞ்சர்ஸ், நாம் அதிர்ஷ்டவசமாக கடைநிலை ஊழியர்களையும், துப்புரவுத் தொழிலாளர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்கிவிட்டோம். எனவே, அவர்கள் கணக்குக்கொடுக்கிற போது துப்புரவுத் தொழிலாளர்கள் குற்றேவலாளர்கள், அங்கே இருக்கிற உதவியாளர்கள் இப்படிப்பட்டவர்களை எல்லாம் சேர்த்து, 18 விழுக்காடு நிரப்பிவிட்டோம் என்று சொல்கிற தவறான ஒரு முறை தொடர்ந்து இருக்கிறது. நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. எல்லா இடங்களிலும் இருக்கிறது. அவர்கள் சனாதன வழி வந்தவர்கள். இதைச் செய்கிறார்கள். எனவே...(மணியடிக்கப்பெற்றது)

நண்பகல் 12.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரை, எவ்வளவு காலியிடங்கள் வருகின்றனவோ, எந்த இடங்களிலே வந்தாலும் சரி, கீழ்நிலையிலே இருக்கிற ஊழியர் இடங்களாக இருந்தாலும் சரி, மேல்நிலையிலே இருக்கிற அதிகாரிகள் இடங்களாக இருந்தாலும் சரி, காலியிடங்கள் வருவதிலே தவறாமல் 18 சதவீதத்தை நிரப்புகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிந்திருக்கிறார்கள். எனவே, இந்த அரசைப் பொறுத்தவரை வருகிற காலியிடங்களிலே எந்தப் பிரச்சனையும் இல்லாமல், எந்தக்குறைபாடும் இல்லாமல், 18 சதவீதத்தை நிரப்பிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் எனக்குக் கிஞ்சித்தும் கருத்து வேறுபாடு கிடையாது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் நல்ல எண்ணத்திலும், அவர்களுடைய கொள்கையிலும் எனக்குத் துளிக்கூட மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால் அலுவலர்கள் இத்தகைய கணக்குக் கொடுத்து ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அவர்கள் துப்புரவுத் தொழிலாளரையும் இதில் சேர்த்துக்கொள்கிறார்கள். இதை முறை என்று நாம் சொல்லமுடியுமா? Class I, Class II, Class III, Class IV, Class V இப்படி எல்லாப் பதவிகளிலும் ஒதுக்கீடு செய்யும் முறை இருக்கவேண்டும். அதுமட்டுமல்ல, backlog என்று சொல்லப்படுகிற அந்த நிலுவைகளையும் நாம் நிவர்த்தி செய்வதற்கு carry

[திரு. செ. கு. தமிழரசன்] [1993 நவம்பர் 9

forward முறையைப் பின்பற்றலாம் என்பதை நம்முடைய அரசியல் சட்டமே நமக்கு உரிய டைரக்ஷனைத் தருகிறது. எனவே, carry forward-ஐயும் நாம் நிரப்பலாம். அதிலே எனக்கு சிறிதளவுகூட கருத்து வித்தியாசம் கிடையாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் செய்து தருகிறார்கள். அது எனக்குத் தெரியும். ஆனாலும் இதை நினைவுபடுத்த வேண்டியது, சுட்டிக்காட்ட வேண்டியது என்னுடைய கடமை என்பதாலே அதை நான் சுட்டிக்காட்டுகிறேன்.

நம்முடைய மாநில அரசிலே ஆறு துறைகளிலே, அதாவது வருவாய்த்துறை, வணிக வரித்துறை, நில அளவைத்துறை, நீதித்துறை, நெடுஞ்சாலைத்துறை, அறநிலையத்துறை ஆகியவற்றிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்குப் பதவி உயர்விலும் இட ஒதுக்கீடு இருந்தது. ஆனால் இப்போது மெல்ல மெல்ல மாறிக்கொண்டிருக்கிறது. இப்போது நான் சொல்ல விரும்புவது, நம்முடைய அமைச்சரவைக்கே தெரியாமல், ஒரு அலுவலகத்திலே, நெடுஞ்சாலைத் துறையிலே, கடந்த 24-5-1993 லே ஒரு புதிய திருத்தம் கொண்டுவந்து, இனி பதவி உயர்விலே இடஒதுக்கீடு கூடாது என்று கொண்டு வந்திருக்கிறார்கள். அதைத் திருத்துவதற்கான வாய்ப்பு இல்லை. அவர்களாகவே சிலர் செய்து விடுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை எனக்கு நன்றாகத் தெரியும். வேகமாகச் செயல்படக் கூடியவர்கள். ஆனால், நிர்வாகத்திலே இப்படிப்பட்ட தவறுகள் நடந்து விடுகின்றன. எனவே, நான் இதை சொல்ல வேண்டியது அவசியம் என்பதாலே சொல்ல விரும்புகிறேன். இப்போது ஒரு துறையிலே அது பறிபோகிறது. இருப்பதே 6 துறைகள், அதிலே 8 வகுப்புகளாக நாம் பிரித்து அதிலேதான் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே, இவைகளை எல்லாம் களைந்து எறிவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

இப்போது உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பிலே ஒரு தொடர்பும் இல்லாமலே, ஒரு சம்பந்தமும் இல்லாமலே, போகிற போக்கிலே அந்தத் தீர்ப்பிலே ஒன்றைச் சேர்த்துச் சொல்லிவிட்டார்கள். 50 சதவீத ஒதுக்கீடு என்பது எல்லோருக்கும் பொருந்தும் என்று சொல்லிவிட்டார்கள். அப்படிச் சொன்னதோடு மட்டுமல்லாமல் சூப்பர் ஸ்பெஷாலிட்டி என்று சொல்லப்படுகிற, உயர் நிபுணத்துவக் கல்விகளிலே இனி இட ஒதுக்கீடு தேவையில்லை, பதவி உயர்விலே தேவையில்லை, புரபஸர்ஸ், சயிண்டிஸ்ட் போன்ற பணிகளுக்கும் இது தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு காரணமும் இல்லாமல், மண்டல் கமிஷனிலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவீதம் கொடுத்தது சரியா, தவறா என்று ரெஃபர் செய்து பார்த்தால் ரெஃபரன்ஸ் இல்லாமலேயே, விவகாரம் இல்லாமலேயே நாமும் இதிலே பாதிக்கப்பட்டு விட்டோம். இதையும் சேர்த்து எல்லோருக்கும் பொருந்தும் என்று சொல்லி

1993 நவம்பர் 9] [திரு. செ. கு. தமிழரசன்]

விட்டார்கள். இதைச் சொன்ன மாத்திரத்திலே இந்திராகாந்தி பல்கலைக் கழகம் நடைமுறைப்படுத்த ஆரம்பித்து விட்டது. வேறுசில பல்கலைக் கழகம் நடைமுறைப்படுத்த ஆரம்பித்துவிட்டன. இது குறித்து பாராளுமன்றத்திலே உறுப்பினர் திரு. ராம்விலாஸ் பாஸ்வான் போன்றவர்கள் கேள்வி எழுப்புகிறபோது மாண்புமிகு மக்கள் நலத் துறை அமைச்சர் திரு. சீதாராம்கேசரியும், துணை அமைச்சர் திரு. தங்கபாலு அவர்களும் இது குறித்து கவலைப்படத் தேவையில்லை, இதுகுறித்து வருத்தப்படத் தேவையில்லை என்று உத்தரவாதம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நடைமுறையிலே அது நடந்து கொண்டே இருக்கிறது. நம்முடைய தமிழக அரசுகூட, வேறு வழியில்லாமல் இதைப் பின்பற்றுவதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. சூப்பர் ஸ்பெஷாலிட்டி போஸ்டுகளில் கூட இந்தப் பிரச்சினை எழுந்தது. எனவே இதை நாடாளுமன்றம் ஒரு திருத்தத்தின் மூலம்தான் செய்யவேண்டும்.

1963-லே இதேபோன்று உச்சநீதிமன்றத்திலே உச்சநீதிமன்ற நீதிபதி திரு. கஜேந்திர கட்கர் தலைமையிலே 5 பேர்கள் அடங்கிய பெஞ்ச் ரங்காச்சாரி, என்கிற, தென்னக இரயில்வேயிலே பணிபுரிந்த கடைநிலை ஊழியர் தொடுத்த வழக்கில் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இந்த இட ஒதுக்கீடு தேவையில்லை.. **பதவி உயர்வு** அளிப்பதில் தேவையில்லை என்று, தொடுத்த வழக்கில், உத்தரவாதம் வழங்கியிருக்கிறது. எது எதிலே இட ஒதுக்கீடு தரலாம் என்று சொல்லியிருக்கிறது.

Recruitment *(வேலைவாய்ப்பு)*
Training *(பயிற்சி)*
Appointment *(பணி)*
Promotion ***(பதவி உயர்வு)***

இந்த நான்கிற்கும் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். 1963–லே சுப்ரீம் கோர்ட்பெஞ்ச் அப்படிச் சொல்லியிருக்கிறது. இப்பொழுது 1993 லே ஒரு பெஞ்ச் இப்படி சொல்லியிருக்கிறது. ஆக, மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும்கூட, நான் ஏன் இதைச் சொல்ல விரும்புகிறேன் என்றால், பேரறிஞர் அம்பேத்கர், தந்தை பெரியார் அவர்கள் பெற்றுத் தந்த போராடித் தந்த இந்த இட ஒதுக்கீட்டு முறையை நாம் நிச்சயமாகக் கைவிடுதல் கூடாது. இவ்வளவு காலமாக அதைப் பின்பற்றியே நாம் இன்னமும் பாதி வழியைக் கூட கடக்கவில்லை. இன்னமும் கோடிக்கணக்கான மக்கள் நலிந்த மக்களாக இருக்கிறார்கள்; ஏழை எளிய மக்களாக இருக்கிறார்கள்; வறுமைக் கோட்டிற்குக்கீழே இருக்கிறார்கள். இப்பொழுது வந்திருக்கிற கிராமியப் பொருளாதாரக் கணக்குப்படி பீகார் முதல் மாநிலமாகவும், தமிழ்நாடு இரண்டாவது மாநிலமாகவும்;—Village poverty கிராமிய வறுமையிலே இருக்கின்றன. எனவே, கிராமிய அளவில் அந்தச் சனாதன அமைப்பு ஒரு பிரிவு மக்களைச் சுரண்டிக்கொண்டிருக்கிறது என்பதை நாம் இதிலே உணர

[திரு. செ. கு. தமிழரசன்] [1993 நவம்பர் 9

முடிகிறது. எனவே, 335 அரசியல் சட்டப் பிரிவு தந்திருக்கிற அந்த அரசியல் சட்டப் பாதுகாப்பின்படி ஏழை எளிய மக்களுக்கு நாம் உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும்.

பிற்பகல் 12.05

நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்தியாவிற்கே எதிலேயும் முன்னுதாரணமாக, எடுத்துக்காட்டாக இருக்கிறவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த எடுத்துக்காட்டாக அவர்கள் விளங்கியிருக்கின்றதனாலேதான், மிகத் துணிச்சலோடு இந்த தீர்மானத்தை இந்தப் பேரவையிலே கொண்டுவந்திருக்கிறார்கள். அந்தத் துணிச்சலைப் பார்க்கிறபோது பேரறிஞர் அம்பேத்கார், சட்ட அமைச்சராக பாராளுமன்றத்திலே இருந்தபோது, அவர் வலியுறுத்திய பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான கமிஷனும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான பொருளாதார சமூக வளர்ச்சிக்கான எந்த மாறுதலையும் அன்றைய மத்திய அரசு செய்யாததினால், மிகத் துணிந்து அவர் வெளியேறிய காட்சி எனக்கு நினைவுக்கு வருகிறது. அத்தகைய வீர விவேகத்தோடு இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏழை எளிய, நலிந்த மக்களின் மேல் அக்கறை கொண்டுள்ளவர்களுக்கு நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வேறு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகப் பொருளாதார அரசியல் வளர்ச்சியில் இவ்வளவு காலமாக எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள், பெற்றிருக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுப்பதற்கு, ஒரு தனி கமிஷனை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நியமித்தால் கூட அது சரியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அதே நேரத்தில் எங்களுடைய பிரச்சினைகளில் ஒரு பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடித்துவிடுங்கள். நேரம் ஆகிறது.

திரு. செ. கு. தமிழரசன்: இந்த இடஒதுக்கீட்டு முறையே இவ்வளவு பிரச்சினையாக இருக்கிறபோது, ஏராளமாகப் போலி சான்றிதழ்கள், கம்யூனிட்டி சர்ட்டிபிக்கேட்டை போலி சர்ட்டிபிக்கேட்டாகப் பெற்று பலர் பயனடைகிறார்கள். இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற, மிகப்பெரிய உயர் அதிகாரிகளே, மிகப் பெரிய பொறுப்பிலே இருக்கிறவர்கள்கூட, அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களா என்கிற ஒரு சந்தேகம் இருக்கிறது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தை முழுமனதோடு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஆதரித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய எல்லா நடவடிக்கைகளுக்கும் 1 கோடி தாழ்த்தப்பட்ட மக்களும் மனப்பூர்வமாக உங்கள் பணிகளிலே, உங்களோடு இருந்து செயலாற்றுவார்கள் என்கிற உத்தரவாதத்தை அளித்து, நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

1993 நவம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மத்திய அரசு அரசியல் சட்டத்தை திருத்தவேண்டும் என்கிற இந்தத் தீர்மானத்தை எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். டாக்டர் அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் பின்தங்கிய ஆதிதிராவிட மக்களுக்காக, அவர்கள் வாழ்வின் மறுமலர்ச்சிக்காக, முன்னேற்றத்திற்காக, விரும்பிக்கொண்டுவந்து, தொடர்ந்து கடந்த 10 ஆண்டுகாலமாக நடைமுறைப்படுத்தி அமல்படுத்தப்பட்டுவந்து, அனுபவிக்கப்பட்டுவந்த அந்த உரிமைகள் பாதிக்கப்படும்விதத்தில் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அமைந்துள்ளது. இதுபோன்ற ஒரு நிலை இதற்கு முன்னால் ஏற்பட்டபோது, 1951 லே நீதிக்கட்சி ஆட்சிக்காலத்திலே கொண்டுவரப்பட்ட கம்யூனல் ஜி.ஓ.விற்கு வகுப்புவாதி பிரதிநிதித்துவத்திற்கு தடங்கல் ஏற்பட்டபோது எப்படி முதல் முறையாக அரசியல் சட்டம் திருத்தப்பட்டதோ, அதேபோல் இம்முறை தமிழகத்தில் பெரும்பான்மையாக வாழ்கிற பின்தங்கிய மக்களின் நலனைத் தொடர்ந்து பாதுகாக்கும் விதத்தில் மத்திய அரசு எந்தத் தயக்கமும் காட்டாமல் அரசியல் சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டுவந்து, ஏற்கெனவே அனுபவித்து வருகிற உரிமைகள் தொடர்ந்து கிடைக்கும் விதத்திலே மாறுதல் செய்யவேண்டு, சட்டத்திருத்தம் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மத்திய அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12.10

உச்ச நீதிமன்றம், காவிரி நதிநீர் மன்றத் தீர்ப்புபற்றி தீர்ப்பளித்த போது கர்நாடக அரசு சட்டமன்றத்தைக் கூட்டி, உச்ச நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பை நாங்கள் ஏற்கமாட்டோம் என்று சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியது. ஆனால் நாம் அந்த அளவுக்குச் செய்யவில்லை. வேண்டுகோள் மத்திய அரசுக்கு விடுகிற விதத்திலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். எனவே, மத்திய அரசு இதிலே தலையிட்டு, அரசியல் சட்டத்தைத் திருத்த முன்வர வேண்டும். அதற்கு வலுவூட்டுகின்ற வகையிலே தமிழ்நாட்டிலே இருக்கிற பின்தங்கியோர், ஆதி திராவிடர் மக்கள் அத்தனை பேரும் இதிலே ஒன்றுபட்டிருக்கிறார்கள் என்ற விதத்தில் ஒரு பொது வேலை நிறுத்தத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். வருகிற 16-ந்தேதி பொது வேலை நிறுத்தம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதையும், மத்திய அரசுக்கு யாராவது எதிர்ப்பாளர்கள் இருப்பார்களேயானால் அவர்களுக்கு தமிழக மக்களுடைய உணர்வு இப்படி இருக்கிறது; அனைவரும் இதிலே ஒன்றுபட்டு இருக்கிறார்கள்

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1993 நவம்பர் 9

என்பதை எடுத்துக்காட்டி, எளிமையாக அரசியல் சட்டத்தில் திருத்தத்தைக்கொண்டுவர உதவும் என்ற அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்தப் பொது வேலை நிறுத்தத்தை எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்கிறேன். இதை வரவேற்கிற அதேநேரத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர் தமிழரசன் அவர்கள் சுட்டிக்காட்டிய இந்தச் சலுகைகள் தொடர வேண்டுமென்று கேட்கிற அதேநேரத்தில் ஏற்கெனவே இருந்துவருகிற சலுகைகள் மதிக்கப்படாத விதத்தில் இருக்கின்றன. தமிழக அரசு அவற்றை மதித்து, நடைமுறைப்படுத்தவேண்டும். அவர் சுட்டிக்காட்டியதைபோல நெடுஞ்சாலைத் துறையில் சமீபத்தில் வெளியிடப்பட்ட அரசு ஆணை எண்–பொதுப்பணித் துறை எச்.ஏ. நாள் 24-5-1993, சர்வீஸ் விதி 12-ஐ திருத்தி அரசு ஆணை எண். 807-ன் மூலம் நெடுஞ்சாலைத்துறையிலே தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களைச் சேர்ந்த உதவிப்பொறியாளர்களுக்கு பதவி உயர்விலே இதுவரை கொடுக்கப்பட்டு வந்த அந்தச் சலுகை ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

அதைப்போல, கடந்த 29–ந்தேதி சட்டமன்றக் கூட்டத்திலே கூட 1991–லே ஷெட்யூல்டு காஸ்டைப் பொறுத்தவரைக்கும் டி.எம். கார்டியாலஜி பிரத்தியேகப் பட்டப்படிப்பின்போது அவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் தரப்படவில்லை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அன்றைக்குப் பதில் அளித்திருக்கிறார்கள். அதிலே கூட யாரும் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் மனு செய்யவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னது சரியல்ல. அவர்கள் மனு செய்து, இடம் கிடைக்காத காரணத்தால் உயர்நீதிமன்றத்திலே வழக்கும் தொடர்ந்திருக்கிறார்கள். அதைப்போல. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சனையைக் கிளப்பியபோது இது சம்பந்தப்பட்ட குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனால் அப்போதேகூட நான் சொன்னது, இதிலே யாரும் மனு செய்திருக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன் என்றுதான் நான் சொன்னேன். திட்ட வட்டமாக மனு செய்யவில்லை என்று நான் கூறவில்லை. அதற்குப் பின்னாலே அந்த விளக்கங்களை எடுத்துக்கொண்டு வருவதற்குள்ளாக சட்டமன்றக் கூட்டத்தின் கடைசிநாள் கூட்டம் முடிந்துவிட்டது. அதற்குப் பின்னாலே அறிக்கை வாயிலாக விளக்கிச் சொல்லிவிட்டு, மாண்புமிகு

1993 நவம்பர் 9] [திரு. சு. முத்துசாமி]

எதிர்க்கட்சித்தலைவர் அவர்களுக்கும் அதை அனுப்பி வைத்தேன். அதிலே எந்த ஒரு சிறு தவறும் நடக்கவில்லை. முறைப்படி நடந்திருக்கிறது. நீதிமன்றத்திலே அரசாங்கம் எடுத்த முடிவு சரியான முடிவு என்று தீர்ப்பு கிடைத்திருக்கிறது.

குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எல்லா உரிமைகளும் கிடைக்கவேண்டுமென்பதிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு எப்போதுமே மிகவும் கவனமாக இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே எடுத்துக்காட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். இந்த டி.எம்.கார்டியாலஜி என்பதைப் பொறுத்தவரையில் 5 இடங்கள் இருக்கின்றன. இந்த 5 இடங்களிலே விதிப்படி நாம் பார்த்து வைத்திருப்பது 60 சதவீதம் அரசு மருத்துவர்கள், மீதம் இருக்கிற 40 சதவீதம் மெரிட் கோட்டா என்ற அடிப்படையில் பிரித்து வைத்திருக்கிறோம். 5 இடங்களையும் ஒன்றாகச் சேர்த்து கொடுத்தால் நாம் 'கம்யூனல் ரொட்டேஷனை' அப்ளை செய்யமுடியும். தனித்தனியாக பார்க்கிறபோது 3, 2 என்று வருகிறபோது கம்யூனல் ரொட்டேஷனை அப்ளை செய்ய முடியவில்லை. எனவேதான் அந்தப் பிரச்சினை ஏற்பட்டுவிட்டது. அதிலும் மெரிட் கோட்டாவில் வந்தவர்கள் அத்தனை பேர்களும் அரசு டாக்டர்களாக வந்துவிட்டார்கள். தனியார் டாக்டர்களும் அப்ளிகேஷன் போட்டிருந்தார்கள். ஆனால் அவர்களால் வர முடியவில்லை. இவர்களே அதிக மதிப்பெண் பெற்றிருந்த காரணத்தால் ஒன்று, இரண்டு, மூன்று என்று அவர்களே வந்துவிட்டார்கள்.

அதேபோல் அரசாங்கக் கோட்டாவில் அரசு மருத்துவர்கள் மட்டும்தான் மனுச் செய்ய முடியும். அதிலே போட்டிருந்தவர்கள் 3பேரும் அதாவது ஒன்று , இரண்டு, மூன்று என்று வந்துவிட்டார்கள். அதிலே பிரச்சினை ஏற்பட்டதேயொழிய ஒன்றாகச் சேர்ந்திருந்தால் கம்யூனல் ரொட்டேஷன்-ஐ அப்ளை செய்திருப்போம்.

பிற்பகல் 12.15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய தினம் ஹையர் ஸ்பெஷாலிட்டி டி.எம். கார்டியாலஜி-ஐப் பொறுத்தவரையில் இங்கே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் முன்பு ஏற்கனவே அளித்த பதிலைச் சுட்டிக்காட்டி அந்தப் பிரச்சினையை நான் இங்கே எழுப்பினேன். அதாவது 1991-92 ஆம் ஆண்டுக்கான மருத்துவ மேற்பட்டப்படிப்புக்கு ஹையர் ஸ்பெஷாலிட்டி டி.எம். கார்டியாலஜி படிப்புக்கு ஆதி திராவிட மாணவர்களுக்கு ஒதுக்கீட்டு அடிப்படையில் இடம் ஒதுக்காதது குறித்து அன்று எழுப்பப்பட்டபோது முதல் தடவையில் அவர் சொன்ன பதில்

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1993 நவம்பர் 9

இதை அரசுப் பணியில் இருக்கிற டாக்டர்களுக்கான பகுதியாகவும், தனியாக தொழில் செய்கிற டாக்டர்களுக்கான பகுதியாகவும் பிரிக்கிறபோது அந்த 5-லே மூன்று, இரண்டு என்று போய்விடுகிறது. எனவே 4-க்கும் குறைவாக வருகிறபோது கம்யூனல் ரொட்டேஷன் அப்ளை ஆகாது என்று சொன்னார்கள். ஆனால் இந்தச் சபையில் மீண்டும் அந்தப் பிரச்சினை வந்தபோது அவர் என்ன சொன்னார் என்றால் "ஒன்று தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் மனுச் செய்திருக்கமாட்டார்கள்" என்றும் "சுப்ரீம் கோர்ட் ஒரு தடை விதித்திருக்கிறது" என்றும் இங்கே சொன்னார்கள். அந்தக் குறிப்பிட்ட ஆண்டில் யார், யாருக்கு சீட் கிடைத்தது கம்யூனல் ரொட்டேஷன்படி என்ற ரிசல்ட் பேப்பரிலே கூட கிடையாது. ஆனால் அதற்குப் பிறகு இந்த ஆண்டு தடை இருப்பது உண்மையாக இருக்குமேயானால் இந்த ஆண்டு கொடுத்திருக்கிற லிஸ்ட்படி டி.எம். கார்டியாலஜி-க்கு முறையாகக் கொடுத்திருக்கிறார்கள். ஓப்பன் காம்பெட்டிஷன்-கட்-ஆஃப் மார்க், பி.சி.-கட் ஆஃப் மார்க், எம். பி.. சி.-கட் ஆப் மார்க், எஸ்சி.- கட் ஆப் மார்க் என்றும் அதேபோல் சர்வீஸ்-க்கு தனியாக என்றும் கொடுத்திருக்கிறார்கள். ஆக மூன்று விதமான விளக்கங்கள் வருகின்றன. ஒன்று கவர்மெண்ட், பிரைவேட் பிராக்டீஸ்; இரண்டு சுப்ரீம் கோர்ட் தடை; மூன்று மெரிட்-கவர்மெண்ட் சர்வீஸ் என்று மூன்றுவிதமான விளக்கங்கள் வருகின்றன. ஆக மொத்தத்தில் இதில் பாதிக்கப்பட்டவர்கள் யார் என்று கேட்டால் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த மனுச் செய்த பலபேர் இதனால் பாதிக்கப்பட்டார்கள். அதுமட்டுமல்லாமல் அந்த ஆண்டு ரிசர்வேஷன் சுழற்சி முறையே முறையாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதுதான் உண்மை.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு அவர்கள் எந்த ஆண்டு என்று குறிப்பிடவில்லை. அவர்கள் போய் குறிப்பை எடுத்துப்பார்க்கலாம். எந்த ஆண்டு அட்மிஷன் என்று குறிப்பிடாத காரணத்தால்தான் போய்த் தேடி எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதாவது இந்த அரசாங்கம் அமைந்த முதல் ஆண்டு அந்த அட்மிஷன் போடப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே இரண்டு அட்மிஷன்கள் முடிந்திருக்கின்றன. அவர்கள் குறிப்பிட்ட காலத்தில் சேர்ந்தவர்கள் படிப்பை முடித்துவிட்டு வெளியேபோய் இப்போது ப்ராக்டீஸ் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே அந்த நிலையிலே அந்த அட்மிஷன் கொடுக்கப்பட்டது. இதிலே நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன். கம்யூனல் ரொட்டேஷன் ஒழுங்காக அப்ளை செய்யப்பட்டிருக்கிறது. உயர் நீதிமன்றத்திற்கு இதைக்கொண்டு போனபோது அரசாங்கம் இதை முறையாக, சரியாகச் செய்திருக்கிறார்கள் என்று உயர்நீதிமன்றத் தீர்ப்பும் வந்திருக்கிறது.

1993 நவம்பர் 9] [திரு. சு. முத்துசாமி]

அதை மட்டும் நான் இங்கே குறிப்பிடவிரும்பவில்லை. அந்த மெரிட் கோட்டா என்பதில் தனியார் துறையிலே இருக்கிற மருத்துவர்களும் வரலாம். அதேபோல் அரசுத் துறையிலே பணியாற்றுகிற மருத்துவர்களும் வரலாம். இரண்டுபேரும் அதிலே போட்டியிட முடியும். எனவே அதற்கு இரண்டே இரண்டு இடங்கள். எனவே அதிலே ஏற்பட்ட ஒரே ஒரு சிக்கல் என்னவென்று சொன்னால் அரசாங்கத்தைச் சேர்ந்த மருத்துவர்களே மிக அதிகமான மதிப்பெண் பெற்றிருந்த காரணத்தால் முதல் இரண்டு இடத்தை அவர்கள் பிடித்துவிட்டார்கள். எனவே அதில் என்ன கம்யூனிட்டி வருகிறது என்று நம்மால் பார்க்க முடியவில்லை. இரண்டு இடங்கள் மட்டும். எனவே அதிலே கம்யூனிடி பார்க்க முடியாது. அதேபோல் அடுத்த கோட்டா 3 அந்த மூன்றும் அரசு மருத்துவர்களுக்காக மட்டுமே ஒதுக்கப்பட்டது. எனவே விதிகளின்படி யார், யார் மனுச் செய்திருந்தார்களோ அவர்கள் அரசாங்க மருத்துவர்கள் மட்டுமே. அதிலே முதல் 3 பேர் வந்திருக்கிறார்கள். எனவே இவைகளை இரண்டாகப் பிரித்துவிட்ட காரணத்தால் கம்யூனல் ரொட்டேஷனை நம்மால் அப்ளை செய்ய முடியாது. 4 இடங்களுக்கு மேலே இருந்தால்தான் இந்த கம்யூனல் ரொட்டேஷனை அப்ளை செய்ய முடியும். ஆனால் நீங்கள் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்க்கிறீர்கள். ஆனால் முறையாக அப்படியல்ல. தனித்தனியாகப் பிரித்துப் பார்க்கவேண்டும். தனித்தனியாகப் பிரித்துதான் அந்த உத்தரவே போடப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருந்த இடங்கள் 5. அதிலே முறைப்படி தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்குக் கிடைத்திருக்கவேண்டும். ப்ராஸ்பெக்டஸ்-லேகூட தெளிவாக ஹையர் ஸ்பெஷாலிட்டி-யிலே ஓப்பன் காம்பெட்டிஷன், பேக்வர்ட் க்ளாஸஸ், மோஸ்ட் பேக்வர்ட் க்ளாஸஸ், டீனோட்டிஃபைட் கம்யூனிட்டீஸ், ஷெட்யூல்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் என்று அத்தனைபேருக்கும் இருக்கும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டைத்தான் நான் சொல்கிறேன். அந்த ஆண்டில் உள்ள ப்ராஸ்பெக்டஸிலே கூட ஹையர் ஸ்பெஷாலிட்டி-க்கு ரிசர்வேஷன் உண்டு என்று கூறி இருக்கிறார்கள். ஆனால் மாறுபட்ட விளக்கங்கள், மூன்றுவிதமான விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. எனவேதான் அதிலே பிரச்சினை வருகிறது. அந்த ஆண்டு நியாயப்படி, முறைப்படி கிடைத்திருக்கவேண்டிய தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்குக் கிடைத்திருக்கவேண்டிய இடம் கிடைக்காமல் போய்விட்டது. அது போல் மீண்டும் நிகழக்கூடாது, நேரக்கூடாது என்பதற்காகத்தான் அதை இங்கே நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம்.

[*1993 நவம்பர் 9*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு எந்த வருடம் என்று அவர் குறிப்பிடாத காரணத்தால் அந்தப் பிரச்சினை வந்தது. (குறுக்கீடு) நீங்கள் குறிப்பை எடுத்துப் பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைக்கு நடந்த விவாதத்தில் நானும் கூடச் சொன்னேன். இந்த விவரத்தை என்னிடம் கொடுத்திருந்தால் நான் அமைச்சருக்குக் கொடுத்து சரியான விளக்கம் பெற்றிருக்க முடியும் என்று அன்றைக்கே நான் சொன்னேன். அதற்குப் பிறகு அமைச்சர் அவர்களும் ஏற்கனவே உங்களுக்கு எழுதியும் இருக்கிறார். எனக்கு அதனுடைய நகலையும் அனுப்பியிருக்கிறார்கள். அதையே இப்போதும் சொல்கிறார்கள்.

பிற்பகல் 12.20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் நான் தெளிவாகச் சொல்கிறேன். 1991 ஆம் ஆண்டு நடந்த அட்மிஷன், அதற்குப் பின்னாலே சுப்ரீம் கோர்ட்டிலே சுப்பர் ஸ்பெஷாலிட்டிக்கு இதை அப்ளை செய்யவேண்டிய அவசியம் இல்லை என்று ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அந்தக் காரணத்தால்தான் அன்றைக்கு நான் குறிப்பிட்டுக் காட்டினேன். அப்போதே நான் சொன்னேன். என்னிடத்திலே எந்தக் குறிப்பும் இல்லாத காரணத்தினால் திட்டவட்டமாக என்னால் சொல்லமுடியவில்லை. இப்படித்தான் இருக்கக்கூடும் என்று நம்புகிறேன் என்று சொன்னேன். எனவே இன்றைக்கும் சொல்கிறேன். அதிலே ஐந்து இடங்கள். அந்த ஐந்து இடங்கள் இரண்டு பிரிவாக ஒன்று 2 இடமாகவும், ஒன்று 3 இடமாகவும், இரண்டாகப் பிரிக்கப்பட்ட காரணத்தினால், அதற்கு தனி லிஸ்ட், இதற்கு தனி லிஸ்ட், எனவே இரண்டையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்க்கவே முடியாது. ஒன்றாகச் சேர்த்துப் பார்த்தால்தான், கம்யூனல் ரொட்டேஷன் வரும். தனித்தனியாக பிரிக்கிற காரணத்தால் இதிலே கம்யூனல் ரொட்டேஷன் வரவே வராது. எனவே உயர்நீதி மன்றம் அரசாங்கம் செய்தது சரி என்று, பாதிக்கப்பட்டவர்கள் என்று சுருதியவர்கள் கோர்ட்டுக்குப் போனபோது அவர்கள் அந்த உத்தரவைத் தந்திருக்கிறார்கள். எனவே நிச்சயமாக இதிலே ஒரு தவறும் நடக்கவில்லை. குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிடைக்கவேண்டிய 18 சதவிகிதம் கிடைப்பதற்கான உத்தரவாதத்தை இந்த அரசாங்கம் ஒவ்வொரு நேரத்திலும் ஏற்படுத்திக்கொண்டே இருக்கிறது. அதிலேயும் உன்னிப்பாகக் கண்காணித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு, இந்த ஆண்டு டிஎம். கார்டியாலஜி பொறுத்தவரைக்கும்

1993 நவம்பர் 9] *[திரு. எஸ். திருநாவுக்கரசு]*

செட்யூல்ட் காஸ்ட்ஸ் பொறுத்தவரைக்கும் ஒழுங்காக அந்தப் பிரதிநிதித்துவம் தரப்பட்டிருக்கிறது. 1991-லே பிரிக்கப்பட்டதே தவறு. பிராஸ்பெக்டஸிலே 5 பேருக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இதில் விவாதத்திற்குள் போகக்கூடாது. ஏனென்றால் அது முடிந்துபோயிற்று. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கிளப்பி,(குறுக்கீடு) அவர் தவறாக ஒன்றும்.. . . . .*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது இன்றைக்குப் போட்டதல்ல. பல ஆண்டுக் காலமாக அரசு மருத்துவர்களுக்கு என்று, அரசாங்க சர்வீசிலே இருக்கக் கூடியவர்களுக்கு சலுகை கொடுக்கவேண்டும் என்பதற்காக அல்ல, அரசாங்க சர்வீசுக்கு நல்ல மருத்துவர்கள், உயர் கல்வி படித்தவர்கள் கிடைக்கவேண்டும் என்பதற்காக 60 சதவிகிதம் அரசாங்கம் எடுத்துக் கொண்டது. 40 சதவிகிதம் தனியாருக்கு கொடுத்தது. அதற்குப் பின்னாலே அது தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கிறது. 1991-லே புதிதாகப் புகுத்தியது அல்ல. தொடர்ந்து இருக்கக்கூடியது.*

திரு. எஸ். திருநாவுக்கரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதத்திலே அப்படியே தொடர்ந்து போனால்... பிரைவேட் டாக்டர்ஸ்க்குக்கே கிடைக்கவில்லை. கவர்ன்மெண்ட் சர்வீசிலே இருக்கின்றவர்கள்தான் அந்த 5 பேர்களும் வந்திருக்கிறார்கள், அப்படிப் பார்த்தால்கூட,(குறுக்கீடு) சரி, சரி. விட்டுவிடுவோம்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரைவேட் டாக்டர்களுக்கு நாங்கள் விரும்பிக் கொடுப்பது, கொடுக்காமல் இருப்பதோ என்பதல்ல. இரண்டு இடங்கள் மெரிட் கோட்டா-ஆக ஒதுக்கப்படுகிறது. அந்த மெரிட் கோட்டாவிலே அரசு மருத்துவர்களும் மனுச் செய்யலாம், தனியாரிலே இருப்பவர்களும் மனு செய்யலாம். அதிலே யார் அதிக மதிப்பெண்கள் பெறுகிறார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்கமுடியும். நாம் எடுத்து வேறு யாருக்கும் கொடுத்துவிடமுடியாது. எனவே அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள் அரசாங்க மருத்துவர்களாக இருந்துவிட்டார்கள். எனவே அவர்களுக்குக் கிடைத்துவிட்டது. அதனால்தான் இவ்வளவு குழம்பிப் போய் இருக்கிறீர்கள். எனவே அதிலே எந்தத்தவறும் நடக்கவில்லை. நீங்கள் குழப்பத்தைத் தீர்த்துக்கொள்ளலாம்.*

திரு. எஸ். திருநாவுக்கரசு: *ரிசர்வேஷன் என்று வைக்கிறபோது ரிசர்வேஷனைப் ஃபாலோ பண்ணவேண்டும் அல்லவா. கவர்ன்மெண்ட் டாக்டர்களுக்கும் வைக்கிறோம். பிரைவேட் டாக்டர்களுக்கும் வைக்கிறோம். பிரைவேட் டாக்டர்களுக்கு இல்லாமல் எப்படி கவர்ன்மெண்ட் டாக்டர்களுக்குக் கிடைக்கமுடியும்.*

[1993 நவம்பர் 9

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். கம்யூனல் ரொட்டேஷன் என்பது 4 இடங்களுக்கு மேலே இருந்தால் மட்டும்தான் அப்ளை செய்ய முடியும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனல் ரொட்டேஷன்-ல் பிரித்ததனாலே வரமுடியாது. 4-க்கு கீழே வருவதனாலே, பிரைவேட் டாக்டர்களுக்கு இருக்கிறது, பிரைவேட். ஆனால் அது எல்லாமே கவர்ன்மெண்ட் டாக்டர்களுக்குத்தானே வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் இன்றைக்குப் போட்டதல்ல, பல ஆண்டுக்காலமாக இருந்து வருகிறது; அந்தக் காரணத்தினாலேதான் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 இடங்கள் அரசாங்க மருத்துவர்களுக்கு மட்டுமே. அதிலே வேறு யாரும் மனுச் செய்யமுடியாது. அதற்குள்ளே யார் அதிகமான மதிப்பெண்கள் பெறுகிறார்களோ, அந்த 3 பேர்கள் முதலிடத்திற்கு வந்து விட்டார்கள். முதல் மதிப்பெண்கள் பெற்று முதலிடம் பெற்ற மூன்று பேர்கள் வந்துவிட்டார்கள். அடுத்து இன்னொன்று இருப்பது மெரிட் கோட்டா. இந்த மெரிட் கோட்டாவைப் பொறுத்தவரையில் அரசு மருத்துவர்கள் வரலாம், தனியார் மருத்துவர்கள் வரலாம். துரதிருஷ்டவசமாக, அரசு மருத்துவர்களே முதல் மதிப்பெண்களைப் பெற்றுவிட்ட காரணத்தினால் அவர்கள் அந்த இடத்தைப் பெற்றுவிட்டார்கள். இன்றைக்கு அவ்வளவு குழப்பம் ஏற்படுத்திவிட்டார்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு இப்போது ஒன்றும் பரிகாரம் காணமுடியாது, 1991-லே நடைபெற்றது. அதைச் சுட்டிக்காட்டக் காரணமே.(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிகாரம் தேடுவதில் ஒன்றுமில்லை. அதில் தவறே இல்லை. பரிகாரத்தைத் தேடி ஏன் அலைகிறார்கள் ?

திரு. எஸ். திருநாவுக்கரசு: எனவே இதை நான் சுட்டிக்காட்டக் காரணமே அதுபோல் இனிமேல் நடக்கக்கூடாது என்பதற்காகத்தான். ஹைவேஸ் டிப்பார்ட்மெண்டிலே சொன்னேன். அரசாங்கத்திலே, அமைச்சரவையிலே ஏற்கனவே ஹைவேஸ் டிப்பார்ட்மெண்ட்டிலே ஒரு ஜீ.ஓ. புரோமோஷனிலே கிடையாது என்று போட்டிருக்கிறார்கள். அது அமைச்சரவையிலே விவாதிக்கப்பட்டதா இல்லையா என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

1993 நவம்பர் 9]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரோமோஷன் பொறுத்தவரையில் பொதுப்பணித் துறையை எடுத்துக்கொண்டால், நெடுஞ்சாலைத் துறையிலே இப்படி வைத்திருந்தார்கள். நாம் அப்பாயிண்ட்மெண்ட் செய்யும்போது, அவர்களுக்குரிய விகிதாச்சாரப்படி செய்கின்றோம். இதிலே பேக்வேர்ட் கிளாஸ் மற்றும் பொது விகிதாச்சாரத்திலே நாம் அந்தந்த விகிதாச்சாரப்படி நியமனம் செய்கின்றபோது, சில துறைகளிலே பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்த ஒருவர் 20, 25 ஆண்டுகள்கூட அசிஸ்டெண்ட் என்ஜினியராக இருந்துவிடுகின்றார். ஆனால் புரோமோஷன் என்று வருகின்றபோது, சில துறைகளிலே சிக்கல் வருகிறது. அப்படித்தான் இந்த நெடுஞ்சாலைத் துறையிலே, 20 வருடம் ஒருவர், ஏ.ஈ.-ஆக இருந்து கொண்டே இருக்கிறார். பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர். அதேநேரத்தில் சிலபேர் 5 வருடத்திலே ஏ.இ. அல்லது டி.இ. ஆக வந்துவிடுகிறார்கள். அப்படி வருகின்றபோது, இருக்கின்றவர்களில் மெஜாரிட்டியானவர்கள் பாதிக்கப்படுகின்றபோது சில துறைகளிலே, சில மாற்றங்களை செய்திருக்கிறார்கள். அதுபோன்ற விவரங்கள் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோல நெடுஞ்சாலைத் துறையிலே பெரும்பாலானவர்களுக்கு புரமோஷனே வருவது கிடையாது. 20 வருடத்திற்கு ஒருவர் ஏ.ஈ. ஆக இருந்தால் ஏ.டி.இ. ஆக மாறுவார். ஆகவே, அந்த அளவு ஒரு மிகச் சிக்கலான சூழ்நிலை இருக்கிறது. எனவே, மெஜாரிட்டி என்று சொல்லப்படுகின்றபோது பெரும்பாலானவர்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்றபோது, அதிலே சில பிரச்சினைகள் வருகின்றபோது, அந்த மாதிரி பி. அண்ட் ஏ.ஆர்.-லே கன்சல்ட் செய்து சில விவரங்களை வெளியிட்டிருக்கிறார்கள். அதுபோன்ற பிரச்சினை இருக்கின்றதுதான் காரணமேயொழிய மற்றபடி யாருக்கும் இடையூறு செய்ய வேண்டுமென்ற எண்ணம் இதிலே கிடையாது.

பிற்பகல் 12.25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு துறையிலும் வரக்கூடிய இதுபோன்ற பிரச்சினைகளை எல்லாம் அந்தந்த மானியக் கோரிக்கையின்போது பேசலாம். இப்பொழுது இந்தத் தீர்மானத்தின்மீது உறுப்பினர் தன்னுடைய கருத்தைக் கூறவேண்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் சொன்னதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் திருப்திகரமான பதில் அல்ல. நான் சொல்வது, எந்த டிப்பார்ட்மெண்டிலும் புரமோஷன் வருகிறபோது-- ஏற்கனவே நெடுஞ்சாலைத் துறையிலே அவர்கள் அனுபவித்துக்கொண்டு இருந்த சலுகை யாரோ 4 பேருக்கு பல ஆண்டுகளாக புரமோசன் இல்லாமல் இருந்தது, அதற்காக எஸ்.சி., எஸ்.டி.-க்கு வருவதை கட் பண்ணி. . . . . .

[1993 நவம்பர் 9

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: 4 பேருக்கு அல்ல, இருப்பதில் கிட்டத்தட்ட 75 சதவிகிதத்திற்கு மேல் இருப்பவர்களுக்கு அதிலே பிரச்சினை இருக்கிறது. 15 வருடம், 20 வருடம் பணியாற்றியவர்கள்கூட ஒரு அசிஸ்டென்ட் டிவிஷனல் என்ஜினியராக வர முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசுத் துறையிலே, முழுமையாக எல்லாத் துறையிலேயும் பின்பற்றப்படுகின்ற நிகழ்ச்சிகள் அல்ல. எனவே, இந்தத் துறையிலே பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலே, சில பிரச்சினைகள் எழுந்திருக்கின்றதே தவிர இதிலே யாரையும் குறைவுபடுத்த வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அரசாணையைத் திரும்பப் பெற்று அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். யாருக்கு பாதிப்பு வருகிறது என்பதல்ல, என்னுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: இது சம்பந்தமாக அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிரிபியூனலுக்குப் போயிருக்கிறார்கள். ஆகவே, இதில் அரசு தலையிட முடியாது. ஆனால் அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிரிபியூனலில் என்ன முடிவு வருகிறதோ அதை அரசு ஏற்றுக்கொள்ளும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: எனவே, இதுபோல நான் ஒன்றிரண்டு சுட்டிக் காட்டினேன். இதுபோல ஏற்கெனவே பின்தங்கிய மக்கள், ஆதி திராவிட மக்கள் அனுபவித்து வருகிற அந்த ரிசர்வேஷன் பாதிக்கப்படாத விதத்திலே அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் ஒன்றிரண்டைச் சுட்டிக்காட்டினேன், வேறல்ல. எனவே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அவர் கொண்டு வந்ததுதான் பின்தங்கிய மக்களுக்கு இந்த 50 சதவிகிதம் ஒதுக்கீடு என்பது. அன்று அவர் கொண்டு வந்த மிகப் பெரிய திட்டத்திற்கு இடையூறு ஏற்படுகிற விதத்திலே இருக்கிற உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பை மத்திய அரசு ஒத்துழைப்பு தராத விதத்திலே அரசியல் சட்டத்திலே திருத்தம் செய்து அந்த மாறுதலை ஏற்படுத்த வேண்டுமென்று நான் வற்புறுத்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இட ஒதுக்கீடு குறித்து ஒரு தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தின்மீது கருத்துக் கூற அனுமதித்த தங்களுக்கு நன்றித் தெரிவித்து, இந்தியாவில் இருக்கிற பல்வேறு மாநிலங்களில், பல்வேறுவிதமான விகிதாசார

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [திரு. வே. தம்புசாமி]

இட ஒதுக்கீடு இருந்தாலும், தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும் சமூக மறுமலர்ச்சியைக் கருத்தில்கொண்டு பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு எந்தவகையிலும் ஊறு நேரா வண்ணம், எப்போதும்போல இனி வருங்காலம் முழுவதிலும் அரசுப் பணிகளிலும், கல்வி நிலையங்களிலும் 69 சதவிகிதம் இட ஒதுக்கீடு தொடர்ந்து அமலில் இருக்கத்தக்க வகையில் இந்திய அரசியல் சட்டத்தில் விரைவில் உரிய திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று கோருகின்ற தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதோடு, இன்றையதினம் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு இட ஒதுக்கீடு ஒரு பகுதியாக அமைந்திருந்தாலும்கூட அவர்களுடைய உண்மையான பொருளாதார முன்னேற்றத்திற்கு அரசு திட்டங்களை விரைவாக நிறைவேற்றி முன்னுரிமை கொடுத்து வேகமாக அவற்றைச் செயல்படுத்துவதன் மூலமாகதான் அவர்கள் இந்த இட ஒதுக்கீட்டையே முழுமையாக எட்டிப்பிடிக்க முடியும். கல்வி பெறுவதிலே இருக்கின்ற சிரமங்களைப் போக்க வேண்டும். ஆரம்பக் கல்வி அனைவருக்கும் கட்டாயம் என்றாலும்கூட உயர் கல்வி பெறுவதில் பொருளாதார அடிப்படையில் நல்லவிதமாக இருக்கக்கூடியவர்கள்தான் அதைப்பெறக்கூடிய வாய்ப்பு இன்றையதினம் இருக்கிறது. அத்தகைய வாய்ப்பு, எந்த இட ஒதுக்கீட்டை நாம் அளிப்பதற்காக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறோமோ, அது எதிர்காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால், அத்தகைய சமூகத்தினர் முன்னேறுவதற்கான ஒரு அடிப்படை பொருளாதார சீர்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். இன்றைக்குப் பொருளாதார வசதி உடையவர்கள்தான் உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. நாடு முழுமையும் கோடான கோடி தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் இன்னமும் கீழ் நிலையில் இருக்கிறார்கள். எனவே அவர்களுக்குக் குடியிருப்பு மனைகள் வழங்குவதாக இருந்தாலும், அரசு வழங்கக்கூடிய பல்வேறு நலத் திட்டங்களாக இருந்தாலும், அந்த மக்களுக்கு முழுமையாகப் போய்ச் சேருகிறதா என்று கண்காணிப்பது மிகமிக அவசியமென்று நான் கருதுகிறேன்.

பிற்பகல்12.30

உதாரணத்திற்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குடியிருப்பு மனை வழங்குகிறபோதுகூட, இரண்டாக நாம் பிரிக்கிறோம். கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்குக் குடியிருப்பு மனைகள் வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதே தாழ்த்தப்பட்ட மக்கள் நகரங்களிலும் குடியிருக்கிறார்கள். அவர்களுக்குக் குடியிருப்பு மனைப் பட்டா கொடுக்காததன் விளைவாக

[திரு. வே. தம்புசாமி] [1993 நவம்பர் 9

அவர்கள் அரசு அளிக்கக்கூடிய சலுகையைப் பெற முடியாத சூழ்நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இதை எதிர்காலத்திலே அரசு கவனத்திலே கொண்டு, அவர்களுக்கும் அந்த முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு, முன்னால் அமைச்சர் அவர்கள்கூட்ச் சொன்னார்கள். மண்டல் கமிஷன் குறித்து, நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். மண்டல் கமிஷன் என்று ஒன்று அமைத்து, 10 ஆண்டுகளுக்குப் பிறகுதான், வி.பி. சிங் அரசில்தான் எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது என்பது உண்மையா, இல்லையா? இதுதான் என்னுடைய கேள்வி. அந்தக் கமிஷனிலேகூட இட ஒதுக்கீடு எல்லாம் சொல்லி, கடைசியிலே ஒன்றைக் குறிப்பிடுகிறார்கள். வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்கூட, இட ஒதுக்கீடு மட்டுமல்ல, அவர்களுக்கு நிலம் வழங்க வேண்டுமென்று மண்டல கமிஷன் பரிந்துரை செய்திருக்கிறது, வி.பி. சிங் அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆரம்பத்திலே இருந்த நிலைமை முழுவதும் தெரியும். ஆனால் இன்னமும் அடித்தட்டில் உள்ள மக்கள் முன்னேறுவதற்கு, அவர்கள் பொருளாதார ரீதியில் வளர்ச்சி பெறுவதற்கு, இந்த இட ஒதுக்கீட்டை அவர்கள் முழுவதும் பெறுவதற்கு, எதிர்காலத்தில் நில உச்ச வரம்புச் சட்டத்தைத் திருத்தி, எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருக்கிற பொருளாதார வசதிகளை ஏற்படுத்தித் தருவதை அரசு கவனத்தில் கொண்டு, அவர்கள் அனைவரும் நிலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு, இந்தத் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்று, அமைகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற அரசினர் தனித் தீர்மானத்தைப் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் ஆதரிக்கிறேன். இந்தப் பிரச்சினையில் ஒரு சிலவற்றைச் சொல்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். முதலாவதாக ஒதுக்கீடு என்பது சலுகையல்ல. ஏற்கெனவே இழைக்கப்பட்டுவிட்ட கொடுமைக்குக் காணப்படுகிற பரிகாரம். Reservation is not a favour; but, we are trying to set right a historical wrong. வேறு எந்த நாட்டிலும், எந்தச் சமுதாயத்திலும் இல்லாமல், நம்முடைய நாட்டில் காலம்காலமாக மக்கள் சாதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒரு சாதிக்கு ஒரு தொழில் என்று ஆக்கப்பட்டு, வர்ணாஸ்ரம தர்ம முறைப்படி புறக்கணிக்கப்பட்டு விட்டார்கள். அதற்குப் பரிகாரம் தேடுவதுதான் ஒதுக்கீடு. இந்திய அரசியல் சட்டத்தில் 15-வது பிரிவும், 16-வது பிரிவும் சம வாய்ப்பு என்று சொல்லிவிடுகிறது. ஆனால் சம வாய்ப்பை எட்டிப்பிடிக்கின்ற சக்தி இந்தப் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு ஆயிரம்

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [திரு. ச. இராமச்சந்திரன்]

ஆண்டுகளாக இல்லை. ஆகவே அவர்களை கை தூக்கி விடுவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற ஒதுக்கீடு என்பது, It is not a favour. வரலாற்றின் வழியாக ஏற்பட்டுவிட்ட ஒரு தவறை, தீமையை பரிகரித்துக்கொள்வதுதான் இது. அதற்கு இன்று பிறந்திருக்கின்ற மேல் வகுப்பார்கள்கூட பொறுப்பல்ல. ஆகையால் ஒதுக்கீட்டைக் கண்டு மேல் வகுப்பைச் சேர்ந்தவர்கள் வெறுப்பு அடைவது சரியல்ல. இந்தப் பரிகாரத்தை, வரலாற்றில் ஏற்பட்டுவிட்ட இந்தக் கேட்டை நீக்குவதற்கு சமூதாயத்தில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்ற உணர்வு பின்தங்கிய மக்களுக்கு மட்டுமல்ல, முன்னேறிய வகுப்பை சேர்ந்த மக்களுக்கு இன்னும் அதிகமாக இருக்கவேண்டும். ஆகையினால் மேல்வகுப்பார் அடிக்கடி நீதிமன்றங்களுக்குப் போய் வெறுப்பை வளர்ப்பதைத் தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

பிற்பகல் 12.35

இரண்டாவதாக, இந்திய அரசியல் சட்டம் வேதப் புத்தகம் அல்ல. எப்போது வேண்டுமானாலும் திருத்தக்கூடிய சாதாரணப்புத்தகம் தான். 80-வது திருத்தம் கூட வந்துவிட்டது. எப்படி சங்கப் பலகையைப் பற்றிச் சொல்வார்களோ அதைப்போல, இந்திய அரசியல் சட்டத்தை சில சிக்கல்களில் தெளிவுபடுத்தத் திருத்தலாம். 1951-ல் இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட்டதற்கும், இப்போது திருத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை விடுப்பதற்கும் ஒரு வேறுபாடு உண்டு. அன்று, அரசியல் சட்டத்தில் 16-வது பிரிவில் மட்டும் தான் பின்தங்கிய மக்களுக்கு வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு இருந்தது. 15-வது சட்டப் பிரிவான 'கல்வி'-யில் இல்லை. அப்போதுதான் தந்தை பெரியார் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களும், 'படித்தால்தானே வேலைக்கு வரமுடியும், படிப்பிலே ஒதுக்கீடு இல்லாமல் வேலையிலே ஒதுக்கீடு கொடுத்தால் என்ன நியாயம்' என்று கேட்டார்கள். அது, consequential amendment. Article 15(4), பண்டித ஜவஹர்லால் நேரு, அதைக் கட்டாயம் அமல்படுத்த வேண்டியிருந்தது. அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் இன்றைக்கு நமக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய பிரச்சினை, 'பாலிசி'. அதாவது கொள்கை. Who is to decide the policy? கொள்கையை யார் முடிவு பண்ணுவது? தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட மக்கள் எவ்வளவு பேர், அவர்களுக்கு எவ்வளவு ஒதுக்கவேண்டும் என்கின்ற பாலிசி-யை உச்ச நீதிமன்றம் எடுத்துக் கொள்வது என்ன நியாயம் ? பிற்பட்ட மக்களுக்கு இருக்கக்கூடிய உரிமைகளை எடுத்துக் கொள்வது மட்டுமல்ல, தமிழ்நாடு சட்டமன்றத்திற்கும், தமிழ்நாடு அரசுக்கும், நமக்கும் இருக்கக்கூடிய இறையாண்மையை இன்றைக்கு உச்சநீதிமன்றம் கேள்வி கேட்பதாக ஆகிறது. அரசியல் சட்டத்திலே எந்த இடத்திலேயும் 50 சதவீதம் அல்லது 50 சதவீதத்திற்கு மேல் போகக்கூடாது என்று இல்லை. அப்படியிருக்கின்ற

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1993 நவம்பர் 9

பொழுது, It is our prerogative to frame a policy and implement it. ஆனால் உச்சநீதிமன்றம், Now, it has appropriated the policy-making power of the Legislature as well as the State to itself. ஆகையினாலே, உச்சநீதிமன்றம் நேரடியாக நிர்வாகத்திலும், சட்ட மன்றத்தின் இறையாண்மையிலும் தலையிட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை உச்சநீதி மன்றத்தினரும் உணரவேண்டும்.

ஒரு மாநிலத்தில் 70 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள், ஆதிவாசிகள் இருக்கிறார்கள் என்றால் என்ன செய்வது? உதாரணமாக ஒரிசாவில் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் 100-க்கு 65 பேர் இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று இந்த அரசு முடிவு செய்கிறது என்றால் அதற்கு extraordinary reason இருந்தால்தான் செய்யவேண்டுமென்று சொல்வது என்ன நியாயம்? ஆகையினாலே உச்சநீதிமன்றம், இந்த உரிமைகளை மாநில அரசுகளுக்கு விட்டுக் கொடுக்க முன்வரவேண்டும். இதை இந்திய அரசும் உச்ச நீதி மன்றத்திடம் தேவைப்பட்டால் எடுத்துச் சொல்லவேண்டும். அவர்களுக்கு அட்டர்னி-ஜெனரல் மூலமாக எடுத்து விளக்கவேண்டும். அதற்கும் மேலாக உச்சநீதிமன்றம் அப்படிப் பிடிவாதமாக இருப்பார்கள் என்றால் அரசியல் சட்டத்திலே தெளிவாக அந்த ஒதுக்கீட்டிலே எத்தகைய உச்ச வரம்பை விதிப்பதற்கும் நீதிமன்றங்களுக்கு இடம் இல்லை என்கின்ற வகையிலே, the right to levy a limit on reservation by the Court must be withdrawn. அதுதான் ஒரே வழியே தவிர, ஆகவே இது ஒரு கொள்கைதான். 100-க்கு 50 பேர் இருக்கலாமா, 60 பேர் இருக்கலாமா 70 பேர் இருக்கலாமா என்பதை நிர்ணயிக்கவேண்டிய அதிகாரம், உரிமை, "சட்டமன்றத்திற்கு" இருக்கவேண்டும், "பாராளுமன்றத்திற்கு" இருக்கவேண்டும். அது மக்கள் மன்றங்களுக்கு இருக்கக்கூடிய ஒரு அதிகாரம். அதை The Judiciary should not appropriate it. ஆகவே உச்சநீதிமன்றம் மறுபரிசீலனை பண்ணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.40

இன்னொன்று, இங்கே மாண்புமிகு புரட்சித்தலைவரைப் பற்றி ஒரு விவாதம் வந்ததனாலே அதை விளக்குவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். ஏனென்றால், யாரையும் குறை சொல்வது ரொம்ப சுலபம். ஆனால், எந்தவிதச் சூழ்நிலையில் அவர்கள் எப்படிச் செயல்பட்டார்கள் என்பதைத் தெரிந்துகொண்டால், அந்தக் குறை சொல்கிற மனப்பான்மை வராது. புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது நம்முடைய தமிழ்நாட்டில் 100-க்கு 67 அல்லது 70 பேர் பிற்பட்ட மக்கள். 50-க்கு மேலே போகக்கூடாது என்பது, அப்போது சுப்ரீம் கோர்ட், எல்லோரும் சொல்லி, எல்லோரும் ஏற்றுக்கொண்டதுதான். 31 சதவீதம் பிற்பட்ட மக்களுக்கு,

1993 நவம்பர் 9] [திரு. ச. இராமச்சந்திரன்]

ஆனால், பிற்பட்ட மக்களினுடைய எண்ணிக்கை 67 சதவீதம். அதிலே யாருக்குக் கொடுப்பது? 67 சதவீதம் நாம் ரிசர்வேஷன் பண்ணிவிட்டால் பிரச்சினை இல்லை. ஆனால், இருப்பது 31 சதவீதம். மொத்த சதவீத மக்கள் 67. அப்படி இருக்கிறபோது, வசதி வாய்ப்பு உள்ள–வேறு யாரையும் சொல்வதைவிட என்னையே எடுத்துக்கொண்டால், இப்போது என்னுடைய பையனை உச்சகட்ட வாய்ப்புகளிலே என்னால் படிக்க வைக்க முடிகிறது; டான்பாஸ்கோ ஸ்கூல், அப்புறம் ரீஜெனல் என்ஜினியரிங் காலேஜ்–இப்படி உச்சகட்ட வாய்ப்பு இருக்கிறது. ஆனால், கணவனால் கைவிடப்பட்ட, ஒரு கிராமத்திலே இருக்கக்கூடிய என்னுடைய வகுப்பைச் சேர்ந்த ஒரு தாய்க்கு–அவர் இட்லி சுட்டு விற்று விற்று அந்தப் பிள்ளையைப் படிக்கவைத்து மேலே கொண்டுவருகிறாள் என்றால், நான் அந்த இடத்தை எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு இல்லை என்று சொல்வது என்ன நியாயம்? இதை உணர்ந்துதான், அன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், சரி 31 தான் இருக்கிறது; இது வந்து ஏழைகளுக்குக் கிடைக்கட்டும் என்கின்ற வகையிலே அதை எப்படி ரேஷன் பண்ணுவது என்கின்றபோதுதான் வருமான வரம்பைக் கொண்டு வந்தாரே தவிர, அவர் ஏதோ பிற்பட்ட மக்களுக்கு இருக்கக்கூடிய சலுகைகளை எடுக்க வேண்டுமென்று கொண்டுவரவில்லை. அதற்குப் பிறகு எல்லோரும் பலவிதமாகச் சொன்னார்கள். கர்நாடகாவிலே அதிகமாக இருந்தது. அவர் பார்த்தார், சரி, 67-க்கே கொண்டுபோய் விடுவோமா, அதிகமாகவே பண்ணிவிடுவோமா என்றுதான் யோசனை செய்தார்கள். சரி என்று, 50 சதவீதம் இருக்கட்டும் என்று, என்ன ஆனாலும் ஆகட்டும் என்று, 50% ஆக ஆக்கினார்கள். ஆகையினாலே 50% என்று வருகிறபோது ஓரளவுக்கு அந்த மக்களுக்குத் திருப்தியாக இருந்து கொண்டுவருகிறது. இன்னும் உண்மையைச் சொல்லப்போனால், 69% போதாது. உண்மையான பிற்பட்ட மக்களினுடைய தொகையை தமிழ்நாட்டில் கணக்கு எடுத்து, 69 அல்ல, 75 வந்தால், 75% பண்ணுகிற அதிகாரம் நமக்கு வேண்டும். ஏன் 69%? உண்மையாக 75%, 67% பேக்வேர்டு கிளாஸ், 18% தாழ்த்தப்பட்ட மக்கள், 1% ஆதிவாசிகள்–67 பிளஸ் 1, 68; 68-ம், 18-ம் 86% இருக்கட்டுமே. அவர்களுக்கு அந்தச் சம வாய்ப்பு அப்படித்தான் வரும். அது தப்பு அல்ல. Equality is not an identity of treatment, but affording equal opportunities. ஆகையினாலே வரட்டுமே. அதிலே என்ன தப்பு? அந்த வகையிலே, அந்த அளவுக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கவேண்டும் என்கின்ற தீர்மானத்தை நாம்தான் முடிவு செய்யவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடைசியாகப் பேசுகிறபோது ஒன்று சொன்னார்கள். அமைச்சரவைக் கூட்டத்திலே நாங்கள் ஒரு முக்கியமான முடிவு எடுத்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். நான்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1993 நவம்பர் 9

என்ன எதிர்பார்த்தேன் என்றால், சுப்ரீம் கோர்ட், அவர்களுடைய முடிவு எடுப்பதற்கு முன்னாலே, நீங்கள் 50%-க்கு மேலே போக்கக்கூடாது என்கிறார்களே. அப்படி இருக்கிறபோது, நாம் இந்த மன்றத்தின் மூலமாக, 'நாங்கள் இதிலே ஒரு அரசியல் சட்டத் திருத்தம் வரும்வரையிலேயும், நாங்கள் 50% நிறைவேற்றமாட்டோம்; 69% தான் நிறைவேற்றுவோம்.' என்று ஏன் முடிவு எடுக்கக்கூடாது? அதிலே என்ன சங்கடங்கள் இருக்கின்றன? கர்நாடக அரசு என்ன, உச்சநீதிமன்றத் தீர்ப்பை மதித்தார்களா? காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை, உச்சநீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டார்களா? அத்தகைய ஒரு நெருக்கடியை நாம் ஏன் உருவாக்கக்கூடாது என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும். மற்றபடி போராட்டத்திற்கு தமிழ்நாடு, அதிலே ஒற்றுமையாக இருக்கும்; ஆதரவாக இருக்கும்; நாங்களும் வரவேற்கிறோம் என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அரசின் தனித் தீர்மானமாக முன்மொழியப்பட்டு, அதனுடைய முழு நியாயங்கள் அனைத்தையும் எடுத்துச் சொல்லி, எப்படிப்பட்ட சூழ்நிலையிலே இன்றைக்கு ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதையும் எடுத்துச் சொல்லி, மத்திய அரசாங்கம் உடனடியாக இதற்கு ஒரு நிவாரணம் காண வேண்டுமென்ற வகையிலேயும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே முழுக் கருத்தையும் தெரிவித்து இருக்கிறார்கள். அநேகமாக அவர்கள் அத்தனை பிரச்சினைகளையும் அலசி ஆராய்ந்து, ஒரு கருத்தைக்கூட விடாமல் இந்த மாமன்றத்திலே அத்தனை கருத்துக்களையும் சொல்லி இருக்கிறார்கள்.

பிற்பகல் 12.45

அதைப்போல மற்ற கூட்சிகளுடைய தலைவர்கள் மாறுபட்ட கருத்து எதுவும் இல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை முழு மனதோடு ஆதரித்து, அவர்கள் எடுக்கிற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தருவதாக இங்கே கருத்துகளைத் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, குறிப்பாக இரண்டொரு கருத்துக்களை மட்டும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இந்தப் பிரச்சினை உருவாகி, உச்சநீதிமன்றத்தில் இப்படியொரு சிக்கல் ஏற்பட்டபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு அமைச்சரவையைக் கூட்டியபோது அவர்கள் தெரிவித்த கருத்து எங்களுடைய உள்ளத்தை நெகிழ வைக்கக்கூடியதாக இருந்தது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்தாக வேண்டும்.

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [திரு. சு. முத்துசாமி]

ஆண்டாண்டுக் காலமாக காத்துவந்த இந்த உரிமையை எந்தக் காரணத்தைக் கொண்டும் நாம் விட்டுவிட முடியாது. அதற்கான உரிய நடவடிக்கையை சட்டப்படி நாம் மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லி அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த முடிவு தான் இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தில் இதைப்பற்றி மறு ஆய்வு செய்யவேண்டுமென்று மனு கொடுத்ததும், அதைத் தொடர்ந்து எஸ். எல். பி. போன்றவை எல்லாம் அங்கே ஃபைல் செய்ததும் அதனுடைய தொடர்ச்சி என்பதைத் தெரிவித்தாக வேண்டும். இதைச் சொல்வதற்குக் காரணம் இதிலே எந்த அளவுக்கு அவர்கள் ஆணித்தரமாக, அழுத்தந்திருத்தமாக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக, சமீபத்தில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கூட உடனடியாக சட்டமன்றத்தை அழைத்து, அதிலே தீர்மானத்தை நிறைவேற்றி மீண்டும் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டுமென்று அவர்கள் தெரிவித்தார்கள். எங்களுக்கு இருக்கிற உணர்வெல்லாம் ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல 1950ஆம் ஆண்டில் இங்கே ஒரு ஜி.ஓ. போடப்பட்டு, அது உச்சநீதிமன்றத்திலே அன்றைக்குத் தடை வாங்கப்பட்ட காரணத்தால் நேரு அவர்கள் காலத்திலே ஒரு சட்ட திருத்தத்தைக் கொண்டுவந்து அதற்கான பாதுகாப்பு கொடுத்தார்கள் என்பதை புரட்சித்தலைவி அவர்கள் தெரிவித்தார்கள். அதற்குப் பின்னாலே மைசூரில் இந்தப் பிரச்சினை எழுந்து, பாலாஜி என்பவர் 1963 ஆம் ஆண்டில் நீதிமன்றத்திற்குச் சென்றபோது 50 சதவீதத்திற்கு மேலே இட ஒதுக்கீடு கூடாது என்ற பிரச்சினை அன்றைக்கு உருவாகி இருக்கிறது. இதே சிக்கல் ஏற்பட்டு இருக்கிறது. அதற்குப் பின்னாலே தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல கேரளாவைச் சார்ந்த தாமஸ் அவர்கள் கேரளா அரசாங்கத்தை எதிர்த்து நீதிமன்றத்திற்கு 1976-லே சென்று இருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே கரம்சார் என்பவர் 1981-லே மத்திய அரசாங்கத்தை எதிர்த்து இதே பிரச்சினையில் உச்ச நீதிமன்றம் வரை சென்று இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல வசந்தகுமார் என்பவர் கர்நாடக அரசை எதிர்த்து, இதே பிரச்சினைக்காக 1985-லே உச்சநீதிமன்றத்திற்குச் சென்று இருக்கிறார்கள். இந்த நேரத்திலே எல்லாம் உச்சநீதிமன்றம் அதிலே ஒரு வரம்பை நிர்ணயிக்க முடியாது என்ற நீதிமன்ற தீர்ப்பைத்தான் அன்றைக்குத் கொடுத்து இருக்கிறது. அதற்குப் பின்னாலே இன்றைக்கு நீதிமன்றத் தீர்ப்பு 50 சதவீதத்திற்கு மேலே போக முடியாது என்ற ஒரு சூழ்நிலை உருவாகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இதிலேயிருந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்று சொன்னால் ஏற்கனவே நாம் பெற்றுக்கொண்டிருக்கிற உரிமைகளைத் தொடர்ந்து நிலை நிறுத்த வேண்டுமென்று சொன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குக் கொண்டுவந்திருக்கிற

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[திரு. சு. முத்துசாமி] [1993 நவம்பர் 9

தீர்மானத்தின் மூலமாக மத்திய அரசாங்கத்திற்கு நாம் வைக்கிற கோரிக்கையை உடனடியாக மத்திய அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்பதைத்தான் வலியுறுத்தி நாம் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். காரணம் நீதிமன்றத்திலே ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதமான முடிவு கிடைத்து இருக்கிறது. எனவே, அந்தப் பிரச்சினைக்குள்ளே நான் போகவில்லை. ஆனால் அந்தப் பிரச்சினை மாறி மாறி, ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு விதமான, ஒவ்வொரு வழக்கிலும் வேறுவிதமான முடிவுகள் வருவதை விட, இதிலே ஒரு நிரந்தர முடிவை மத்திய அரசாங்கம் சட்டத்திருத்தத்தின் மூலம் கொண்டு வந்துவிடுமானால் வேறு எந்தப் பிரச்சினையும் இருக்க முடியாது என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது மத்திய அரசாங்கம் உச்ச நீதிமன்றத்திற்கு அட்டர்னி ஜெனரல் மூலமாக எடுத்துச்சொல்ல வேண்டுமென்ற ஒரு கருத்தைத் தெரிவித்தார். எனக்கு அந்தக் கருத்திலேயிருந்து கொஞ்சம் மாறுபட்ட கருத்து உண்டு. காரணம் அதிலே காலதாமதம் ஏற்படும் என்று நாங்கள் கருதுகிறோம். எனவே, ஏற்கெனவே 3, 4 ஜட்ஜ்மெண்ட்ஸ் இதுபோன்று வந்திருக்கிறது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இருந்திருக்கிறது. எனவே, இதிலே நிரந்தரமான முடிவாக, இதிலே குழப்பம் இல்லாமல், பிரச்சினையே இல்லாமல் ஒரு தெளிவான நிலையை உருவாக்குவதற்கு உடனடியாக மத்திய அரசாங்கம் இந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதிலே இந்த மாமன்றம் உறுதியாக வலியுறுத்தவேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12.50

அதேபோன்று மற்ற பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், புரட்சித் தலைவி அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், தந்தை பெரியார் அவர்கள், புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் என்ன உணர்வுகளைக் கொண்டிருந்தார்களோ, என்ன திட்டங்களை இந்தத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக அவர்கள் கடைப்பிடித்து வந்தார்களோ, அதில் எள்ளளவும் பிறழாமல், அந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

அன்றைக்குப் பேரறிஞர் அண்ணா அவர்களும், தந்தை பெரியார் அவர்களும் இந்த நாட்டினுடைய உணர்வுகளை மத்திய அரசுக்குத் தெரிவித்ததினுடைய அடிப்படையிலேதான், நேரு பெருமான் அவர்கள் அந்தச் சட்டத் திருத்தத்தையே கொண்டு வந்தார்கள். எனவே, தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், புரட்சித் தலைவர் அவர்கள் செய்த அந்த நல்ல காரியத்தை, புரட்சித் தலைவி அவர்கள்

1993 நவம்பர் 9] [திரு. சு. முத்துசாமி]

நிரந்தர மூடிவாகச் செய்வதற்கு இன்றைக்கு முயற்சி எடுக்கிறார்கள். மேசையைத் தட்டும் ஒலி. நாங்கள் எதிர்பார்ப்பது எல்லாம், மத்தியிலேயிருந்த நேரு பெருமான் அவர்கள் செய்த, அவரைத் தொடர்ந்து வந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் செய்த நல்ல காரியத்தை இன்றைக்கு இருக்கிற நம்முடைய பிரதம அமைச்சர் அவர்களும், உடனடியாகச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்து, இந்த நாட்டு மக்களுடைய உணர்வுகள் முழுமையாக இதிலே பிரதிபலிக்கிறது என்பதை உணர்ந்து, இந்த மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஏற்கெனவே தொடர்ந்து நாம் கொண்டுவந்திருக்கிற, பெற்றிருக்கிற அந்த உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, மத்திய அரசாங்கம் உடனே இதைச் செய்யவேண்டும் என்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசுகிறபோது, உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். போலிச் சான்றிதழ்களை நிறைய பேர்கள் பெற்றுவிடுகிறார்கள். உரிமை பெற்றவர்களுக்கு இருக்கின்ற உரிமையைத் தட்டிப் பறிக்கின்ற வகையில், உரிமை இல்லாதவர்கள், போலிச் சான்றிதழ்களைப் பெற்று, அந்த உரிமையைப் பெற்றுவிடுகிறார்கள் என்று ஒரு கருத்தை அவர்கள் தெரிவித்தார்கள். இந்த ஆண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, ஒவ்வொரு துறையிலேயும், கல்வித் துறையாக இருந்தாலும் சரி, அல்லது என்னுடைய துறையாக இருந்தாலும் சரி, எல்லாத் துறைகளிலும், வந்திருக்கிற அத்துனை சான்றிதழ்களையும், நாங்கள் பரிசீலித்து, மதிப்பெண் சான்றிதழைச் சொல்கிறேன், அந்த மதிப்பெண் சான்றிதழ்களைப் பரிசீலித்து–அதிலே போலிச் சான்றிதழ்கள் இருப்பதைக் கண்டுபிடித்து, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசாங்கம் இன்றைக்கு மிகப் பெரிய முயற்சி எடுத்திருக்கிறது. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் மனுச் செய்ததிலே, போலிச் சான்றிதழ்களைக் கொடுத்து இருந்தார்கள் என்பதைக் கண்டுபிடித்து, அதற்கான நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் அவர்களுக்கு உறுதியாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இந்த மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதிலே, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மிகச் சிறப்பாக, மிக உன்னிப்பாக, கவனமாக செயல்படுகிறது என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீர்மானத்தை, இதற்கு மேலும், இதைப்போல ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியம் இல்லாத அளவிற்கு மத்திய அரசாங்கம் செய்யும் என்ற நம்பிக்கையோடு, இந்தத் தீர்மானத்தை வரவேற்று, ஆதரித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

[*1993 நவம்பர் 9*

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் சட்டப்பேரவை கூடியது. சட்டப்பேரவையின் மாரிக்காலக் கூட்டத்தொடர் நான்கு நாட்கள் மட்டுமே நடைபெற்றது. துணை மானியக் கோரிக்கைக்கு வரலாறு காணாத வகையில், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் 1½ நிமிட நேரம் மட்டுமே பதில் அளித்தார்கள். சட்டப் பேரவையினுடைய கூட்டத் தொடர் முடித்து வைக்கப்பெறாத நிலையில், இன்று நாம் மீண்டும் கூடியிருக்கிறோம். இன்றையதினம் இங்கே கூடுவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்ற சந்தேகம் பலருக்கும் வரக்கூடும். புதியதொரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. மொத்த இட ஒதுக்கீடு 50 சதவீதத்திற்கு மேல் என்பது புதிய நிலை அல்ல. இந்த விஷயத்தில் தமிழக அரசுக்கு எதிராக உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்திருப்பதும் புதிது அல்ல. இப்படிப்பட்ட தீர்ப்புகளைப் பற்றி அரசாங்கத்தின் நிலை என்ன என்பதை நாங்கள் அறிய விரும்பினோம். இதைப் பற்றி விவாதிக்கவேண்டும் என்று விரும்பினோம். ஆனால், அதற்கு அனுமதியோ, அவகாசமோ வழங்கப்படவில்லை. அதனால், வெளிநடப்பு செய்யவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. இருப்பினும், தற்போது விசேஷக் கூட்டமாக இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. இதிலும் போதிய அவகாசம் வழங்கப்பெற்று, முழுமையான விவாதத்திற்கு அனுமதிப்பது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியிலே தவறாகப் புரிந்துகொள்ளப்படும் என்ற காரணத்தால் தான் இதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றைக்கு மாண்புமிகு சபாநாயகரிடமோ, அல்லது வேறு வகையிலோ இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டு எழுதியோ அல்லது அந்தப் பிரச்சினையை அவர்கள் துவக்க வேண்டாம் என்று பாதியிலோ எங்கும் நிறுத்தப்படவில்லை. எனவே இன்றைக்கு ஒட்டுமொத்தமாக எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்து ஒருமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக நாம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறபோது அவர்கள் அப்படிச் சொன்னது இந்த அரசாங்கத்தின்மீது களங்கம் கற்பிக்கிற வகையிலே அமையும். பொது மக்களும் தவறாகப் புரிந்து கொள்கிற ஒரு சூழ்நிலை ஏற்படும். இதுவே கூட மத்திய அரசாங்கத்திற்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் ஒரு தவறான வழிகாட்டுதலாகப் போய்விடும் என்று நான் கருதுகின்றேன். எனவே அந்தக் குறிப்பு இருக்கவே கூடாது என்று நான் கருதுகிறேன்.

1993 நவம்பர் 9]

பிற்பகல் 12.55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பு அளித்த போது, அப்போதே இந்த மாநில அரசினுடைய நோக்கம், கொள்கை என்ன என்பதை திட்டவட்டமாகவும், தெளிவாகவும் சொல்லி நாம் வழக்கு தொடுத்தோம். சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய வழக்கிலே இந்த ஆண்டைப் பொறுத்தவரையிலும் பழைய முறையை அப்படியே கையாளலாம் என்றும், அடுத்த ஆண்டு 1994-95 ஆவது ஆண்டைப் பொறுத்து உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் தீர்ப்பு அளித்ததை ஒட்டி, அதற்குமேல் முறையீடு செய்யவேண்டிய அவசியம் மாநில அரசுக்கு ஏற்பட்டு, உச்ச நீதிமன்றத்திற்கு நாம் மேல் முறையீடு அனுப்பிவைத்தோம். அதனுடைய தீர்ப்பு நமக்கு சாதகமாக வரும் என்று எண்ணிக்கொண்டிருக்கிற வேளையிலேதான் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அதைப் பொறுத்து 5 ஆம் தேதி வெளியிடப்பட்டது. இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு தீர்ப்பு வழங்கப்பட்டு இருக்கிறது என்று செய்தி வந்திருக்கிறதே தவிர, அது பற்றிய தகவல் இந்த அரசுக்கு வரவில்லை என்பதையும் அவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி ஒரு தீர்ப்பை அவர்கள் கொடுத்துவிட்டார்கள் என்பதற்குப் பிறகுதான் இதைப் பற்றி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பவேண்டிய ஒரு இன்றியமையாக் கட்டத்திற்கு இந்த மாநில அரசு வந்தது. ஆகவேதான் இனிமேல் உச்சநீதிமன்றத்தில் இருக்கின்ற 9 நீதிபதிகள் உட்கார்ந்தாலும், மற்றவர்கள் உட்கார்ந்தாலும்கூட, இதிலே நல்லதொரு தீர்ப்பை அளிக்கமுடியாது; அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தி அதனுடைய அடிப்படையிலே வழி கண்டாலொழிய, வேறு வழியில்லை என்ற முடிவு 5ஆம் தேதிக்குப் பிறகு ஏற்பட்டதன் காரணமாகத்தான் இப்போது அவசரமாகச் சட்டமன்ற கூட்டத்தைக் கூட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இப்போது கூட்டப்பட்டிருக்கிற அவசரத்திற்கான காரணத்தை மட்டும் நான் இப்போது விளக்கிக்கூற விரும்பு இருக்கிறேன்.

திரு எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்தச் சூழ்நிலை இருந்தது என்பதைத்தான் குறிப்பிட வந்தேன். இதற்கான இடைக்காலத் தடையாணை பிறப்பித்து மாதக் கணக்கிலே ஆகிறது. 5ஆம் தேதி ஒரு ஹியரிங் என்று சொன்னார்கள். 1 ஆம் தேதி கட ஒரு ஹியரிங் இருந்தது. அதில் எல்லாம் என்ன பேசினார்கள் என்பது எல்லாம் வேண்டும். ஆனால் நான்

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [*1993 நவம்பர் 9*

அதையெல்லாம் இங்கே குறிப்பிடப்போவது இல்லை. நான் சொன்னது அன்றே அந்தச் சூழல் இருந்தது. விவாதித்து இருக்கலாமே என்று கோடிட்டுக் காட்டினேன். அவ்வளவுதான். அதிலே வேறு எங்கோ போய்விட்டேன் என்று அமைச்சரவர்கள் இங்கே பேசினார்கள். அது சரியல்ல. ஒரு முழுமையான விவாதம் இருக்கவேண்டுமென்கிற நல்ல எண்ணத்திலே நான் சொல்கிறேன். இன்னும் சொல்லப்போனால் இந்தக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு முன்னால் ஒரு சர்வ கட்சிக் கூட்டத்தை அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டியிருக்கவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன். குறிப்பாக சமூக நீதி கோட்பாட்டிற்காகவும், இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்காகவும் பல்வேறு கட்சிகள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக திராவிடர் கழகம் போன்ற இயக்கங்களின் தலைவர்கள் பங்கேற்பதற்கும், கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும், இதுபோன்ற ஒரு கூட்டத்திலே வாய்ப்பு இருந்திருக்கும் என்று நான் இந்தக் கட்டத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காவிரிப் பிரச்சினையை எதிர்கொள்வதில் நாம் கையாண்ட நடைமுறைகளை இதிலே பின்பற்றுவது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஒத்த கருத்துடன் ஒரு முனைப்படுத்தப்பட்ட அணுகுமுறையுடன் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்ளவேண்டுமென்று நான் கருதுகிறேன். இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள இரு மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. இதில் தமிழகத்தில் பின்பற்றப்பட்டு வந்த இட ஒதுக்கீட்டு முறைக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் – காலையில் முதலமைச்சர் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். சம்பகம் துரைராஜ் என்பவர் தனக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கொடுக்காதது தவறு என்று குறிப்பிட்டு வழக்கு தொடர்ந்தார். இட ஒதுக்கீட்டு முறை அரசியல் சட்டத்திற்கு எதிரானது என்று அன்றையதினம் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதற்கு எதிராக தமிழக அரசு உச்சநீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்தது. இந்த வழக்கை விசாரித்து 7 நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்ற பெஞ்ச் உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை அன்றையதினம் உறுதிப்படுத்தியது. நமது அரசியல் சட்டம் அமலுக்கு வந்ததற்குப் பிறகு 1951-ல் உச்ச நீதிமன்றம் அளித்த இந்தத் தீர்ப்பு தமிழகத்தில் பின்தங்கிய மக்களிடையே பெருத்த ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்திவிட்டது. 1927 ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் பின்பற்றப்பட்டு வந்த இட ஒதுக்கீட்டு முறையை நீதிமன்றத்தின் தீர்ப்புகள் ரத்து செய்துவிட்டதால் அதற்கு எதிராக அரசியல் கிளர்ச்சி ஆரம்பமானது. தந்தை பெரியார் அந்த இயக்கத்திற்கு ஈட்டி முனையாகத் திகழ்ந்தார். அன்றையதினம் அமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்கள் இட ஒதுக்கீட்டு முறையைத் தொடர்ந்து பின்பற்றப்படும் வகையில் அரசியல் சடடத்தில் உரிய திருத்தம் கொண்டுவரப்படும் என்று இந்த அவையிலேயே அன்றையதினம் உறுதி அளித்திருக்கிறார்கள். பெரும் தலைவர் காமராசர் அவர்கள் இட ஒதுக்கீட்டின் அவசியத்தை பண்டித நேரு அவர்களிடத்திலே

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] *[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]*

விளக்கிக் கூறி அவரை ஏற்றுக் கொள்ளவைத்தார். அதனைத் தொடர்ந்து இந்திய அரசியல் சட்டம் முதன் முறையாக திருத்தப்பட்டது. அதன் விளைவாக ஆர்ட்டிகிள் 15 கிளாஸ் 4 என்ற திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதன் விளைவாக சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பின்தங்கி உள்ள மக்களுக்கு கல்வி பயிலவும் அரசுப் பணிகளில் சேரவும் போதிய இட ஒதுக்கீடு செய்து அன்றைய தினம் வழி வகை செய்யப்பட்டது. பின் தங்கிய மக்களை பெரும்பான்மையாகக் கொண்டுள்ள தமிழகத்தில் இந்த முறை பின்பற்றப்பட்டதால் பலரும் கல்வி பயிலவும் அரசுப் பணிகளில் சேரவும் வாய்ப்பு ஏற்பட்டது.

பிற்பகல் 1.00

தமிழகத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மற்றும் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் உச்ச நீதிமன்ற நீதிபதிகளாகக் கூட வரும் வாய்ப்பு ஏற்பட்டது. மக்களின் பிரதிநிதிகள் ஆட்சி செய்யும் பாராளுமன்ற ஜனநாயக நடைமுறைகள் அமலில் உள்ள நமது நாட்டில் மக்களுடைய எண்ணங்களே ஓங்கி நிற்கும் நிலை இருந்து வருகிறது. உச்சநீதிமன்ற நீதிபதிகளும் உயர்நீதிமன்ற நீதிபதிகளும் அந்த அடிப்படையிலே இன்றுவரை நியமிக்கப்பட்டு வருகிறார்கள். ஆனால் அண்மையிலே உச்சநீதிமன்றம் அளித்த ஒரு தீர்ப்பில் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஏற்றுக்கொள்ளும் நபர்களைத்தான் நீதிபதிகளாக நியமனம் செய்யவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தாலும், உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்தாலும் உச்சநீதிமன்றத்திலே இருக்கிற தலைமை நீதிபதி ஏற்றுக்கொள்கிற நபர்கள் மட்டுமே நீதிபதிகளாக வரமுடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த தீர்ப்பு it has far-reaching consequences. ஏற்கெனவே அளித்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு முற்றிலும் மாறுபட்ட முறையில் அந்தத் தீர்ப்பு அமைந்து இருந்தது. அந்தத் தீர்ப்பை வழங்கிய அரசியல் சட்ட பெஞ்சுக்கு அன்றையதினம் தலைமை ஏற்ற மூத்த நீதிபதியான மாண்புமிகு ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் ஒரு மாறுபட்ட தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அதில் பின் தங்கிய மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் உயர்நீதின்ற மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக வருவதற்கு தற்போது தடையாக உள்ள நடைமுறைகளைப் பற்றி விளக்கிக் கூறியிருக்கிறார்கள். மேலும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே பின் தங்கிய மற்றும் தாழத்தப்பட்ட இன நீதிபதிகள் இருப்பதையும் அந்தத் தீர்ப்பிலே அவர் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். பாராளுமன்ற ஜனநாயக அமைப்பு இருந்து வரும் எல்லா நாடுகளிலேயும், பாராளுமன்றத்தில் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட அமைப்புகளுக்கே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து நாட்டைப் பொறுத்த வரையில் பாராளுமன்றமே உயர் அதிகாரம் படைத்த அமைப்பாக இருந்துவருகிறது. Parliament is Supreme.

அமெரிக்காவிலே நீதிபதிகள் நியமனத்திலே மக்கள் பிரதிநிதிகளுக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. இவற்றிற்கு நேர் எதிர் மாறாக நம்முடைய உச்ச

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1993 நவம்பர் 9

நீதிமன்றத்தின் தீர்ப்பு அமைந்து இருப்பதை 'இந்து' போன்ற ஆங்கில நாளேடுகள் தங்களுடைய தலையங்கத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றன. நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் அவருடைய தீர்ப்பில் மேற்கோள் காட்டிய சில வரிகளை மட்டும் இங்கே நான் குறிப்பிட்டுக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ". . Out of the 18 High Courts in India, 12 had no Scheduled Caste Judges, 14 had no Scheduled Tribe Judges, and 12 had no backward class judges. Out of the total sanctioned strength of Judges of the High Courts only 13 judges were from Scheduled Castes, 7 from Scheduled Tribes and 15 women. The Backward classes were only ten per cent of the sanctioned Judges; the Scheduled Castes and Tribes were 4 per cent and women were three per cent."

The judge stated that the democratic policy is not for a self-perpetuating ``oligarchy and this is the ground reality howsoever unpalatable. ." எனவே உயர்நீதிமன்றமாக இருந்தாலும் உச்ச நீதிமன்றமாக இருந்தாலும் மக்களுடைய கருத்துக்களை அறவே புறக்கணிக்கக் கூடாது, புறக்கணிக்க முடியாது என்பது உலகத்திலே நடைமுறையிலே, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சம்பிரதாயத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று ஆகும். அதனால்தான் 'கமிட்டட் ஜூடிஷியரி' என்று சில நேரம் சொல்வார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் 1930-களில் அமெரிக்காவில் பொருளாதார மந்தம் ஏற்பட்டது. அன்றையதினம் ஜனாதிபதியாக இருந்த ரூஸ்வெல்ட் அவர்கள் "நியூ டீல் லெஜிஸ்லேஷன்" என்று கொண்டுவந்தார்கள். சுப்ரீம் கோர்ட்டுக்குப்போனால் இந்த "நியூ டீல் லெஜிஸ்லேஷன்" அத்தனையும் அடிப்பட்டுக் கொண்டிருந்தது. 1936ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இரண்டாம் முறையாக ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்டபோது, இந்த "நியூ டீல் லெஜிஸ்லேஷன்"-ஐத் தான் முன் வைத்து அவர் போட்டியிட்டார். அப்படி போட்டியிட்டபோது பெரும் வெற்றி பெற்றார் என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. வெற்றி பெற்றதற்குப் பின்னாலே கமிட்டட் ஜூடிஷியரி முறை தனக்குத் தேவைப்பட்டதாலே மாற்றவேண்டிய நிலைமை ஏற்பட்டதா என்றால், இல்லை. ஏன், நீதிபதிகள் புரிந்து கொண்டார்கள். மக்களுடைய எண்ணம் எங்கே இருக்கிறது? மக்களுடைய உண்மையான எண்ணத்தினுடைய பிரதிபலிப்பு என்ன என்பதை அவர்கள் புரிந்து கொண்ட பிறகே தான் கமிட்டட் ஜூடிஷியரி பற்றி யாரும் பேசவும் இல்லை, ஜனாதிபதியிடத்திலே அவர்கள் கேட்டார்கள். இது தேவை என்று நீங்கள் கருதுகீறீர்களா என்று ஜனாதிபதியிடம் கேட்டார்கள். அது அங்கே இருந்த நிலைமை. அதை நான் சுட்டிக்காட்ட வேண்டியது கடமை. குறிப்பாக பின் தங்கிய சமுதாயத்திலே பிறந்து தமிழகத்திலே இருந்து அங்கே சென்ற ஒரு மூத்த நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் அளித்திருக்கிற தீர்ப்பு ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

பிற்பகல் *1.05*

முன்பு ஏற்கனவே ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. அந்தத் தீர்ப்புக்கு எதிராக இன்றையதினம் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அதையும் நாம் கருத்திலே கொள்ள வேண்டுமென்று இந்த கட்டத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தில் இட ஒதுக்கீடு முறை அமல்படுத்துவது போன்றே மத்திய அரசுப் பணிகளுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என்ற அடிப்படையில் மண்டல் கமிஷன் பரிந்துரையின் பேரில் 27% ஒதுக்கப்பட்டிருக்கிறது. வி. பி. சிங் அரசு பிறப்பித்த உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்துவிட்ட பிறகு அதில் தேவையான திருத்தங்களைச் செய்து மத்திய அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. பின்தங்கிய மக்கள் மத்தியில் முன்னேறியவர்களைக் கண்டறிந்து இட ஒதுக்கீடு வழங்குவதிலிருந்து அவர்களை ஒதுக்கிவிட வேண்டும் என்றும் அதுவரை 27% ஒதுக்கீடு பின் தங்கிய மக்களுக்கு வழங்கப்பட கூடாது என்றும் உச்ச நீதிமன்றம் தடையாணை பிறப்பித்தது. அதனைத் தொடர்ந்து அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கூடி அதற்குரிய நடைமுறையை வகுப்பதற்குத் தேவையான ஆலோசனை வழங்குமாறு ஒரு நிபுணர் குழுவை நியமித்தது. பின்னர் அந்தக் குழுவினுடைய பரிந்துரையை ஏற்று 27% இட ஒதுக்கீடு நிலைமை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுத்து இருக்கிறது. பின்தங்கிய மக்களுக்குள்ளே முன்னேறிய மக்களைக் கண்டறிந்து சலுகை பெறுவதிலிருந்து ஒதுக்கிவிடுவதை ஒரு தற்காலிகமான பரிட்சார்த்த முறையாக மட்டுமே மத்திய அரசு இன்றைய தினம் அறிவித்து இருக்கிறது. அதே போல மத்திய அரசின் கல்விக் கூடங்களிலும் பின்தங்கிய மக்களுக்கு 27% இட ஒதுக்கீடு வழங்குவதையும் சாதகமான முறையில் பரிசீலிக்கவும் ஒப்புக்கொண்டிருக்கிறது.

அதே போன்று உயர் தொழில் நுணுக்கம் வாய்ந்த துறைகளிலும் நீதித் துறையிலும் இட ஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. முன்னேறிய உறுப்பினர் ஓரளவு அதிக எண்ணிக்கையில் உள்ள சில வட மாநிலங்களில் இட ஒதுக்கீட்டுக்கு எதிரான கிளர்ச்சிகள் நடைபெற்றாலும் தமிழகம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் அத்தகைய நிலை இல்லை. விதிவிலக்காக விஜயன் போன்றவர்கள் எதிர் குரல் எழுப்பினாலும் மற்றவர்கள் அனைவரும் இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவாகவே இருக்கிறார்கள் என்பது ஒரு யதார்த்தமான நிலையாகும். அத்துடன் 69% இட ஒதுக்கீடு இந்த ஆண்டுக்கு மட்டும் செல்லும் என்பதையும் சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பாக வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் செய்துகொள்ளப்பட்ட மேல் முறையீட்டிலும் முழுமையான விசாரணை இன்றுவரை நடைபெறவில்லை. இடைக்கால தடை உத்தரவு மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது. அதுவும் இருதரப்பு வாதங்களைக் கேட்டு

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [*1993 நவம்பர் 9*

வழங்கப்பட்ட தடை உத்தரவும் அல்ல. ஏற்கனவே சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் தொடர்ந்து பின்பற்றப்பட்டுவந்த நடைமுறையை ஒட்டியும் மருத்துவம், பொறியியல் போன்ற தொழில் கல்லூரிகளில் மாணவர்கள் இன்றையதினம் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். எனினும் உச்சநீதிமன்றத்தின் இடைக்கால தடை உத்தரவுக்கு எதிராக தமிழக அரசு செயல்பட்டுவிட்டதாகக் கூறி நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தொடுக்கப்பட்டு தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. இதை நீதிமன்ற அவமதிப்பு என்று எவ்வாறு கருதமுடியும் என்று விளங்கவில்லை. உச்சநீதிமன்றத்தின் இடைக்கால தடை உத்தரவுக்கு முன்னரே உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை அமல் நடத்தும் வகையில் செயல்பட்டுள்ள தமிழக அரசின் மீது குற்றம் சுமத்துவது சரியாக இருக்க முடியாது என்றே நான் கருதுகிறேன். தமிழக அரசின் கருத்துக்களையும் கேட்டு ஒரு முழுமையான விசாரணைக்குப் பின்னர் தெரிவிக்க வேண்டிய கருத்துக்களை மிகவும் அவசரப்பட்டு அந்த நீதிமன்றம் தெரிவித்து இருப்பதாகவே நான் கருதுகிறேன். அத்துடன் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களின் இட ஒதுக்கீட்டையும் சேர்த்தே உச்சநீதிமன்றத்தின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த மக்களுக்கு வழங்கப்படும் அளவு மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது.

அதே அடிப்படையில் பின்தங்கிய மக்களுக்கு வழங்கப்படும் இட ஒதுக்கீட்டின் அளவும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும் வாய்ப்பு இருக்கிறது. இவற்றை எல்லாம் உரிய முறையில் உச்ச நீதிமன்றத்தின் முன்னர் எடுத்து வைத்து வாதாடினால் வெற்றிபெற வாய்ப்பு ஏராளமாக இருக்கிறது. எனினும் மாதக் கணக்கில் நம்முடைய அரசு தனது கருத்தை தெரிவிக்கும் வகையில் எதிர்மறை தாக்கல் செய்யாமல் இருந்து விட்டதாலும் இடைக்கால தடை உத்தரவை நீக்குவதற்கு தூரித நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் விட்டுவிட்டதாலும் இந்த வருந்தத் தக்க நிலை தோன்றியிருக்கிறது. இதே போன்று மண்டல் கமிஷன் பரிந்துரைக்கு எதிராக உச்சநீதிமன்றம் மறு ஆய்வு செய்யவேண்டும் என்று கோரி மனு செய்த ஒரே மாநிலம் தமிழகம் தான். இருப்பினும் அந்த மறு ஆய்வு மனுவில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாததால் அது பிகிரங்க ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் நீதிபதிகளுடைய அறைகளுக்குள்ளாகவே நிராகரிக்கப்பட்டுவிட்டதாக இன்றைய தினம் மாண்புமிகு முதல்வர் அவர்களே இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். சமூக நீதிவழங்க வேண்டும் என்ற ஆர்வமும், ஈடுபாடும் கொண்டுள்ள சட்ட நிபுணர்களைக் கண்டறிந்து அவர்களின் உதவியுடன் உச்சநீதிமன்றத்தில் தற்போது எழுந்துள்ள சிக்கலுக்கு தீர்வு காணப்பட வேண்டும். மாறாக தமிழக அரசுக்கு வழக்கறிஞர்களாக உச்சநீதிமன்றத்தில் இருப்பவர்களே நமக்கு எதிராக அங்கே ஆஜராகி இருப்பதாக வந்திருக்கும் செய்திகள் வருத்தத்தை அளிக்கின்றன. நமது

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [திரு எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

மாநிலத்தின் ஜீவாதாரமான இட ஒதுக்கீடு பிரச்சினையை ஒரு சம்பிரதாயமான முறையில் அணுகுவது சமூக நீதி வழங்குவதற்கு எந்த வகையிலும் உறுதுணையாக இருக்காது.

பிற்பகல் 1.10

எனவே, மேலும் காலம் தாழ்த்தாமல் சட்ட நிபுணர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து சட்ட ரீதியாக எழுந்துள்ள இந்தச் சவாலை சமாளிக்கவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன். காலையில் கபில் சிபால் அவர்களை நியமித்து இருக்கிறேன் என்று சொன்னார்கள். பெயர் அல்ல முக்கியம். அவர்களுக்கு அதில் நம்பிக்கை இருக்கிறதா? இட ஒதுக்கீடு கொள்கை தேவை என்பதை உணர்வு பூர்வமாக ஏற்றுக்கொள்கிறார்களா என்பது முக்கியம். ஏற்றுக்கொள்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நிச்சயமாக நாம் அமர்த்தலாம். அதில் தவறு கிடையாது. இட ஒதுக்கீடு கொள்கையை ஏற்றுக்கொள்கிறவர்களை மட்டுமே அமர்த்தவேண்டுமென்று இந்தக் கட்டத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். அரசியல் சட்டம் தயாரிக்கப்பட்டபோது இதைப்பற்றி எழுந்த சந்தேகங்களுக்கு டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தெளிவாக விளக்கம் அளித்து இருக்கிறார்கள். இட ஒதுக்கீட்டு அளவை தேவையான அளவுக்கு நிர்ணயித்து வழங்கும் உரிமை அந்த அந்த மாநில அரசுகளுக்குத்தான் இருக்கவேண்டுமென்று டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அன்றைக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய உரையை நான் அப்படியே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். "Backwardness is being left to be determined by the local Government probably with the hope and belief that once theproblem was tackled by the State and the Backward sections were adequately represented in the State services, the problem at the national level shall stand resolved automatically . ." என்று அவர்கள் அந்த அரசியல் சட்ட நிர்ணய சபையில் அன்றைய தினம் பேசியிருக்கிறார்கள். இட ஒதுக்கீடு 50 சதவீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்று டாக்டர் அம்பேத்கர் கூறிய கருத்தை மட்டும் மேற்கோள் காட்டும் உச்ச நீதிமன்றம், மாநில அரசுகளுக்கு உள்ள உரிமையையும், கடமையையும் அவர்கள் குறிப்பிட்டதை கவனத்தில் எடுத்துக்கொண்டதாகவே தெரியவில்லை. மேலும் 50 சதவீதத்தை மிஞ்சக்கூடாது என்று அம்பேத்கர் அவர்கள் குறிப்பிட்டது இட ஒதுக்கீடு எதுவுமே இல்லாத ஒரு கால கட்டத்தில் அவர்கள் தெரிவித்திருக்கிற ஒரு கருத்து. அதுமட்டுமல்லாமல் அரசியல் சட்டத்தில் எந்த இடத்திலேயும் 50 சதவீதத்திற்கு மேல் இட ஒதுக்கீடு கூடாது, போகக்கூடாது என்று எந்தப் பகுதியிலேயும் இல்லை. அதை முழுமையாக உச்ச நீதிமன்றமாக இருந்தாலும், எந்த நீதிமன்றமாக இருந்தாலும் மறைக்கப் பார்க்கிறார்கள். 50 சதவீதத்திற்கு மேல் கூடாது என்று அரசியல் சட்டத்தில் நிச்சயமாக இல்லை.

[திரு எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1993 நவம்பர் 9

ஃபஸில் அலி அவர்களுடைய தீர்ப்பைப் பற்றி காலையில் முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். State of Kamataka - *Vs* - N. M. Thomas என்ற வழக்கில் தீர்ப்பு வழங்கியபோது அவர் இதற்கு எல்லாம் தெளிவாக விடை அளித்து இருக்கிறார்கள். ஒரு மாநிலத்தின் மக்கள் தொகையில் 80 சதவீதத்தினர் பின் தங்கியவர்களாக இருந்து அவர்களுக்கு 80 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கினால் தவறு ஆகுமா? அது 50 சதவீத இட ஒதுக்கீட்டை தாண்டி விட்டது என்பதற்காக செல்லாது என்று அறிவிக்க முடியுமா? என்று கேட்டு, முடியாது என்று அவரே பதிலும் கூறியிருக்கிறார்கள். அவர் அளித்துள்ள இந்த விளக்கத்தை ஒட்டித்தான் கர்நாடக மாநிலத்தில் தேவராஜ் அர்ஸ் முதலமைச்சராக இருந்தபோது 68 சதவீதமாக இட ஒதுக்கீடு உயர்த்தப்பட்டது. அதற்கு ஒரு கமிஷன் கூட நியமித்தார்கள். ஹவனூர் கமிஷன் நியமித்தார்கள். ஆக இந்த ஃபஸில் அலி சொன்ன தீர்ப்பை ஏற்று 68 சதவீதமாக அன்றைய தினம் உயர்த்தினார்கள். அதைப் பின்பற்றி தமிழகத்தில் 68 சதவீதமாக உயர்த்தப்பட்டது, பின்னர் பழங்குடி மக்களுக்கு 1 சதவீதம் என்று உயர்த்தி மொத்தம் 69 சதவீதமாக உயர்த்தப்பட்டது. இந்தப் பின்னணியில் தமிழக அரசின் 69 சதவீத இட ஒதுக்கீடு செல்லாது என்று கூறுவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள இயலாது. எனினும், உச்சநீதிமன்றம் அப்படிப்பட்ட ஒரு கருத்தை தெரிவித்துவிட்ட பிறகு சட்ட ரீதியாக அதனை நாம் சந்திக்கவேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இங்கே அரசியல் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று தீர்மானம் சொல்கிறது, அனைவருமே அதைப்பற்றிப் பேசினார்கள். நான் அதை ஆதரிக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் அதைவிட சுலபமாக இந்திய அரசியல் சட்டம் 31 (சி) அடிப்படை உரிமைதனைப் பயன்படுத்தி 69 சதவீதம் இட ஒதுக்கீட்டை தனிச் சட்டமாகவே நிறைவேற்றி 9-வது ஷெட்யூலில் அதை இடம் பெறச் செய்ய ஒப்புதலுக்கு அனுப்பிவைப்பது மிகவும் சுலபமான ஒன்று. அதையும் சட்ட நிபுணர்களிடத்திலே கலந்தாலோசிக்கவேண்டுமென்று இன்றையதினம் நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 31 (சி) என்ன சொல்கிறது என்று சொன்னால், "Notwithstanding anything contained in Article 13, no law giving effect to the policy of the State towards securing all or any of the principles laid down in Part IV shall be deemed to be void on the ground that it is inconsistent with, or takes away or abridges any of the rights conferred by Article 14, Article 19 . . " இதுதான் இதில் முக்கியம் அவர்கள் சொல்வதெல்லாம் வாதாடுவது எல்லாம் against Article 14, this is against fundamental rights என்று சொல்கிறார்கள். அதற்கு இது தடையாக இருக்காது என்று 31 (சி) சொல்லுகிறது: ". . . Article 14, Article 19 or Article 31; and no law containing a declaration that it is for giving effect to such policy shall be called in question in any court on the ground that it does not give effect to such policy :

Provided that where such law is made by the Legislature of a State, the provisions of this Article shall not apply thereto unless such law, having been reserved for the consideration of the President, has received his assent."

1993 நவம்பர் 9] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

என்று சொல்கிறார்கள். எனவே 31 (சி)-இன் கீழே ஒரு தனி சட்டத்தை இயற்றுவதற்கு நம்முடைய அரசு முன்வரவேண்டும். அதற்காக நீங்கள் நிச்சயமாக சட்ட வல்லுனர்களை கலந்து ஆலோசிக்கலாம். என்னைப் பொறுத்தவரையில், இது மிகவும் சுலபம். 31 (சி)-இலே ஒரு சட்டத்தை நிறைவேற்றி அந்தச் சட்டத்தை ஜனாதிபதியினுடைய ஒப்புதலுக்கு அனுப்பி ஒப்புதல் பெறுவதன் மூலமாக இன்று ஏற்பட்டுள்ள இந்தச் சிக்கலான சூழ்நிலையிலிருந்து விடுபட முடியும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

பிற்பகல் 1.15

அத்துடன் நின்றுவிடாமல் அரசியல் ரீதியாகவும் நாம் இதற்கு ஒரு தீர்வை கண்டாகவேண்டும். தேவையானால், நாம் முதலாவது அரசியல் சட்டத் திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்றியதைப் போன்று, மீண்டும் ஒரு திருத்தத்தைக் கொண்டுவரவேண்டும். ஆனால் ஒரு மாறுபட்ட சூழ்நிலை இன்றைய தினம் நிலவுகிறது. முதலாவது திருத்தத்தை பாராளுமன்றம் நிறைவேற்றியபோது பண்டித நேரு பிரதமராக இருந்தார். பாராளுமன்றத்தில் காங்கிரஸ் பெரும்பான்மை இருந்தது. மாநிலத்திலும் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது. பெரும் தலைவர் காமராஜ் போன்ற தலைவர்கள் நம்மை வழிநடத்திச் சென்றார்கள். இன்றோ மத்தியிலுள்ள காங்கிரஸ் அரசுக்கு போதிய பலம் இல்லாமல் இருக்கிறது. இட ஒதுக்கீட்டை இதயபூர்வமாக ஏற்றுக்கொள்ளாத பாரதீய ஜனதா கட்சி பலம்பெற்ற எதிர்க்கட்சியாக இன்றையதினம் அங்கே விளங்குகிறது. அந்தச் கட்சிதான் தமிழகத்திலிருந்து உச்சநீதிமன்ற நீதிபதியாகச் சென்ற நீதிபதி இராமசாமியை வீட்டுக்கு அனுப்புவதில் முனைப்பு காட்டியது. அதற்காக ஒரு பதவி நீக்கத் தீர்மானத்தையே பாராளுமன்றத்தில் கொண்டு வந்தது. அத்தகைய போக்கு கொண்ட அரசியல் கட்சிகள், நரசிம்மராவ் அரசுமீது நம்பிக்கை இல்லாமல் இருப்பவர்கள். அவர்கள் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வார்களா என்பது ஒரு பிரச்சினை. அதுமட்டுமல்ல, அவர்களோடு சேர்ந்து நரசிம்மராவ் அரசின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக நீங்கள் வாக்களித்து இருக்கிறீர்கள். எனவே, மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் என்று சொன்னால், அவர்களுடைய ஆதரவெல்லாம் நமக்குத் தேவைப்படுகிறது. எனவே, அவர்களோடும் பேசி, இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவு திரட்ட முன்வரவேண்டுமென்று இந்தக் கட்டத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். வி. பி. சிங் அரசு . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலோ அல்லது நாடாளுமன்றத்திலோ ஒரு தீர்மானம் வருகிறபோதோ அல்லது சட்டத்திருத்தம் வருகிறபோதோ ஒரு கட்சி வாக்களிக்கிறது என்று சொன்னால், அந்தப் பிரச்சினையைப் பொறுத்து அந்தக் கட்சி என்ன முடிவு எடுக்கிறதோ அதைப் பொறுத்தது. எனவே,

[திரு. சு. முத்துசாமி] [1993 நவம்பர் 9

வாக்களிக்கிற பொழுது, எல்லோரும், யார் யாரெல்லாம் வாக்களிக்கிறார்களோ அவர்களெல்லாம் ஒன்று என்று எடுத்துக்கொண்டால், திமுக பல பல நேரங்களிலே எதிர்த்து வாக்கு போடுகிறபோது, நீங்களும் போட்டு இருக்கிறீர்கள். அப்படியென்றால், நீங்கள் ஒன்றாக இருக்கிறீர்கள் என்று அர்த்தமா? தினந்தோறும் நீங்கள் போய் பேசிக்கொண்டு இருக்கிறீர்கள் என்று அர்த்தமா? அப்படி அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, பாரதிய ஜனதா கட்சியோடு அண்ணா திமுக சேர்ந்து ஒரு பிரச்சினையிலே ஓட்டு போட்டது என்ற காரணத்தால், பாரதீய ஜனதா கட்சியையும் அண்ணா திமுக-வையும் எப்படி நீங்கள் இணைக்கிறீர்கள்? இதை, எங்கோ திசை திருப்பிக் கொண்டு போகிற நிகழ்ச்சியாக நாங்கள் கருதுகிறோம். எனவே, இதிலே மத்திய அரசாங்கம் இப்போது செய்யவேண்டிய காரியத்தை தட்டிக்கழித்து எங்கோ தள்ளுவதற்கு எடுக்கிற முயற்சி இங்கேயே நடக்கிறது என்பதைத்தான் நான் பகிரங்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்தப் பிரச்சினையிலே உங்களுக்கு அக்கறையில்லை என்பதை இந்த ஒரே வார்த்தை காட்டுகிறது என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இந்த உணர்வுகளை நீங்கள் வேறு விதமாக எங்கோ திருப்புவதற்கு முயற்சி எடுக்கிறீர்கள் என்பதை நான் பகிரங்கமாகச் சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி அவர்கள் அப்பொழுதிருந்தே கேட்டுக்கொண்டிருக்கிறார். திரு. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்திலே நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இங்கே ஆதரித்து, மத்திய அரசு திரும்ப இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்க வேண்டுமென்பதற்காக இங்கே நாங்கள் பேசி இருக்கிறோம். இதை நான் எதிர்க்கட்சித் தலைவருக்காகச் சொல்லுகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதை நான் ஆட்சேபிக்கிறேன். நான் இதை ஏன் கோடிட்டுக் காட்டுகிறேன் என்று சொன்னால், ஒரு தீர்மானத்தின்மீது சேர்ந்து ஓட்டு போட்டாலே ஒன்று சேர்ந்து விட்டதாக ஆகிவிடுமா என்று கேட்கிறார்கள். ஒரு கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருகிறது ஆளுங்கட்சி மீது. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அங்கிருக்கிற ஆளுங்கட்சி பதவியிலிருந்து அகற்றப்பட்டு அந்த இடத்திற்கு ஆளுங்கட்சியாக வரமுடியும் என்கிற

1993 நவம்பர் 9] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

நம்பிக்கையோடு ஒரு தீர்மானம் வருகிறது. பாரதீய ஜனதா கட்சி, நேரடியாக, எதிர்க்கட்சியாக, பிரதான எதிர்க்கட்சியாக, அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சியாக அங்கே வீற்றிருக்கிறது. காங்கிரஸ் கட்சி ஆளுங்கட்சியாக இருக்கிறது. ஆக, தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்குமேயானால் அழைக்கப்படுகின்ற கட்சி பாரதீய ஜனதா கட்சி. அதை யாரும் மறந்துவிடக்கூடாது. There is no choice, because it is the main recognised Opposition Party. அப்படி இருக்கும்போது, அவர்கள் தீர்மானம் கொண்டுவருவதை எங்களாலே புரிந்துகொள்ளமுடிகிறது. அவர்கள் கொண்டுவருகிற தீர்மானத்தை நீங்கள் ஆதரித்தால், நீங்கள் அங்கே ஆளுங்கட்சியாக வரப்போகிறீர்களா? அதற்கு வாய்ப்பாவது அன்றையதினம் இருந்ததா? எதற்காக ஒரு நிலையான அரசாங்கத்தை, ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை எதிர்த்து, அவர்கள் கொண்டு வந்தார்கள் என்கிற ஒரே காரணத்திற்காக நீங்கள் வாக்களித்தீர்களே, அதைச் சுட்டிக்காட்ட வேண்டிய கடமை இருந்தது, சுட்டிக்காட்டினேன். உடனே நீங்கள் என்னை எங்கோ அழைத்துப் போகாதீர்கள்.

பிற்பகல் 1.20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நமது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் தெளிவாகத் தெரிவித்தார்கள். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலே, நாடாளுமன்றத்தில் வாக்களிப்பது என்பது, அவர்கள் சொன்னதைப்போல, சூழ்நிலையைப் பொறுத்தது, பிரச்சினைகளைப் பொறுத்தது. அன்றைக்கு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததே கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள்தான். அதற்குப் பின்னாலே ஜனதா தளக்காரர்களும் ஆதரித்தார்கள். எல்லோரும் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வரும் என்று ஆதரித்தார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கருதுகிறாரா? அப்படி அல்ல. அன்றைக்கு இருந்த பிரச்சினையின்மீது வாக்களிக்கின்றபொழுது அந்தச் சூழ்நிலை வேறு. ஆகவே, கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா தளம் கட்சி, இருக்கின்ற எதிர்க்கட்சிகளெல்லாம் இதற்கு வாக்களித்தார்கள். ஆகவே, இன்றைக்குக்கூட பல்வேறு சூழ்நிலைகளில் நீங்கள் வெளிநடப்புச் செய்கிறீர்கள், எதிர்க்கட்சிக்காரர்கள். மற்ற ஒரு பிரச்சனை என்று வரும்பொழுது எல்லோரும் சேர்ந்து செய்கிறோம். அரசை ஆதரிக்கிறீர்கள். இப்படி அந்தப் பிரச்சினையில் அன்றைக்குச் செய்தோம். ஆக, பிரச்சினைகளைத்தான் பார்க்க வேண்டுமே தவிர, எதிர்த்து வாக்களிப்பது என்பது ஒரு எதிர்க்கட்சியினுடைய கடமை. சூழ்நிலை வருகின்றபொழுது எதிர்த்து வாக்களிக்கலாம். அந்தப்

[திரு. எஸ். கண்ணப்பன்] [1993 நவம்பர் 9

பிரச்சினையையும், இந்தப் பிரச்சினையையும் சம்பந்தப்படுத்துவது என்பது எந்தவகையிலே நியாயம் என்பதை எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தெளிவுபடுத்தவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு முத்துசாமி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மத்தியிலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தபொழுது நீங்கள் எதிர்த்து வாக்களித்தீர்களே, மத்தியிலே நீங்கள் ஆட்சியைப் பிடிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு செய்தீர்களா என்று கேட்டார்கள். நான் அதையே திருப்பிக் கேட்கிறேன். இங்கே தமிழக அரசை நீக்க வேண்டும் என்பதற்காக நீங்கள் வழிநடைப் பயணம் எல்லாம்கூட மேற்கொண்டீர்களே, இங்கே தமிழகத்திலே ஆட்சியைப் பிடிக்க முடியும் என்று நினைத்து நீங்கள் செய்தீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) மத்தியிலே, பாரதிய ஜனதா கட்சியை ஆட்சிக்குக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக ஏதோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களோடு சேர்ந்து ஓட்டுப்போட்டதைப் போலச் சொன்னீர்களே, நீங்கள் இங்கே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதற்காக அந்தக் காரியத்தைச் செய்தீர்களா என்று நான் கேட்டால், இது எங்கோ திசை திரும்பித்தான் போகும். எங்களைப் பொறுத்தவரை, பாரதீய ஜனதாக் கட்சியோடு-ஏற்கனவே புரட்சித் தலைவி அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்--எங்களுடைய கொள்கை என்பது, திராவிட பாரம்பரியத்தினுடைய கொள்கை; அதிலே எந்த மாறுபட்ட கருத்தும் யாருக்கும் தேவை இல்லை. இங்கே எனக்கு இப்பொழுது வருகிற சந்தேகம் எல்லாம், மத்திய அரசாங்கம் இதிலே தலையிட்டு - உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பைச் சொல்கிறது, உச்சநீதிமன்றம் சொல்கிற ஒரு தீர்ப்பை ஒரு மாநில அரசு எப்படிச் செய்யவேண்டும்; செயல்படுத்த வேண்டுமென்பதில் இங்கே யாருக்கும் எந்தச் சந்தேகமும் இருக்கமுடியாது. எனவே, அதிலே மாறுபட்ட தீர்ப்புகள் நான்கைந்து முறை வேறு விதமாக வந்துகொண்டே இருக்கிறது. ஒரு முறை சாதகமாக வருகிறது; ஒருமுறை பாதகமாக வருகிறது. எனவே அதற்கு ஒரு தெளிவான நிலை ஏற்பட வேண்டுமென்று சொன்னால் மத்திய அரசு சட்டத்திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதைத் தவிர வேறு வழியே இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, அப்படி இருக்கிறபொழுது இங்கே ஆரம்பக் கட்டத்திலேயே எதிர்க்கட்சித் தலைவரவர்களே அதை ஒதுக்குவதைப்போல, தட்டிக்கழிப்பதைப் போலச் செய்தால் மத்திய அரசாங்கத்திலே எங்களுக்கு என்ன நம்பிக்கை இருக்கும் என்பதை நீங்கள்

1993 நவம்பர் 9] [திரு. சு. முத்துசாமி]

தயவு செய்து யோசித்துப் பாருங்கள். அன்றைக்கு வந்த தீர்மானத்திலே அன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே செய்த காரியம். அதையும் இதையும் ஒப்பிட்டுப் பேசக்கூடாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழிநடைப் பயணம் மேற்கொண்டது நிச்சயமாக உங்கள் அரசாங்கத்தை நீக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்ட ஒன்று அல்ல. (குறுக்கீடு) I can answer for it.

இரண்டாவது, இன்றுவரையில் உங்கள் அரசாங்கத்தை நீக்க வேண்டுமென்று நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாங்கள் கொண்டுவரவில்லை. அப்படிக் கொண்டுவருகின்ற நேரத்தில் நீங்கள் வருவீர்களா என்று கேட்டால் நிச்சயமாகக் காங்கிரஸ் கட்சிதான் ஆட்சிக்கு வரும். அதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. We will come and not the DMK.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வாழ்க்கை பூராவும் நம்பிக்கையில்லாத் தீர்மானமே கொண்டுவர முடியாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: எங்களைத்தான் அழைக்க முடியுமே தவிர . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

*** மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தால் காங்கிரஸ்தான் ஆட்சிக்குவரும் என்று சொல்லுகின்ற இவர்கள், இடைத்தேர்தல் நடந்த இராணிப்பேட்டையிலே ஏன் வாபஸ் பெற்றார்கள் என்பதை நாட்டுமக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசுகிறார். எதிர்க்கட்சித் தலைவர் பேசும்பொழுது அமைச்சர்கள் குறுக்கிட்டு இருக்கிறார்கள். (குறுக்கீடு) கிளாரிபிகேஷன் இன்னொரு உறுப்பினர் கேட்கமுடியாது. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் பேசும்பொழுது சில பேர் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதற்குத் திரும்ப லீடர் ஆப் தி ஆப்போசிஷன் சொல்லாமல் இருக்க மாட்டார்கள். அவர் இப்பொழுது சொல்லப் போகும் பொழுது எதற்காக நீங்கள் எழுந்திருக்கிறீர்கள்?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: அவர் ஈஸ்ட் ஆகிறார்.

[*1993 நவம்பர் 9*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் ஈல்ட் ஆகலாம். But, if it is not relevant, நான் உங்களை அனுமதிக்க முடியாது. அமைச்சர்கள் பேசியிருப்பது, அமைச்சர்கள் சொல்லிருப்பது, எதிர்க்கட்சித் தலைவருடைய பேச்சுக்குப் பதில். அதற்கு எதிர்க்கட்சித் தலைவரே சொல்லுவார். உட்காருங்கள். (குறுக்கீடு) அப்படி என்றால் எல்லா உறுப்பினர்களும் எழுந்திருக்க முடியாது. உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

பிற்பகல் 1.25

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவேளை ஆபத்து ஏற்பட்டு இருக்குமேயானால், பாரதிய ஜனதா ஆளுங்கட்சியாக வந்திருக்குமேயானால், நாம் இங்கே இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினால் எந்தவிதப்பயனும் இருக்காது. ஏனென்றால், அவர்கள் இதை அங்கீகரிப்பதில்லை; ஏற்றுக்கொள்வதில்லை என்பதை மனதில் கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொன்னேன். வி. பி. சிங் அரசு, 1990ஆம் ஆண்டு . . . . (குறுக்கீடு)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த விவாதம் முடியட்டும். (குறுக்கீடு) அமைச்சர்கள் குறுக்கிடுவதற்கு நம்முடைய விதிகளில் எப்போதும் உரிமை இருக்கிறது. (குறுக்கீடு) அதற்காக அந்த விதியைப் பயன்படுத்திக்கொண்டு, 234 உறுப்பினர்களுமே . . . (குறுக்கீடு)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டரா? அமைச்சர்கள் உட்காருங்கள், நீங்கள் கேட்கும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான தீர்மானத்தின்மீது விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. அமைச்சர்கள் தங்கள் துறைகளைப் பற்றிய விளக்கங்களைச் சொல்வது இல்லை. அவர்கள் குறுக்கீடு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களும் மெம்பர் என்ற முறையிலேதான் . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சி தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வி. பி. சிங் அவர்கள் ஆகஸ்ட் மாதம் 13ஆம் தேதி, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்தக் கோரிய ஆணையை . . . (குறுக்கீடு)

1993 நவம்பர் 9]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . (குறுக்கிடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அமைச்சர் அவர்களை அனுமதித்திருந்தேன். உறுப்பினர் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டார். அதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொன்னேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இப்போது இருக்கிற ஒரு சங்கடமான உணர்வு என்னவென்றால், நாங்கள் சொல்கிறோம், எத்தனை முறை என்ன நடந்தாலும் மீண்டும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் தமிழகத்திலே ஆட்சிக்கு வரும். (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால், நீங்கள் சொல்வதைப் பார்த்தால், ஒருவேளை நடந்துவிட்டால், பாரதிய ஜனதா வந்துவிடுமோ, வந்துவிடுமோ என்று இங்கே சொல்கிறார்கள். நாங்கள் அப்படிச் சொல்லவில்லை. பாரதிய ஜனதா ஆட்சியைப் பிடித்துவிடும் என்று என்றைக்கும் நாங்கள் சொல்லவில்லை. இன்றைக்கு நீங்கள் சொல்கிறீர்கள். எங்களுக்கு இங்கே இருக்கிற இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், என்னுடைய மனதிலே இருக்கிற உணர்வுகளை இங்கே நான் பிரதிபலிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே இந்த நாட்டு மக்கள் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆராய்ந்து கொண்டிருக்கிற ஒரு பிரச்சினையாக இது இருந்து கொண்டிருக்கிறது. எனவே, மத்திய அரசாங்கம் இதிலே அதிக அக்கறைக் காட்டவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே, இதற்கு முன்னாலே ஒரு தீர்மானம்; இன்றைக்கு ஒரு தீர்மானம். ஆனால், இதிலே பார்த்தால், கர்நாடகாவிலே ஏற்பட்ட காவிரிப் பிரச்சினையிலே இதேபோன்று ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அன்றைக்கு காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில், கர்நாடக அரசின் காவிரிநீர்ப் பிரச்சினையில் இங்கே சொல்வதைப் போல நடந்துகொண்டிருந்த காரணத்தால், அன்றைக்கு நம்முடைய உணர்வுகள், உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கிற நிலை, இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படாத ஒரு சூழ்நிலை அந்தப் பிரச்சினையிலே இருந்து கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையிலேயும் அதேபோன்று ஏற்பட்டுவிடுமோ என்ற உணர்வு எதிர்க்கட்சித் தலைவருடைய பேச்சிலே கொஞ்சம் ஒடுகிறது என்பதை மட்டும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, அதற்கு உத்தரவாதமாக மத்திய அரசாங்கத்திற்கு, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த எதிர்க்கட்சித் தலைவர் தேவையானால், நேரடியாகச் சென்றுகூட, இதைச் செய்வதற்கு அவர்கள் முழு மனதோடு இருக்கிறார்களா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[1993 நவம்பர் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மீண்டும் மீண்டும் உள்நோக்கம் கற்பித்துப் பேசுவது தவறு. நான் முன்பே சொல்லியிருக்கிறேன். இந்த அவையிலே நான் பேசியிருக்கிறேன். இப்போதும் பேசுகிறேன். 69 சதவிகிதம்தான் தமிழ்நாட்டிலே இட ஒதுக்கீடு இருக்கவேண்டும் என்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் எங்களுக்குக் கிடையாது. முழுமையாக நாங்கள் ஆதரிக்கிறோம். (குறுக்கீடுகள்) ஆதரித்து, ஒன்றுமே பேச வேண்டாமென்றால், இன்றைக்கு 'டிபேட்டே' வேண்டாமே? (குறுக்கீடுகள்) விவாதம் வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்கார்ந்து கொண்டு யாரும் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: பேசவே வேண்டாமா? கையைத் தூக்கிவிட்டுப் போய்விடலாமா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கட்டுப்படுத்துகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: எங்களுக்கு அதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. விவாதம் என்று வருகிற நேரத்திலே சில பிரச்சினைகளை எதிர்வரிசையிலே இருந்து எடுத்துவைக்கக்கூடாது என்று ஆளுகின்ற வரிசையிலே இருப்பவர்கள் நினைப்பது எப்படி சரியாக இருக்கும் என்பதற்கு நீங்கள்தான் தீர்ப்பு வழங்கவேண்டும். நாங்கள் எங்களுடைய எண்ணங்களைச் சொல்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கருத்துக்களைச் சொல்லக்கூடாது என்று யாரும் கருத முடியாது. இந்தப் பேரவையிலே. எல்லா உரிமைகளும் உண்டு. அப்படி யாரும், இந்தத் தரப்பிலேயிருந்து பேசக்கூடாது என்று சொன்னதாக இல்லை. தாங்கள் எடுத்து வைத்த விவாதத்திற்கு சில குறிப்பிட்ட பிரச்சினைகளில் அவர்கள் பதில் சொல்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர்.

பிற்பகல் 1.30

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: அதற்கு உள்நோக்கம் கற்பிக்க முனைவது எந்த அளவு சரியாக இருக்கும் என்பதை நான் அறிய விரும்புகிறேன். அங்கே பாரதிய ஜனதா வந்துவிடுமோ என்று அஞ்சப்படுவதாகச் சொல்கிறார்கள். அது யதார்த்தமான நிலைமை. அதேபோல, இங்கே ஒரு நிலைமை வருமேயானால், எங்களைத்தான் அழைக்கவேண்டும் என்பதும் யதார்த்தமான உண்மை. அதைத்தான் நான் இரண்டுமுறை சொன்னேன். இப்போதும் மீண்டும் சொல்கிறேன். திரு. வி. பி. சிங் அரசு, 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ஆம் தேதி, மண்டல்

1993 நவம்பர் 9] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்தக் கோரும் ஆணையை வெளியிட்டது. ஏற்கெனவே ஆகஸ்ட் 7ஆம் தேதி தனது முடிவை வி. பி. சிங் பகிரங்கமாக அறிவித்திருந்தார். அரசியல் ஆதாயம் கருதி, அவசர அவசரமாக அவர் அறிவித்த முடிவாலும், பிறப்பித்த உத்தரவாலும் நாட்டின் பல பகுதிகளிலும் கிளர்ச்சிகள் அன்றையதினம் வெடித்தன. இட ஒதுக்கீடுக்கு எதிராக நடைபெற்ற அந்தக் கிளர்ச்சிகளில் நூற்றுக்கணக்கான மாணவர்களும், இளைஞர்களும் பலியானார்கள். தேர்ந்து தெளியாமலும், சிந்தித்து, நிதானமாகச் செயல்படாததாலும் எதிர்ப்பு வலுப்பட்டது. ஆனால் தற்போதைய மத்திய அரசு பல்வேறு மட்டங்களிலும் விவாதங்களை நடத்தியும், கருத்துக்களைக் கேட்டறிந்தும், நிதானமாகச் செயல்பட்டது. சென்ற 1991ஆம் ஆண்டு செப்டம்பர் 25ஆம் தேதியன்று மீண்டும் அதற்குரிய ஆணையைப் பிறப்பித்து. அதற்கு எதிர்ப்போ, கண்டனமோ எந்தத் தரப்பிலிருந்தும் கிளம்பவில்லை. இருப்பினும் உச்சநீதிமன்றம் ஏற்படுத்திய தடையால் சற்றுக் காலதாமதம் ஏற்பட்டது. இறுதியில் தடைகள் அனைத்தையும் தகர்த்து, வெற்றி கொண்டுவிட்டது. அதேபோன்று நம்முடைய மாநில அரசும் 69 சதவிகித இடஒதுக்கீட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளைத் தகர்த்து வெற்றி பெறவேண்டுமென்று நான் உளப்பூர்வமாக விரும்புகிறேன். அதற்கு நிச்சயமாக எங்களுடைய ஆதரவு உள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நோக்கத்தோடு நாங்கள் அளிக்கும் விளக்கங்களையும், வழங்கும் ஆலோசனைகளையும் ஆக்கபூர்வமாக ஏற்று, இந்த அரசு செயல்படவேண்டும். ஆனால் மாற்றுக் கருத்துக்களும், விமர்சனங்களும் வருவதே தவறு என்று கருதும் போக்கு நிச்சயமாக வருந்தத்தக்கது.

சென்னைப் பல்கலைத் கழகத்திலும், வேறு பல்கலைக் கழகங்களிலும் உயர் கல்விக்கு மாணவர்களைச் சேர்க்கும்பொழுதும், ஆசிரியர்களை நியமிக்கும்பொழுதும் இட ஒதுக்கீட்டு முறை சரியாகப் பின்பற்றப்படுவது இல்லை என்ற குறை இருந்து வருகிறது. ஏற்கனவே இந்த அவையில் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்களையொட்டி ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்கப்படும் என்று இங்கே உறுதிமொழி அளிக்கப்பட்டது. ஆனால் இன்றுவரை அத்தகைய கமிஷன் எதுவும் அமைக்கப்படவில்லை. பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பதிவாளர் நியமனத்தில் விதிகளுக்குப் புறம்பாக இந்த அரசு நடந்து கொண்டதையும், அதனால், (குறுக்கீடு) நான் பாயிண்டை முடிக்கவில்லை. அப்புறம் நீங்கள் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் முடித்து விடட்டும். பிறகு நீங்கள் பதில் சொல்லுங்கள்.

[1993 நவம்பர் 9

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அதனால், அரசின் பரிந்துரையை அந்தப் பல்கலைக் கழகத்தின் சிண்டிகேட் நிராகரிக்க நேர்ந்ததை இந்த அவையில் குறிப்பிட்டுப் பேசினேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறையே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இந்தக் குற்றச்சாட்டை இங்கே தெரிவித்து அதற்கான பதிலை நான் இந்த மன்றத்திலே அளித்திருக்கிறேன். இப்போதும் அதை உறுதிப்படுத்த விரும்புகிறேன். பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் பதிவாளராக ஒருவர் அரசுத் தரப்பில் இருந்து அனுப்பப்பட வேண்டும் என்று அவர்கள் கேட்டதற்கு இணங்க வழக்கம்போல் ஒருவர் பெயர் அனுப்பப்பட்டது. ஆனால் சிண்டிகேட்டில் எங்களுக்கு ஒரு பேனல் -- மூன்று பெயர்கள் வேண்டுமென்று கேட்டார்கள். இப்போது மூன்று பேர் பெயர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதுதான் உண்மையே தவிர, யாரும் அங்கே நியமனம் செய்யப்படவில்லை என்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிறைவேற்றிய சட்டம் அந்தச் சட்டம். பல்கலைக் கழகத்திற்குப் பதிவாளர் எப்படி நியமிக்கப்பட வேண்டுமென்று அரசுக்குத் தெரியும். அந்தக் குழுவிலே அரசின் செயலாளர் இருக்கிறார். ஆளுநர் தரப்பில் நியமிக்கப்பட்ட ஒருவர் இருக்கிறார். சிண்டிகேட் சார்பில் ஒருவர் இருக்கிறார். அவர்கள் மூன்று பேரும் தேர்வு செய்ததற்குப் பின்னாலேதான் மீண்டும் சிண்டிகேட்டுக்குப் போய் யார் பதிவாளர் என்பதை அவர்கள்தான் தேர்வு செய்யவேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேராசியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரிடையாக விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஒரு பதிவாளர் தேர்வு செய்யப்படும்போதுதான் அந்த முறை இங்கே பின்பற்றப்படவேண்டுமே தவிர, அரசிடமிருந்து On Deputation என்று கேட்கும்போது இந்த முறை பின்பற்றப்படுவது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, [illegible] யாருமே நியமிக்கப்படவில்லை என்று அன்றும் சொன்னார்; [illegible]ார்; உண்மையா? நியமிக்கப்பட்டார். நான் படிக்கிறேன்:

1993 நவம்பர் 9] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

GOVERNMENT OF TAMIL NADU

Abstract

Tamil Nadu Collegiate Education Service–Principals–Transfers and postings–Orders issued.

Education (F-1) Department

G.O. Ms. No. 935, Dated: 5-10-1993

Read:

From the Commissioner, Collegiate Education D. O. Letter Rc. No. 33476 E1/93, dated 3-9-1993.

ORDER:

The following transfers and postings are ordered with immediate effect.

Dr. R. Muthiah, Principal, Periyar E. V. R. College is transferred and posted as Registrar, Bharathidasan University, Tiruchirappalli on deputation in the existing vacancy.

Thiru C. S. Narasimhan, Principal, Vidhyasagar College of Arts and Science, Udumalpet, on foreign service terms and conditions is transferred and posted as Principal, Periyar E. V. R. College, Trichy vice Dr. R. Muthiah, transferred.

(By Order of the Governor)

என்று தெளிவாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*** மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெபுடேஷனிலே அவர்கள் அனுப்படவேண்டுமென்று கேட்டதால் இந்த ஆணை அனுப்பட்டது. ஆனால் சிண்டிகேட் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிந்ததற்குப் பின்னால் அவர் ரிலீவ் செய்யப்படவும் இல்லை. இப்போது திரு. முத்தையா அவர்கள் பெரியார் ஈ. வே. ரா. கல்லூரியிலே தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார். திரு. நரசிம்மன் அவர்கள் இன்னும் அவர் பணியாற்றும் அந்தக் கல்லூரியிலேயே இருந்து வருகிறார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தவறான தகவல்களை இந்த அவைக்குத் தரவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1.55

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: எப்படித் தவறான தகவல் (குறுக்கீடு)

[*1993 நவம்பர் 9*

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: நியமனம் பெறவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவு திரும்பப்பெறப்பட்டது என்று சொல்கிறார். நீங்கள் நியமித்து விட்டார்கள் என்றே சொன்னீர்கள். அதைச் சொல்கிறார்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: நியமிக்கப்படவில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை இருக்கிறது. நியமிக்கவே இல்லை என்று சொல்கிறார். நியமன உத்தரவு நீங்கள் பிறப்பித்திருக்கிறீர்கள். அந்த உத்தரவை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் இருந்த இடத்திற்கு இன்னொரு பிரன்சிபால் மாற்றம் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: Sir, that order has not been given effect. That has been withdrawn. A panel has been sent to the University for selection. டெபுடேஷன் கேட்டதற்காக ஆர்டர் போட்டிருக்கிறோம். அதை withdraw பண்ணியிருக்கிறோம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வார்த்தைகளை இன்னும் கூட ஜாக்கிரதையாக நான் போட்டேன். பரிந்துரை என்று சொன்னேன், நியமித்தார் என்றுகூடச் சொல்லவில்லை. பரிந்துரை என்று சொன்னேன். அதையே கூட எதிர்த்தார். பரிந்துரை கூட அல்ல .He was appointed. It is clear in the G. O. It is there for all to see. G. O. Ms. No. இருக்கிறது. அரசுச் செயலாளர் கையெழுத்து போட்டிருக்கிறார். அரசுச் செயலாளர் வெளியிட்டிருக்கிறார். இதிலே ஜி. ஓ. இருந்து நாங்கள், செய்யவில்லை என்று சொன்னால் எப்படிப்பொருள்? தவறு நேர்ந்து இருக்குமேயானால், அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமே தவிர எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து எதைப் பேசினாலும் இல்லை, இல்லை என்று சொல்லிக் கொண்டிருப்பதிலே எந்தவிதமான பொருளும் இருக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. இதுபோன்று அவசரப்பட்டு, பேசுவதற்கு முன்பாகவே பதில் சொல்வதும், எங்களுடைய வாயை அடைப்பதும் . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முறையல்ல. (குறுக்கீடு) நான் இருந்து அவையை நடத்துகிறேன். நடத்துகிறபோது எதிர்த்தரப்பிலே இருந்து உங்களுக்குப் பதில் சொன்னால் உங்கள் வாயை அடைக்கிறார்கள் என்று . . . . . (குறுக்கீடு) இல்லை. தங்களுக்கு முழு உரிமை கொடுத்துப் பேச அனுமதித்து, உங்களுடைய பேச்சுக்கும் உரியவகையில் பதில் சொல்லி இங்கே அவை நடந்துகொண்டிருக்கிறபோது, அவையினுடைய நடவடிக்கைகளையே நீங்கள் குறை கூறிப் பேசுகிறபோது நான் குறுக்கே வரவேண்டியிருக்கிறது.

1993 நவம்பர் 9]

Thiru P.V. Rajendran: It is the Privilege of the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பிரிவிலெஜ் இல்லை. (குறுக்கீடு) அவையில் நான் என்ன வேண்டுமானாலும் பேசுவேன், அதற்கு யாரும் பதிலே சொல்லக்கூடாது என்பதைப் போலத்தான் இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவருடைய பேச்சு இருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *எதிர்க்கட்சித் தலைவர் ஒரு குற்றச்சாட்டையோ, ஒரு கருத்தையோ சொல்கிறபோது நாங்கள் அதை மிக்க மதித்து அதற்கு பதில் சொல்ல வேண்டுமென்றுதான் சொல்கிறோம். எனவே, எதிர்க்கட்சித் தலைவரே இந்தப் பிரச்சினையை சொல்கிறாரே, அதற்கு பதில் சொல்லாமல் விட்டுவிட்டால் அது மரியாதைக் குறைவாக இருக்குமோ என்றுகூட நாங்கள் கருதுகிறோம். நீங்கள் அதையேகூட தவறாக எடுத்துக்கொண்டால், எதற்கும் நீங்கள் பேசுவதைப் பற்றியே கவலைப்படாமல் இருந்துவிட்டுப் போகலாமா? ஒரு பிரச்சினையை நீங்கள் சொல்கிறீர்கள். உங்களுக்கு யாராவது தவறாகக் கொடுத்து இருக்கலாம். இந்த ஜி. ஓ.வைக் கொடுக்கிறார்கள். இந்த ஜி. ஓ.வை கேன்சல் செய்ததை உங்களிடத்திலே கொடுக்காம்ல் விட்டிருப்பார்கள். உங்களிடத்திலே 1991ஆம் ஆண்டு பிரச்சினையை இப்பொழுது கொண்டுவந்து கொடுக்கிறார்கள். எனவே, இது எல்லாம் நடக்கிற பிரச்சினை. அப்படியிருக்கிறபோது, எங்களிடத்திலே பதில் இருக்குமானால் அந்தப் பதிலை உடனே சொல்கிறோம். எனவே, நீங்கள் சொல்கிற குற்றச்சாட்டுக்கு உடனடியாக பதிலைச் சொல்ல வேண்டுமென்ற ஆர்வமேயொழிய, அதிலே உங்கள் வாயை அடைக்க வேண்டுமென்ற நோக்கம் எங்களுக்கு எப்போதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுடைய ஆர்வத்தை நான் மெச்சுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்றாலும் நாங்கள் என்ன பேசுகிறோம் என்பதைக் கொஞ்சம் காதுகொடுத்துக் கேட்ட பிறகு பதில் சொல்லலாம். மீண்டும் மீண்டும் நான் சொல்கிறேன். அன்றையதினம் நியமனம் என்று சொன்னதை இல்லை, இல்லை, தவறான தகவல் நான் தந்ததாகச் சொன்னார். இன்றையதினம் பரிந்துரை என்று சொன்னேன். அதையும் தவறான தகவல், வேண்டுமென்றே எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்திருக்கிறார் என்று சொன்னார். அது பரிந்துரை அல்ல நியமனம்.. He was appointed by a G. O. That was not accepted by the Syndicate. The Syndicate has rejected it. It is the fact. அதைச் சொன்னால் அதுவும் தவறு என்று சொன்னால், நான் வேறு எப்படித்தான் பேசுவது.*

[*1993 நவம்பர் 9*

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Syndicate has deferred it. They have not rejected it.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: சரி நீங்கள் இல்லையென்று சொன்னீர்களே, ஜி. ஓ. இருக்கிறதே. அதற்கு என்ன சொல்கிறீர்கள். சமூக நீதி வழங்க வேண்டுமென்று கூறுகிறோம். அதற்காக பின்தங்கிய சமுதாயங்கள், மிகவும் பின்தங்கிய சமுதாயங்கள் என்ற பட்டியலைத் தயாரிக்கிறோம். ஆனால், அதேநேரத்தில் மிகவும் பின்தங்கிய வகுப்பினர் என்று அறிவிப்பவர்களில் பலரும் ஜாதிச் சான்றிதழ்கள் பெறுவதில் பல்வேறு இடர்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதற்கு எதிராக அந்தச் சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள் முறையீடு செய்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து பல்வேறு போராட்டங்களை நடத்தியும், இதுவரை பலன் எதுவும் ஏற்படவில்லை. உதாரணமாக தொட்டிநாயக்கர் என்ற சமூகம் பின்தங்கிய வகுப்பினர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பின்தங்கிய வகுப்பினர் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கின்றது. அந்தச் சமூகத்தினருடைய உப பிரிவினர்களாக கொள்ளவார், சிள்ளவார், தோக்களவார், ராஜகம்பளம் மற்றும் தொழுவ நாயக்கர் ஆகிய பிரிவினர்கள் அடங்கி உள்ளனர்.

இவர்கள் ஆர். டி. ஓ. விடம்தான் ஜாதிச் சான்றிதழ் பெறவேண்டுமென்று புதிதாக ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சேலம் மாவட்டத்திலே தவறு நடந்துவிட்ட ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்டி மாநிலம் முழுவதற்கும் இப்படி ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். இதனால் அவர்கள் ஜாதிச் சான்றிதழ் பெறுவதிலே இடர்ப்பாடுகள் ஏற்பட்டு, இன்னல்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை. பேரவைத் தலைவரிடத்திலே முறையிட்டிருக்கிறார்கள்; அதனால் அவர்களுக்குத் தெரியும். அதைப்போன்று வருவாய்த் துறை அமைச்சரிடம் முறையிட்டிருக்கிறார்கள். எனினும் இன்றுவரையில் தீர்வு எதுவும் ஏற்படவில்லை.

பிற்பகல் 1.40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவருக்கு இருக்கிற உரிமையை மற்றவர்கள் பறித்துக்கொண்டு போகக்கூடாது என்பதிலும், அதிலே அரசு கவனமாக இருக்கவேண்டும் என்பதிலும் இந்த அரசு கவனம் செலுத்தி, கவனமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்கள் சொன்னார்கள். தவறாக

1993 நவம்பர் 9] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

ஜாதிச் சான்றிதழ் கொடுத்துவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர் குறிப்பிட்டிருக்கிற காட்டுநாயக்கன், மற்றவர்கள் எல்லாம் ஆதிதிராவிடர்களுக்கு என்ன உரிமை இருக்கிறதோ அந்த உரிமைகளை எல்லாம் இவர்களும் பெறுகிறார்கள். ஆதிதிராவிடர்களுடைய உரிமைகளைப் பெறுகிறபோது ஆதிதிராவிடர் அளவுக்கு இவர்கள் இருக்கிறார்களா இல்லையா என்று பார்க்க வேண்டியிருக்கிறது. இவர்களுக்கு மட்டுமல்ல, மலைவாசிகளுக்குக் கூட ஆர். டி. ஓ. தான் கொடுக்கிறார். நீங்கள் கொடுக்கிறபோது தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னால் அதை நான் விரைவுபடுத்துகிறேன். ஆனால் கேட்கிறவர்களுக்கு எல்லாம் கொடுத்துவிட்டால் இதிலே தவறு ஏற்படுவதற்கு வழியிருக்கிறது. அதனால்தான் 'ரெஸ்பான்சிபிள் பர்சன்' அதைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை.

இதிலே எத்தனையோ பேர் இப்படி மாறி வாங்கிக்கொண்டு போயிருக்கிறார்கள். அந்த விவரங்களை, பெயர்களை எல்லாம் இங்கே சொல்ல முடியும்; ஆனால் சொல்லத் தேவையில்லை. நல்ல வசதி படைத்தவர், அவர் ரெட்டியார் வகுப்பைச் சேர்ந்தவர்; நல்ல இடத்தில் இருக்கிறவர், அவர் இங்கே வெட்டரினரி காலேஜிலே பெரிய போஸ்டில் இருக்கிறார். அவருடைய மகனுக்கு ரெட்டியார் என்று சொல்லி, ஷெட்யூல்டு காஸ்ட் (குறுக்கீடு) ஆம். கொண்டாரெட்டி என்று ஜாதிச் சான்றிதழ் வாங்க வேண்டுமென்று முயற்சி செய்துகொண்டிருக்கிறார். என்னை வந்து பார்த்தார். நான் என்ன செய்ய முடியும்? நான் முறையாக அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறேன். என்னைப் பார்த்தவுடனே உத்தரவு போட்டுவிட முடியாது. இப்படிப்பட்டவர்கள் எல்லாம் வருகிறார்கள் என்றால் அவர்கள் எல்லாம் உண்மையானவர்கள் அல்ல. உண்மையாக சிலர் வருகிறார்கள். அப்படி இருந்தால் உடனே கவனிக்கிறேன். ஆனால் தனக்கு இருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்தி, வருவாய்த்துறை அமைச்சரிடத்திலே சொல்லி வாங்கிவிடலாம் என்கிறபோது தான் அவர்கள் ஏமாறுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ சில தவறுகள் நடைபெறக் கூடும்; இல்லை என்று நான் சொல்லவில்லை. ஏதோ இவர்கள் கிட்டத்தட்ட most of them are nomads. காட்டு நாயக்கன் பற்றிச் சொன்னார்கள். நரிக்குறவர்கள் இருக்கிறார்கள். வேட்டுவக் கவுண்டர்கள் இருக்கிறார்கள். அதைப்போல குறும்பக் கவுண்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஆர்.டி.ஓ.விடம் போக வேண்டுமென்று சொல்லும்போது எங்களாலே ஜாதிச் சான்றிதழ் வாங்க முடியவில்லை என்று பலமாகப் புகார் வருகிறது. அதைக் கொஞ்சம் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1993 நவம்பர் 9

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதிச் சான்றிதழ் என்பது இப்போது வருஷா வருஷம் கொடுக்கப்படுவதில்லை. ஜாதிகள் வருஷாவருஷம் மாறுவதில்லை. அவர்களுடைய வருமானம் வேண்டுமானால் வருஷாவருஷம் மாறும். ஆகையால் இப்போது நிரந்தரமாக ஜாதிச் சான்றிதழ் கொடுத்துவிடுகிறோம். கடைசி நேரத்தில் கேட்டு, காலதாமதம் ஏற்படுவதால் உரிய நேரத்தில் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறோம். நானே பல நேரங்களில் செய்தித்தாள்கள் மூலமாகச் சொல்கிறேன். ஜாதிச் சான்றிதழ் நிரந்தரமானது, எப்போது வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம். அதை எல்லாம் அப்போதே வாங்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று பார்த்தால் முதலிலேயே ஜாதிச் சான்றிதழ் வேண்டுமென்று கேட்டால் நன்றாக ஆராய்ந்து, அந்த ஜாதி இல்லை என்று சொல்லிவிடுவார்கள் என்று நினைத்து, கடைசி நேரத்தில் கல்லூரிக்குப் போகவேண்டுமென்று கேட்டால் உடனே கொடுத்துவிடுவார்கள் என்று கருதி கடைசி நேரத்தில் கேட்கிறார்கள். இப்படி தவறு செய்பவர்கள்தான் கடைசி நேரத்தில் வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: பல்வேறு பிரச்சினைகள் பல்வேறு மாவட்டங்களிலே இருந்து என்னுடைய கவனத்திற்குக்கொண்டு வரப்படுகின்றன. குறிப்பாக குறும்பக் கவுண்டர். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேட்டுவக் கவுண்டர் என்று தமிழ்நாட்டிலே ஜாதிச் சான்றிதழ் வாங்குவதிலே கஷ்டம் என்று சொன்னார்கள். நான் பணிவன்போடு இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்வது, இப்போது மத்திய அரசு அறிவித்த மண்டல் கமிஷன் அறிக்கையிலே இந்த வேட்டுவக் கவுண்டர் சமுதாயம் குறிப்பிடப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதே மிகப்பெரிய கேள்விக் குறியாக இருக்கிறது. அவர்கள் பழனி நாடாளுமன்றத் தேர்தலின்போதுகூட நாங்கள் தேர்தலைப் புறக்கணிக்கிறோம் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) இன்றும் சேலம் மாவட்டத்திலே எங்களுக்கு வேட்டுவக் கவுண்டர். . . .

பிற்பகல் 1.45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேட்டுவக்கவுண்டரைப் பொறுத்தவரையில் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது என்கிறார். அது கஷ்டமாக இருக்கிறதா இல்லையா என்று சொல்லலாம்.

திரு. வி. கே. சின்னசாமி: வேட்டுவக் கவுண்டர் சமுதாயத்தை தமிழகம் முழுவதும் மிகப் பிற்பட்டோர் பட்டியிலே வைத்து தமிழக அரசு நடைமுறைப்படுத்திக்கொண்டு வருகிறது. ஆகவே டெல்லியிலே அறிவித்த

1993 நவம்பர் 9] [திரு. வி. கே. சின்னசாமி]

அந்த அறிவிப்பிலே இந்தச் சமுதாயம் உள்ளதா என்பதை அறியத்தான் அவர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடு) டெல்லியிலே இருக்கிற அறிவிப்பிலே இருக்கிறதா என்று பாருங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே நேற்றைய தினம்கூட சிலர் சந்தித்து மனு கொடுத்திருக்கிறார்கள். சில இடங்களிலே அதில் பிரச்சினை இருக்கிறது.. ஏதோ ஒரு இடத்தில் இல்லை என்று சொல்வதால் பிரச்சினை இல்லை என்பது முறையல்ல. பிரச்சினை இருக்கிறது. பிரச்சினைகள் நிச்சயமாக இருக்கின்றன. எனவே தான் என்னிடத்திலே சொன்னார்கள். அதேபோல குறவர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மற்ற மாநிலங்களில் ஷெட்யூல்ட் ட்ரைப் என்று இருக்கும்போது நம்முடைய மாநிலத்தில் மட்டும், அதாவது இங்கே மட்டும் பி.சி. யாக வைக்கப்பட்டிருப்பதாகக் கூறி என்னிடத்தில் முறையிட்டார்கள். அதேபோல் குரும்பக் கவுண்டர் பற்றி நான் சொல்ல வந்தேன். ஊட்டியிலே பிறந்தால் தான் எஸ்டி., அவர்கள் கோயம்புத்தூருக்குக் கூட வர வேண்டாம், மேட்டுப்பாளையத்திற்குக் கூட வரவேண்டாம். கல்லாரிலே பிறந்தால் They become. . .

*** மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறவன் எஸ்.சி. யிலே தான் இப்போதும் இருக்கிறது. முறையாக சாதிச் சான்றிதழும் கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே நேரிலே சந்தித்து அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். இன்னும் என்னுடைய அறையிலே இப்போது கூட சிலபேர் வீற்றிருப்பார்கள் என்று நான் எண்ணுகிறேன். பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொன்னால் அதைத் தீர்க்கவேண்டும். அதிலே உடனுக்குடன் பதில் சொல்வதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் இப்படிப் பேசினால் பிரச்சினை தீராது. குறவன் என்பதைப் பொறுத்தவரையில் 'கேயூ' என்று போட்டால் ஒன்று 'கே.ஓ' என்று போட்டால் இன்னொன்று. இப்படி இன்னொரு ஸ்பெல்லிங் போட்டால் மாறிவிடுகிறது. அதுதான் உண்மை. அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். சொல்லவேண்டாம் என்றால் விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்ல வேண்டாம் என்று சொல்லவில்லை. எஸ்.சியிலே இல்லை என்பது மாதிரிச் சொன்னீர்கள். ஆனால் அவர்கள் எஸ்.சியிலே உண்டு என்று சொன்னார்கள். டாக்டர் செ. அரங்கநாயகம்.

[*1993 நவம்பர் 9*

டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறவன் என்கிற ஜாதி தாழ்த்தப்பட்ட வகுப்பிலேதான் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்று அமைச்சராகவும் மாண்புமிகு திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை உட்கார வைத்துக்கொண்டே குறவன் என்கிற ஜாதி தாழ்த்தப்பட்ட வகுப்பிலே இல்லை; அது பிற்பட்ட ஜாதியிலே தான் இருக்கிறது, எனவே தாழ்த்தப்பட்ட ஜாதியிலே கொண்டுவரவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். அதை மறுத்துப்பேசினால், பேசக்கூடாது என்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறவன் என்பது பி.சி.யிலே இருக்கிறது என்று எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் சொன்னார்கள். இல்லை, அது எஸ்.சி. யிலே தான் இருக்கிறது என்று அமைச்சர் சொல்வது எப்படி ஃபாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை என்று சொல்ல முடியும்?

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்தான் மூன்றையும் சொல்கிறேனே. எஸ்.சி.யிலே இருக்கிறது. எஸ்டி. யிலும் இருக்கிறது. ஆனால் இன்னொரு பிரிவினர் நேற்று என்னை வந்து சந்தித்து எங்களை மட்டும் பி.சி. என்று சொல்கிறார்கள். நீங்கள் தான் பேச வேண்டும் என்று என்னிடத்தில் மனுக் கொடுத்திருக்கிறார்கள். இதில் என்ன பிரச்சினை என்று ஆராயவேண்டும். அதைத் தீர்த்து வைக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தில்தான் நான் சொல்கிறேன்.

அதேபோல கிறிஸ்துவ சமுதாயத்தைச் சேர்ந்த வன்னியர்கள் மோஸ்ட் பேக்வர்ட் என்று அறிவித்தீர்கள். அதாவது மிகவும் பின்தங்கிய சமுதாயம் என்று அறிவித்தீர்கள். நான் அந்த அறிவிப்பை வரவேற்கிறேன். ஆனால் அதேநேரத்தில் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்களை பின்தங்கிய சமுதாயமாகத்தான் நாம் அங்கீகரித்து இருக்கிறோம். அவர்களைக் குறைந்தபட்சம் எம். பி.சி. யாக வாவது நீங்கள் அறிவிக்கவேண்டுமென்ற நியாயமான கோரிக்கையை நீங்கள் ஏற்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மிக முக்கியமான அரசியல் சட்டத்திருத்தத்தைக் கோரும் தீர்மானம் முதலமைச்சரால் இங்கே முன்மொழியப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தீர்மானத்தின் நகல் எங்களுக்கு முன்கூட்டியே அனுப்பப்படவில்லை. நான் எவ்வளவோ முயன்று. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று இரவு உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது (குறுக்கீடு) நீங்கள் பேரவைத் தலைவரிடத்தில் (குறுக்கீடு) நேற்றிரவு தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (குறுக்கீடுகள்) அஜண்டாவில் என்ன தீர்மானம் வர இருக்கிறது என்பது உங்களுக்கு கூறப்பட்டிருக்கிறது. அதன் பினனர் தீர்மானமும் உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இது ஒரு

1993 நவம்பர் 9] [பேரவைத் தலைவர்]

முக்கியமான தீர்மானம். அரசாங்கம் பல்வேறு பரிசீலனைகளுக்குப் பிறகு பேரவைச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கிறார்கள். அதன்பிறகு இங்கேயிருந்து பரிசீலித்து உங்களுக்கு அனுப்பி வைக்கிறபோது கொஞ்சம் காலதாமதமாகி இருக்கலாமே தவிர அனுப்பவே இல்லை என்று சொல்வது நியாயம் அல்ல.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்று காலையில் இருந்து பலமுறை முயன்றேன். தீர்மானம் இருக்கிறதா என்று. உங்களுக்கே தெரியும். கேட்டிருக்கிறேன். அந்தத் தீர்மானத்தின் நகல் எங்களுக்குக் கிடைக்கவேண்டுமென்று நாங்கள் மிகவும் விரும்பினோம். எங்களுக்கு உரிய நேரத்திலே கிடைக்கவில்லை. கடைசி நேரத்தில் எங்களுக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பிலும்கூட அரசியல் சட்டத் திருத்தம் கோரி தீர்மானம் முன்மொழியப்படும் என்று மட்டும் அதிலே குறிப்பிடப்பட்டு இருந்தது. அது மட்டுமல்ல, பல்வேறு உறுப்பினர்களும் காலையிலே என்னிடத்திலே தொலைபேசியிலே கேட்டுக்கொண்டிருந்தார்கள். தீர்மானமே வரவில்லையே, தீர்மானமே வரவில்லையே என்று பல்வேறு உறுப்பினர்களும் சபைக்கு வருகின்ற வரையிலே தீர்மானத்தை அவர்கள் பார்க்கவில்லை. இட ஒதுக்கீடுப் பிரச்சினையில்.. .

பிற்பகல் 1.50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா உறுப்பினர்களும் வந்தது என்கின்றார்கள். அதாவது இரவே எல்லா உறுப்பினர்களுக்கும் செயலகத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) அதாவது நீங்கள் ஒரு கருத்தைச் சொல்கிறபோது, நான் அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொன்னால்...(குறுக்கீடு) இல்லை. இரவே தங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விடுதியிலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் அறைக்கு அனுப்பப்பட்டு, வீடுகளிலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கெல்லாம் கூட அனுப்பப்பட்டிருக்கிறது (குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தமாக என்னிடத்திலே புகார் செய்து இருக்கிறார்கள். எங்களுக்குத் தீர்மானமே வரவில்லை என்று எல்லோரும் என்னிடத்திலே புகார் சொல்லியிருக்கிறார்கள். எனவேதான் நான் சொன்னேன். எனக்கு, இரவு நேரம் வந்தபோது தீர்மானத்தின் நகல் வரவில்லை. தீர்மானம் முன் மொழியப்படும் என்று மட்டும்தான் அதிலே வந்திருந்தது தவிர தீர்மானத்தின் நகல் எனக்கு முதலிலே கிடைக்கவில்லை. நான் 12½ மணிக்குத்தான் படுக்கச் சென்றேன். அதுவரையிலும் தீர்மானம் என்னுடைய வீட்டிற்கு வரவில்லை. பிறகு நள்ளிரவிலே 2 மணிக்கு மேலே, நள்ளிரவிலே. . . (குறுக்கீடு)

[1993 நவம்பர் 9

*** மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவல்படி, நேற்று இரவே 10.45 மணிக்கு எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தீர்மானத்தின் நகல் அனுப்பப்பட்டது. மற்ற உறுப்பினர்கள் எல்லோரும், வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் எல்லோரும்கூட, அந்த தீர்மானத்தின் நகல் வந்து சேர்ந்ததாகக் கூறுகிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் மட்டும் எங்களுக்கு வரவில்லை, வரவில்லை என்று சொன்னால் எங்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேரவைத் தலைவர் சொல்வதையே என்னால் நம்பவே முடியாது என்று சொல்லிவிட்டால், நான் எப்படி இங்கே இருந்து அவையை நடத்த முடியும்? நேற்று இரவு 9.45 மணிக்குத்தான் அலுவலகத்திலிருந்து சென்றேன். எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்புவதற்குரிய அந்தத் தீர்மானத்தின் நகலை அவர்கள் காப்பி எடுத்து அனுப்பியதற்குப் பின்னர்தான் இங்கே இருந்து அவர்களை அனுப்பி வைத்துவிட்டுத்தான் நான் போனேன். அதன் பின்னர் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வருவதில் கொஞ்சம் கொஞ்சம் நேரம் முன்னே, பின்னே இருக்கலாமே தவிர வரவேயில்லை என்று சொல்வது நியாயமல்ல. இது போன்று ஒரு கூட்டமே, அவசரக் கூட்டமாகக் கூட்டப்பட்டு இருக்கிறபோது ஒரு முக்கியமான தீர்மானத்தை, அந்தத் தீர்மானத்தை அனுப்புவதிலே ஒரு மணி நேரம், அரை மணி நேரம் முன்னே பின்னே இருக்கலாமே தவிர அனுப்பவேயில்லை என்று சொல்வது சரியல்ல என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டமன்றத்திற்கு வந்தபிறகு ஒருவேளை என்னுடைய வீட்டிற்கு இந்தத் தீர்மானம் போய் இருக்குமோ என்னவோ தெரியவில்லை இங்கு வந்துதான் நான் தீர்மானத்தைப் பார்த்தேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள இட ஒதுக்கீடு பிரச்சினையில் மிக முக்கியமான தீர்ப்புகளையொட்டி எழுந்துள்ள நிலைமைகளைப் பற்றி விவாதிக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும், முடிவுகளை மேற்கொள்ளவும், விஷேசமாகக் கூட்டப்பட்டதால் இந்தக் கூட்டத்தில் உரிய முறையில் பங்கேற்க எங்களுக்கு வாய்ப்புகள் வழங்கியிருக்கவேண்டும். சம்பந்தப்பட்ட தீர்ப்புகளையும் அவற்றில் அரசின் குறிப்புகளையும் மற்ற விவரங்களையும் தொகுத்து வழங்கியிருக்கவேண்டும். அதற்கு மாறாக ஒரு பட்ஜெட் ரகசியத்தைப் பாதுகாப்பதைப்போல உணர்வு பூர்வமான இந்த தீர்மானத்தைத் திரை மறைவில் வைத்திருந்து கடைசிநேரத்தில் தீர்மானத்தின் பொருளை மட்டும் அனுப்பி தெரிவித்து, மீதியை வெள்ளித்திரையில்

1993 நவம்பர் 9] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

காண்க என்பது போன்ற ஒரு திரைப்பட விளம்பரப்பாணியை இதிலேயும் பின்பற்றி இருக்கிறார்கள். எனவே தமிழக மக்களின் அடிப்படைப் பிரச்சினை மீது. . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை பல முறை திரையிடப்பட்ட ஒன்று. புதிதாக இன்றைக்குத் திரைக்கு வந்ததல்ல. ஏற்கனவே ஒரு தீர்மானம் இங்கே வந்து இருக்கிறது. அதைத் தவிர வேறு என்ன கேட்போம் என்று எதிர்ப்பார்க்கிறார்கள். வெளிப்படையாக எல்லா பத்திரிகைகளிலேயும் வந்திருக்கிற பிரச்சினை. எனவே இந்த பிரச்சினையிலே நீங்கள் இன்னும் புதிதாக, நாங்கள் ஒரு குறிப்பிட்ட அளவிற்குக் கொடுத்து அதற்குள்ளே நீங்கள் வந்துவிடக்கூடாது அல்லவா, எனவே புதிய புதிய சுருத்துக்கள் வருமே என்று பார்த்தால், நீங்கள் கொடுக்கவில்லை, கொடுக்கவில்லை என்று தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இது தெரிந்த ஒன்று, தெரியாத ஒன்றல்ல (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத் தான் (குறுக்கீடு) இதை கதை வசனத்தைப்போல் நீங்கள் ஏற்றுக்கொண்டால் சரி. உங்களுடைய எண்ணம் அப்படித்தான் தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது ஏதோ கதை வசனம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே வெளியாகியிருந்தால் வெளியிட்டு இருக்கவேண்டியதுதானே. அதற்கு இவ்வளவு மூடுமந்திரம் ஏன்? உடனே வெளிவர வேண்டியதுதானே, நீங்கள் முடிவெடுத்து 5 நாட்கள் ஆகின்றன. 7-ம்தேதி, 8-ஆம் தேதி அத்தனை உறுப்பினர்களுக்கும் கிடைக்கச் செய்திருக்கலாமே. அதை ஏன் மூடி மறைக்கவேண்டும்? இப்படி எல்லாம் நீங்கள் திரும்பத் திரும்ப பேசுகின்ற காரணத்தாலேதான் எனக்கு அச்சம் ஏற்படுகிறது, ஐயம் ஏற்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் உணர்வுப்பூர்வமான ஈடுபாடும், நம்பிக்கையும் கொண்டு செயல்படுவதை இந்த அரசு உறுதிபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மக்கள் நலனில் அக்கறையோடு செயல்படும் நிலையில் எங்களுக்கு. . .

பிற்பகல் 1.55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

[*1993 நவம்பர் 9*

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் உறுதியாக இந்த அரசு ஈடுபடுகிறதா என்பதை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் என்று சொல்கிறபோது பல மாதங்களுக்கு முன்பு, 6 மாதங்களுக்கு முன்பு மண்டல் குழுவின் பரிந்துரைகள் பற்றி இங்கே ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டிருக்கிறது. பிரதம மந்திரிக்கு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. இதை நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அது அப்படியே குப்பையில் போட்டது மாதிரி கிடக்கிறது, அங்கே. அவர் எங்களுக்கு உறுதி இருக்கிறதா, எங்களுக்கு உறுதி இருக்கிறதா என்று எங்களை சந்தேகப்படுகிறார். நாங்கள் உங்களை சந்தேகப்பட்டாலும், சொல்லக்கூடாது என்பதால் சொல்லவில்லை. எங்களுக்கு உங்கள்மேல் இருக்கிற சந்தேகம் நிறைய நிறைய நிறைய அதிகமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் நீங்கள் மாற்றியிருக்கிறீர்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: இல்லை, நீங்கள் இடையிலே பேசுவதும், உங்களுடைய செயல்பாடுகளும் எனக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மீண்டும் மீண்டும் அவர்கள் எங்களை கிளப்ப வேண்டாமென்று சொல்லிக்கொள்கிறேன். நான் உங்களிடத்திலே சொல்ல வேண்டுமென்றால் 1950–ல் கிளர்ச்சிகள் எல்லாம் நடக்கிறபோது இந்தச் சட்டமன்றத்திலே ஒரு தீர்மானம் கொண்டு வரவில்லை. இந்தச் சட்டமன்றத்திலே முதன் முதலாக தீர்மானம் புரட்சித் தலைவி தான் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே இருக்கிறது. நான் இங்கே கொண்டு வந்திருக்கிறேன். அதை எல்லாம் பேசவில்லை. அன்றைக்கு **அரசின் சார்பிலே** 23, 24 தீர்மானங்கள் 1946-லிருந்து 1952 வரை கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் ஒரு தீர்மானம் கூட, அவ்வளவு கிளர்ச்சிகள் நடக்கிறபோதுகூட, இங்கே இந்த அரசு இட ஒதுக்கீட்டை ஆதரிக்கிறது. கான்ஸ்ட்டியூஷனை திருத்தவேண்டுமென்று யாரும் இங்கே பேசவில்லை. இங்கே பேசியிருந்தால் எடுத்துக் காண்பியுங்கள். எல்லா சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளையும் பார்த்தேன். யாரும் இங்கே பேசவில்லை. எல்லோரும் பேசாமல் இருந்தார்கள். சுப்பிரமணியம் என்பவர் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார். அதை திருப்பிப் பெற்றுக்கொண்டார்கள். எதுவுமே பேசாமல் இருந்துவிட்டு, அன்றைக்கு திராவிட இயக்கத்தில் உள்ளவர்கள் பெரிய புரட்சி செய்து எல்லோரும் வெளியே வந்துவிட்டோம். அன்றைக்குப் போராட்டம் என்றால்–மாணவர்கள் போராட்டம் என்றால்– அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பச்சையப்பன் கல்லூரி– இந்த இரண்டும் போராட்டம் என்றால் தமிழ்நாடே போராட்டம் ஆகியது. அந்தப் போராட்டத்திற்குப்

1993 நவம்பர் 9] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

பிறகுதான்-- இன்னும் சொல்லப்போனால் சர்தார் பட்டேல் அவர்கள் வந்திருக்கிறபோது, சர்தார் பட்டேலிடத்தில் பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும், ராமசாமி முதலியாரை விட்டு இந்தமாதிரி தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளை இங்கே இருக்கிற காங்கிரஸ்காரர்கள் புரிந்துகொள்ள வில்லை. நீங்கள் கேட்டு தெரிந்துபோய் நேருவிடத்திலே சொல்லுங்கள் என்று சொல்லி, அவர் இங்கே வந்து தெரிந்துகொண்டு நேரு அவர்களிடத்தில் சொல்லி, நேரு அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். நேரு அவர்கள் கொண்டுவருகிறபோது 243 வோட்டுகள் நேரு கொண்டு வந்த தீர்மானத்திற்கும், எதிர்த்து 5 வோட்டுகளும் விழுந்தன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: காலையிலே இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து முதலமைச்சர் அவர்கள் பேசிய கருத்துக்கு நேர் மாறான கருத்தை வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். உண்மை என்னவென்றால், இதே அவையிலே தீர்மானமாக இல்லாவிட்டாலும், பக்தவச்சலம் அவர்கள் உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். அரசியல் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வரப்படும் என்று சொல்லி, அவர் சொன்னதன் பின்னாலே காமராஜர் அவர்கள் நேருவிடத்திலே பேசியதற்குப் பின்னாலேதான் முதல் அரசியல் சட்டத்திருத்தம்- முதல் அரசியல் சட்டத்திருத்தமே இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்காகத் தான் கொண்டு வரப்பட்டது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் பேசியிருக்கிறார்கள். வெளியே இருக்கிற இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையிலே, இந்த சமுதாய நீதிக்காக போராடிக் கொண்டிருக்கிற அத்தனை இயக்கங்களும் கடந்த இரண்டு நாட்களாக எழுதி வந்ததைப் பார்த்தால் காமராஜர் அவர்களுடைய பெயர் அதிலே இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம், திராவிடர் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் வீரமணி சொல்லியிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் ஏதோ ஒரு ஆத்திரத்திலே ஒரு வார்த்தைக்கு இட்டு நிரப்புவதற்காக காமராஜர் செய்யவில்லை, காங்கிரஸ் செய்யவில்லை, நாங்களே செய்தோம் என்று சொன்னால் உங்களுக்கு அங்கே யார் இருந்தார்கள். அதுவல்ல பிரச்சினை.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: யார் என்று சொல்லி சட்டமன்றத்தில் பேசியதாக வேண்டுமென்றால் நீங்கள் குறிப்புகளை எனக்கு எடுத்து அனுப்புங்கள், சட்டமன்றத்தில் பேசப்பட்டது என்று.

பிற்பகல் 2.00

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலனில் அக்கறையோடு செயல்படும் நிலையில்

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1993 நவம்பர் 9

எங்களுக்கு மாற்றுக் கருத்து கிடையாது. அத்தகைய நிலையில் எங்களுடைய கரங்கள் உழைக்கும் கரங்களாக இருப்பதோடு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: உங்களுக்கு உதவும் கரங்களாக இருப்போம் என்று தெரிவித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர்.

*** மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இட ஒதுக்கீட்டுத் தீர்மானத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முன்மொழிந்து, அதற்கான காரண காரிய விளக்கங்களை மிகத் தெளிவாகவும், திட்பமாகவும் தன்னுடைய உரையின் மூலமாக எடுத்து வைத்தார்கள். அதற்கான அவசியத்தை எடுத்துக் கூறி, இட ஒதுக்கீடு பற்றிய தமிழக வரலாற்றுக் குறிப்புகளை எல்லாம் எடுத்துத் தெரிவித்து, அதில் என்னென்ன மாறுதல்கள் அவ்வப்போது ஏற்பட்டன என்ற காரண காரிய விளக்கங்களைச் சொல்லி, பரிணாம வளர்ச்சியில் இந்த இட ஒதுக்கீடுப் பிரச்சினை தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் எல்லோருடைய நல்ல ஒத்துழைப்பு, ஆதரவு ஆகியவற்றின் அடிப்படையில் மிகச் சிறப்பாகவும், செம்மையாகவும் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன என்பதற்கான காரண காரிய விளக்கங்களை மிகச் சிறப்பாக அவர்கள் தன்னுடைய முன்னுரையிலே எடுத்து வைத்திருக்கிறார்கள்.

இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை இறுதிக் கட்டத்தில் எந்த அளவுக்கு வந்து சேர்ந்திருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லும் போது, உயர்நீதி மன்றம், உச்சநீதி மன்றம், ஒரு நீதிபதி, மூன்று நீதிபதிகள், 9 நீதிபதிகள் இருந்தாலும் நமக்கு நீதி கிடைக்காது என்ற காரணத்தால்தான் அரசியல் அமைப்புச் சட்டத்தில் தக்கதொரு திருத்தத்தைக் கொண்டு வந்தாலொழிய இந்த மாநிலத்து மக்களுடைய எண்ணங்கள் நிறைவேற முடியாது என்ற எண்ணம் வந்ததால்தான் இப்படி ஒரு தீர்மானத்தை இந்த அவையின் சார்பாக நிறைவேற்ற வேண்டுமென்று கருதி, அதை நிறைவேற்ற வேண்டிய அவசரக் கட்டம் ஏற்பட்டதன் காரணமாக, அதை நிறைவேற்ற வேண்டி இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வரவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். எப்படியோ எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இறுதியிலே இதற்கு வந்து சேர்ந்தாரே என்பதில் எனக்கு ஒரு மகிழ்ச்சி. வேறு எங்கெங்கோ போய்விட்டு, போய்விடுவாரோ என்றுகூட நான் கருதினேன். நல்லவேளையாக சட்டமன்றத்திற்கு வந்து, இந்தத் தீர்மானத்திற்கு உறுதுணையாக நிற்கிறார் என்பதிலே நமக்கு மிக்க மகிழ்ச்சி.

1993 நவம்பர் 9] *[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]*

இங்கே இருக்கிற எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களும் இந்தத் தீர்மானத்தினுடைய அவசியத்தையும், இன்றியமையாத தன்மையையும் உணர்ந்து, அதற்கு ஆதரவு தந்திருக்கிறார்கள் என்பதற்காக அத்தனை பேருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக மக்களின் ஒருமித்த எண்ணத்தின் அடிப்படையில் இந்தக் கருத்து எடுத்து வைக்கப்படுகிறது என்பதை நாடும் உணரவேண்டும். நாட்டை ஆளுகின்றவர்கள், மத்தியிலே சிறப்பாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் மக்களுடைய பிரதிநிதிகள் அமர்ந்திருக்கிற இந்தப் பேரவை தீர்மானத்தை நிறைவேற்றித் தருமானால், அதன் மூலம் நல்ல வலிவு ஏற்பட முடியும். அந்த வலிவின் காரணமாக இருக்கின்ற நியாயங்களை உணர முடியும். அந்த நியாயங்களின் அடிப்படையில் தேவையான திருத்தத்தை அரசியல் அமைப்புச் சட்டத்திலே கொண்டுவர முடியும் என்ற காரணத்தாலேதான் தீர்மானத்தை மாண்புமிகு முதல்வரவர்கள் கொண்டு வந்தார்கள். இங்கே எல்லா எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் தீர்மானத்தினுடைய குறிக்கோளை, மையக் கருத்தை மிகச் சிறப்பாக ஆதரித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் இடையிடையே தங்களுடைய மாச்சரியங்களையும் எடுத்துத் தெரிவித்தார்கள். அப்படித் தெரிவிக்காவிட்டால் தாங்கள் ஆகமாட்டார்கள் என்ற காரணத்தாலே, தெரிவிக்க வேண்டிய கட்டத்திலே, தெரிவித்தார்கள். அவற்றை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, தேவையான கருத்தை மட்டும் எடுத்துப் பார்க்கும்போது இந்தத் தீர்மானம் இந்தப் பேரவையினால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது என்ற எண்ணம் நாட்டு மக்களிடத்திலே பரவவேண்டும். மாண்புமிகு முதல்வரவர்கள் காரண காரிய விளக்கங்களை மிகத் தெளிவுபட எடுத்துச் சொன்னார்கள்.

16-11-1992 அன்று உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியதன் காரணமாக இந்த விளைவுகள் ஏற்பட்டது என்பதை எடுத்துச் சொல்லி, 7-1-1993-ல் அமைச்சரவைக் கூட்டம் பரிசீலித்து, உச்ச நீதிமன்றம் சொன்ன கருத்தின் அடிப்படையில் பிற்பட்டோர் பட்டியலில் யார் யார் இருக்க வேண்டுமென்பதைப் பார்க்க ஒரு குழு அமைக்கப்பட்ட தன்மையையும் விளக்கிக் காட்டினார்கள்.

பிற்பகல் 2.05

அதைத் தவிர, 22-3-1993 அன்று தமிழகத்தைப் பொறுத்தவரையில் இருக்கின்ற சூழ்நிலையைத் தெரிவித்து, தொடர்ந்து கையாளப்பட்டு வருகின்ற முறையில் ஒரு மாறுதல் ஏற்படுமேயானால் தமிழகத்திலே கலகம் விளையக்கூடும், குழப்பங்கள் ஏற்படக்கூடும், அதை அடக்குவது என்பது சரியாக அமையாது. ஆகவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே இருந்து வருகிற 69 சதவீத இட ஒதுக்கீடு என்பதற்கு ஆதரவளிக்கவும் அந்த வகையில் நல்ல தீர்ப்பு வழங்கவேண்டுமென்றும் கேட்டு 22-3-1993 அன்று

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1993 நவம்பர் 9

மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பெரு முயற்சியால் உச்ச நீதிமன்றத்திலே மறுஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். 26-7-1993-லே சென்னை உயர்நீதிமன்றம் இந்த ஆண்டுக்கு மட்டும் தான் 69 சதவீதம் என்ற அடிப்படையிலே வைத்துக் கொள்ளலாமே தவிர, அடுத்த ஆண்டிலிருந்து உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பைத்தான் நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும், உயர்நீதிமன்றம் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை மீறமுடியாத காரணத்தினால் அவர்கள் சொன்னார்கள் என்றவுடனேயே நாம் உச்சநீதிமன்றத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழக அரசின் சார்பாக மேல்முறையீடு செய்து, இந்த ஆண்டுக்கு மட்டுமல்ல, வருகின்ற எந்த ஆண்டுக்கும் இந்த 69 சதவீத ஒதுக்கீடு இருக்கவேண்டுமென்பதற்காக மேல்முறையீடு செய்தோம். அந்த மேல்முறையீட்டுக்கு இடைக்காலத் தீர்ப்பை 5-11-1993 அன்று அவர்கள் அளித்ததன் காரணமாக அவசரமாக ஒரு முடிவு எடுக்கவேண்டிய ஒரு கட்டாயத்திற்கு வந்துவிட்டோம்.

உச்சநீதிமன்றத்தில் நாம் எதிர்பார்த்தோம். ஆனால் உச்சநீதிமன்றம் நமக்கு சாதகமான தீர்ப்பை அளிக்கவில்லை. இன்னமும் அதற்கான குறிப்புகள் நமக்கு வந்துசேரவில்லை என்றாலும் அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது என்ற காரணத்தாலே இந்த மாமன்றத்தின் மூலமாக நம்முடைய உணர்வை வெளிப்படுத்த வேண்டும் என்ற காரணத்தினாலே, நாம் இங்கே இதைக் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் இராமச்சந்திரன் அவர்கள் கூறியது போன்றும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோன்றும், இவ்வளவு இடங்கள்தான் உச்சவரம்பு இருக்கவேண்டுமென்று அரசமைப்புச் சட்டத்திலே சொல்லவே இல்லை. அரசியலமைப்புச் சட்டத்திலே அப்படி கூறப்படவேயில்லை. ஆகவே எந்தக் கட்டத்திலே முதல் சட்டத் திருத்தம் வந்தது என்பதற்கான காரண காரிய விளக்கங்களை மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையிலும், இந்த உணர்வு, அல்லது உறுதி, இந்தத் திட்டம் நிறைவேற வேண்டும் என்பது இன்று நேற்றல்ல, 1916ஆம் ஆண்டிலிருந்தே திராவிட இயக்கக் கட்சிகளுக்கு இருந்து கொண்டு வருகிறது என்பதை எல்லோரும் நன்றாக உணர்வார்கள்.

அவர்களுடைய பரிணாமத் திட்டம் வளர்ந்து வளர்ந்து வருகிற பாங்கிலே தமிழகத்திலே இதை எல்லோரும் ஆதரித்தார்களே தவிர, கட்சிவேறுபாடுகள் இங்கும் இருக்கின்றன, கட்சிகள் மாறி இறுக்கின்றன, ஆட்சிகள் மாறியிருக்கின்றன, நீதிக்கட்சி ஆண்ட காலம் வரையிலும் இங்கே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அடிப்படையில் சமநீதி வேண்டும்

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்ற அடிப்படையில் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையை ஆதரித்து வந்தார்கள் என்பது மட்டுமல்லாமல், அதற்குப் பிறகு 1937ஆம் ஆண்டு ராஜாஜி அவர்களுடைய தலைமையிலே அமைச்சரவை இருந்தபோதும், இந்த இட ஒதுக்கீட்டு கம்யூனல் ஜி. ஓ.-வை அப்படியே அமல்படுத்தினார்களே தவிர, தமிழகத்தைப் பொறுத்த வரையில் அதில் ஒன்றும் மாற்றம் இல்லை. அதற்குப் பிறகு திரு. பிரகாசம் அமைச்சரவை அமைந்து 1946-ல் இருந்தபோது கூட அந்த நிலைமை தொடர்ந்து கொண்டுதான் வந்திருக்கிறது. யார் ஆட்சியில் இருந்தாலும், எப்படிப்பட்டவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் தமிழகத்திலே ஒருமித்த உணர்வு இருந்து வந்தது என்பதைத்தான் வரலாறு காட்டிக் கொண்டிருக்கிறது.

அந்த அடிப்படையிலேதான் ஜாதிவாரியாகப் பிரிக்கப்பட்டதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது உரையில் சுட்டிக்காட்டினார்கள். 12 இடங்கள் காலி ஆனது என்றால் அதிலே இரண்டு இடங்கள் பிராமணர்களுக்கு என்றும், 5 இடங்கள் பிராமணர் அல்லாதவர்களுக்கு என்றும், இரண்டு இடங்கள் ஆங்கிலோ இந்தியர் மற்றும் கிருத்துவர்களுக்கு என்றும் இரண்டு இடங்கள் இஸ்லாமியர்களுக்கு என்றும், ஒரு இடம் நலிவடைந்த வகுப்பினருக்கு என்றும் ஒதுக்கப்பட்டு 1947 வரையில் அதுதான் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்டவர்கள் எல்லாம் தங்களுக்கு என்று தனி இடம் வேண்டுமென்று கேட்டதன் காரணமாக 1947-லேயே 12, 14-ஆக ஆகிவிட்டது. அந்த இரண்டு இடங்களை பிற்பட்டோருக்கு ஒதுக்கித் தரலாம் என்ற அளவுக்குக் கொண்டு வந்தார்கள். அது தொடர்ந்து வந்தது. ஆனால் 1950-ல் அரசியல் அமைப்புச் சட்டம் வந்தபிறகு, ஜாதிகளுக்கு தனி இடம் கிடையாது, மத வேறுபாடுகள் கூடாது, தனித்தனி ஜாதி என்று சொல்லி தனித்தனி சலுகை கொடுக்கக்கூடாது என்று சொல்லி அரசியலமைப்புச் சட்டத்தினுடைய முக்கியமான நோக்கம் அதுவாக இருந்ததன் காரணமாக, அதை அடிப்படையாக வைத்து வழக்குத் தொடுக்க உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கினார்கள். ஜாதி அடிப்படையில் இடம் ஒதுக்கியது, பிராமணர்கள், பிராமணர்கள் அல்லாதவர்கள், கிருத்துவர்கள், இஸ்லாமியர்கள் (முஸ்லீம்கள்) என்று ஒதுக்கக்கூடாது, ஆகவே இந்தச் சட்டம் செல்லாது என்று சொன்னதன் காரணமாகத்தான் அப்பொழுது நெருக்கடி வந்தது. அந்த நெருக்கடியில்தான் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் இந்த நிலைமை ஏற்பட்டுவிடுமேயானால் தமிழகத்தில் வளர்ந்து வருகின்ற நிலைமைகள் பாழ்பட்டுப் போய்விடுமே என்று சொல்லி பெரும் கிளர்ச்சியையும் ஆர்ப்பாட்டத்தையும் ஏற்படச் செய்தார்கள்.

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1993 நவம்பர் 9

அது மட்டுமல்லாமல் இந்த உணர்விலே இருந்து வந்த தன்மையின் அடிப்படையிலேயும் மாண்புமிகு பெரும் தலைவர் காமராஜ் அவர்களும் இந்தக் கருத்துக்கு ஆதரவாக இருந்தார்கள் என்பது மட்டுமல்ல, பண்டித நேரு அவர்களிடத்திலே காமராஜ் அவர்கள் கொண்டிருந்த செல்வாக்கின் அடிப்படையிலே அந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பேருதவி புரிந்தார்கள் என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

பிற்பகல் 2.10

அந்த உணர்வுக்கு மதிப்பு அளித்தார்கள். அந்தத் தன்மையைத்தான் இப்போது நீங்கள் எல்லாம் செய்ய வேண்டுமென்று நாங்கள் எல்லாம் கேட்டுக்கொள்கின்றோம். உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி மத்திய அரசிலே திருத்தத்தை அப்போது காமராசர் எப்படிக் கொண்டு வந்தாரோ, அந்த காமராசருக்கு வாரிசாக இருக்கின்ற நீங்கள் எல்லாம் அதைக் கொண்டு வருவதற்கு பேருதவி புரிய வேண்டுமே தவிர, அது நடக்குமா, நடக்காதா, அவர் வருவாரா, இவர் வருவாரா, எவர் வருவார் என்பது-எவர் வந்தால் என்ன? யார் மத்திய ஆட்சியிலே இருந்தாலும், இந்தத் திருத்தம் வரவேண்டும். அது காங்கிரஸ் ஆண்டாலும் சரி, வேறு யார் ஆண்டாலும் சரி, ஆளாமல் போனாலும் சரி, மத்திய அரசின் சார்பாக குடியரசுத் தலைவர் ஆளுகின்ற நிலை ஏற்பட்டாலும் சரி (மேசையைத் தட்டும் ஒலி), ஆனால், இந்தச் சட்டத் திருத்தம் நமக்கு வேண்டும் என்பதுதான் முக்கியமே தவிர, மற்றையப் பிரச்சினைகளை வேறு சமயத்திலே பேசிக்கொள்ளலாம், நமக்குப் பேசிக்கொள்வதற்கு ஏராளமான நேரம் இருக்கிறது. ஆள் இருக்கிறது, இடம் இருக்கிறது. வேறு நல்ல கருத்துக்களைவிட இதற்குத்தான் அதிக முக்கியத்துவம் இருக்கிறதன் காரணமாக பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. இப்போது இருக்கிற பிரச்சினையை எடுத்துக் காணுகின்றபோது, சட்டத்திருத்த நிலைமை ஏற்பட்டாலொழிய வேறு வழி இல்லை என்ற நிலை வருகின்றது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் இந்த நிலைமை.

மண்டல் கமிஷனுடைய சிபாரிசு, மண்டல கமிஷனுடைய சிபாரிசு என்கிறோம். இன்னும் ஒரிசாவிலே அது நடைமுறைப்படுத்தவில்லையே; நடைமுறைப்படுத்த முடியவில்லையே, முடியாதே, வங்காளத்திலும் நடைமுறைப்படுத்த முடியவில்லையே, பீகார், உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஹிமாசலப் பிரதேசத்திலே முடியவே இல்லையே, இப்போது என்ன சட்டம் போட்டாலும், நடைமுறைப்படுத்துகின்றபோது அங்கே இன்னும் கிளர்ச்சிகள் வந்துகொண்டு இருக்கின்றனவே, ஆனால், தமிழகம் ஒன்றிலேயேதான் இதற்கு எதிர்ப்பே இல்லாத அளவுக்கு எந்த ஒரு

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

முனையில் இருந்தும் எதிர்ப்பு இல்லாத அளவுக்கு, அரசியல் கட்சி ரீதியாகவும் எதிர்ப்பு இல்லாமல், எந்த ஒரு சாதியும் எதிர்ப்பு இல்லாமல், தங்களுக்கு அதிக இடம் வேண்டும், அதிக இடம் வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்களே தவிர- நகரத்துச் செட்டியார்கள் எல்லாம் தீர்மானம் போட்டு இருக்கிறார்கள், எங்களையும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று; பிள்ளைமார்கள் எல்லாம் கேட்டு இருக்கிறார்கள், எங்களையும் பிற்பட்ட வகுப்பிலே சேர்த்துக்கொள்ளுங்கள் என்று; பிராமணர்கள் எல்லாம் கூடி தீர்மானம் போட்டு இருக்கிறார்கள், எங்களையும் பிற்பட்டவர்களிலே சேர்த்துக்கொள்ளுங்கள் என்று; சைவ முதலியார்கள், சைவப் பிள்ளைமார்கள் எல்லாம் சேர்ந்து தீர்மானம் போட்டு இருக்கிறார்கள். ஒரே தீர்மானமாகப் போட்டுவிடலாம், ஐந்தே முக்கால கோடி மக்களும் ஒரே இனம்தான் தமிழ்நாட்டிலே என்று (சிரிப்பு) சொன்னால் தொல்லையே இல்லை. ஆனால், பேரறிஞர் அண்ணா அவர்கள் அழகாகச் சொன்னார்கள், இந்த மன்றத்திலே சொன்னார்கள் 'To treat e equals as unequals and unequals as equals; both are bad' என்றார். சமமானவர்களைப் பிரித்துப் பார்ப்பதும் தவறு; சமம் இல்லாதவர்களைச் சமமாகக் கருதுவதும் தவறு. ஏன், பிற்படுத்தப் பட்டவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இந்தச் சலுகைகள் அளித்து, கல்வித் துறையிலே அவர்களுக்கு ஊக்கம் தந்து, கல்வித் துறையிலே சலுகை தந்து அரசுப் பதவிகளிலே இடம்பெற வைத்து, அரசுப் பதவிகளிலே இடம்பெற வைப்பதன் காரணமாக அதிகாரம், ஆதிக்கம் போன்றவைகள் வருவதன் காரணமாக, சமுதாயத்திலே மற்ற இனத்தவர்களுக்கு ஒத்தவர்களாக தாழ்த்தப்பட்டவர்களும் பிற்படுத்தப்பட்ட மக்களும் ஒதுக்கப்பட்டவர்களும் வருவார்கள் என்று கருதப்பட்டது. கல்வித் துறையிலே ஒதுக்கீடு செய்து, அதன் காரணமாகப் பதவிகளிலே ஒதுக்கீடு பெற்று, பதவிகளிலே ஒதுக்கீடு பெற்றதன் காரணமாக சமுதாய அந்தஸ்து பெற்று, சமுதாய அந்தஸ்து பெறுவதன் காரணமாக சமுதாயமும் அவர்களை நல்ல முறையிலே ஏறிட்டுப் பார்க்கிற சூழ்நிலைக்குக் கொண்டுவந்து, அவர்களுக்கு அதிகாரம் ஆதிக்கம் ஏற்படுமேயானால் மற்ற உயர்ந்த சமுதாயத்தினர் பெற்று இருக்கின்ற தன்மைகளை இவர்களும் பெறுவார்கள் என்று கருதித்தான் கொண்டுவரப்பட்டது.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுக் காலமாக பல்வேறு காரணங்களினால், பழக்கவழக்கங்களினால், சாஸ்திரத்தின் பேரால், சம்பிரதாயத்தின் பேரால், பழக்க வழக்கத்தின் பேரால், வர்ணாஸ்ரம தர்மத்தின் பேரால், புராண இதிகாசங்களின் பேரால், பல்வேறு ஆதிக்க அதிகாரங்களின் பேரால்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1993 நவம்பர் 9

ஒதுக்கப்பட்டு, பிற்படுத்தப்பட்டு, தாழ்த்தப்பட்டு இருக்கிறவர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு அவர்கள் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக கீழே தள்ளப்பட்டார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு சலுகைகள் கொடுத்து கரைக்குக் கொண்டுவரவேண்டிய பொறுப்பு இன்றைக்கு இருக்கிற அரசுகளுக்கு இருக்கின்றது. 50 அடிக்கும் கீழே தள்ளினால், 50 அடிக்குத் தூக்கிவிட வேண்டிய அவசியம் வருகிறது. ஆயிரம் ஆண்டுக் காலத்திலே 100 அடி கீழே தள்ளப்பட்டவர்கள் யார் யாரோ, அவர்களுக்கு 100 அடி சலுகைகள் கொடுத்தால்தான் மற்றவர்களுக்கு இணையாக கரையிலே வந்து அவர்கள் நிற்க முடியும். மேலே இருப்பவர்கள் வாயால் சொன்னால், பள்ளத்திலே கிடக்கிறவன் வெளியே வரமாட்டான். நீயா ஏறு, நீயா ஏறு என்று கரையிலே நின்று கொண்டு சொல்வானேயானால், ஏற முடியாது. மேலே இருக்கிறவன் கை கொடுத்துத்தான் கீழே இருக்கிறவனைத் தூக்க வேண்டுமே தவிர, அப்படித் தூக்கி விடுகின்ற முயற்சிதான் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இந்த இட ஒதுக்கீடு வேண்டும் என்கின்ற தன்மையினுடைய அடிப்படை.

இப்போது நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள் என்றால், அரசமைப்புச் சட்டத்தினுடைய விதியினுடைய அடிப்படையில், விதிக்கு முரண்பாடாக நடந்தோம், மாறுபாடாக நடந்தோம் என்ற காரணத்தினால் அல்ல. நீதிபதிகள் தங்களுடைய எண்ணத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

பிற்பகல் 2.15

ஒன்பது நீதிபதிகளும் ஒரே எண்ணத்தையா தெரிவித்தார்கள் ? ஒன்பதில் நான்கு பேர் ஒரு கருத்து; மாண்புமிகு நீதிபதி ரத்னவேல் பாண்டியன் மற்ற மூன்று பேர்கள் சாதகமாகத் தான் சொல்லி இருக்கிறார்கள். ஐந்து பேர் 50%-க்கு மேலே ஒதுக்கீடு போகக்கூடாது என்கிறார்கள். என்ன நியதி? 50% என்பது என்ன நியதி? 88 கோடி மக்களுக்கும் அந்த 50% என்பது எப்படிப் பொருந்தும்? எல்லா மாநிலங்களுக்கும் எப்படிப் பொருந்தும்? அப்படித் தோன்றியது அவர்களுக்கு-ஐம்பதோடு நிறுத்தலாம் என்று. அந்த எண்ணத்தினுடைய அடிப்படையில் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்களே தவிர, வேறு எந்த அடிப்படையிலும், வேறு எந்த நியாயமான காரணத்தையும் வைத்து அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் எண்ணத்தைத் தெரிவித்தார்கள். நான்கு பேர் ஓரளவுக்கு சாதகமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஐந்து பேர் எதிர்த்து சொல்லி இருக்கிறார்கள். ஆகவே ஒன்பதில் மெஜாரிட்டி பெரும்பான்மையான ஜட்ஜுகள் சொல்லிவிட்டார்கள் என்பதற்காக இன்றைக்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பு என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க, ஐந்து பேர் இப்படி

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சொல்லியிருந்தால், நான்கு பேர் 50% இருக்கவேண்டுமென்று சொல்லி, ஐந்து பேர் 50-க்கு மேலே போனால் பரவாயில்லை என்று சொல்லியிருந்தாலும், இந்த அவையைக் கூட்டி இந்தத் தீர்மானம் கொண்டுவர வேண்டிய அவசியமே கூட நமக்கு இருந்திருக்காது. அது ஒரு எண்ணமே தவிர வேறல்ல. அந்த எண்ணத்தினுடைய அடிப்படையிலே இருக்கிற தன்மையை மாற்றுவதற்காகத்தான் அரசமைப்பு சட்டத்திலேயே திருத்தம் கொண்டுவந்து விடுவார்களானால், அதற்கான அளவு அந்தந்த மாநிலத்திற்கு மாநிலம் மாறலாம். மாநிலத்திற்கு மாநிலம் தன்மைகள் மாறுகின்றன. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் பழங்குடி மக்களுடைய எண்ணிக்கை மிக மிகக் குறைவு. சில மாநிலங்களை எடுத்துக்கொள்வோமானால் தாழ்த்தப்பட்டவர்களைவிட பழங்குடி மக்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. பழங்குடி மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள் இரண்டு பேரையும் சேர்த்தால் மற்ற இனத்தாரை விடக் கூடுதலாக 50 சதவீதம், 60 சதவீதத்திற்கு மேல் கூட இருக்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திற்கும் மாநிலம் இது வேறுபடுகிறது. ஆகவே, அந்த வகையில் தான் இங்கே கூட டாக்டர் அம்பேத்கார் அவர்கள் அரசமைப்புச் சட்டம் கொண்டு வருகிறபோது குறிப்பிட்ட கருத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் எடுத்து தெரிவித்ததற்கிணங்க, அதை அந்தந்த மாநிலத்திற்கான பிரச்சினை என்று விட்டுவிட வேண்டுமே தவிர, இதை அகில இந்திய ரீதியில் இப்படி இருக்கிற அமைப்புகளில் ஒரே சட்டத்தைக் கொண்டு வருவது என்பது பொருந்தி வராது. அதை எந்த அளவுக்கு கொடுக்கலாம், எவ்வளவு பேருக்குக் கொடுக்கலாம், எந்தெந்த இனங்களைப் பிற்படுத்தப் பட்டவர்களாகச் சேர்க்கலாம், தாழ்த்தப்பட்டவர்களாகச் சேர்க்கலாம், அவர்களுக்கு எவ்வளவு இட ஒதுக்கீடு செய்யலாம் என்பதை அந்தந்த மாநிலத்திற்கு விட்டு விட்டால் மாநிலங்கள் தனித்தனியாக அவரவர்களுடைய எண்ணங்களை நிறைவேற்றுகிற அளவுக்கு திருப்திகரமாக இருக்கும். அந்த அளவுக்கு 69 சதவீதம் என்று நாம் போட்டு இருக்கிறோம். கிட்டத்தட்ட 50 சதவீதத்தை மீறிதான் கர்நாடகாவில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்குத் தான் கேரளாவிலே செய்யப்பட்டிருக்கிறது. தென்னக மாநிலங்கள் நான்கைப் பொறுத்தவரையில் கணக்கு எடுத்துப் பார்ப்போமானால், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, தமிழகம் ஆகியவை இந்த உணர்வினுடைய அடிப்படையில் வளர்ந்து தான், 50 சதவீதத்திற்கு மேல் இட ஒதுக்கீடு செய்திருக்கின்றன. இங்கே இருக்கிற பிரச்சினையை ஒட்டிச் செய்திருக்கிறார்கள்.

இப்போதுகூட நாம் 50% என்று சொன்னதற்குக் காரணம் ஓரளவுக்கு 31%-லிருந்து 50% வரையில் போகலாம் என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் முடிவு செய்தார்கள் என்றாலும் கூட, எந்த அளவுக்கு நியாயத்தின் அடிப்படையில் என்று பார்ப்போமானால், 18 சதவீதம்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1993 நவம்பர் 9

தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, 18 சதவீதம். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 1¼ சதவீதம், 1 சதவீதம் தான் பழங்குடி மக்கள் இருக்கிறார்கள். ஆகவே, ஒரு சதவீதம். பிற்படுத்தப்பட்டவர்கள் கணக்கை எடுத்துப் பார்ப்போமானால் இன்றைக்கு இருக்கிற கணக்கின்படி 68 சதவீதம் வருகிறது. ஆனால் நாம் ஒதுக்கீடு செய்தது 50 சதவீதம் தான். நியாயம் என்று வைத்தால் நமக்கே இந்த அதிகாரம் முழுவதும் வந்திருக்குமானால் 68 சதவீதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, 18 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு, ஒரு சதவீதம் பழங்குடி மக்களுக்கு, மற்றவைகள் பொது என்ற அளவுக்கு வைக்கிற நிலைமையைக் கூட நாம் ஏற்படுத்திக் கொள்ள முடியும். இதற்கு சாதகமாக இருக்கிற வகையில் மத்திய அரசாங்கத்தினுடைய அரசமைப்புச் சட்டம் திருத்த வேண்டுமென்று சொன்னாமே தவிர, அதில் 15-ஐ திருத்தலாமா, 16-ஐ திருத்தலாமா, அல்லது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல 31-சி-யின் அந்த அடிப்படையில் திருத்தலாமா என்றால், இந்தப் பிரச்சினை முழுவதையும் மத்திய அரசாங்கத்திற்கே விட்டு விடுகிறோம். எப்படியோ கொழுக்கட்டை வேக வேண்டும் என்பது தான் முக்கியமே தவிர, எந்த சட்டியில் வேக வைப்பது என்பதல்ல முக்கியம். நமக்கு இந்த எண்ணம் நிறைவேற வேண்டும். அதற்கு 16-ல் திருத்தம் கொண்டுவந்தாலும் சரி, 15-ல் திருத்தம் கொண்டுவந்தாலும் சரி, 31-சியின்படி சட்டம் இயற்றி ஒப்புதல் அளித்தாலும் சரி, இது நிலைநாட்டப்பட வேண்டும். குழப்பங்கள் வரக்கூடாது என்பதற்காகத் தான் இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதிலே ஒருமித்த கருத்து தமிழகத்தைப் பொறுத்தவரையில் இருக்கிறது என்பதைக் காட்ட தமிழகத்திலே இருக்கிற 5¼ கோடி மக்களும் ஒருமித்த எண்ணத்தில் இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிற வகையில் இந்த அவை ஏகமனதாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தருவதன் மூலம் நல்லதொரு சூழ்நிலை ஏற்பட முடியும்.

இங்கே பொது வேலை நிறுத்தம் மூலம் நாம் உணர்த்த வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துத் தெரிவித்தது கூட யாரையும் எதிர்க்க அல்ல. மத்திய அரசாங்கத்தை எதிர்க்க அல்ல. பிரதமரை எதிர்க்க அல்ல. உச்ச நீதிமன்றத்தை எதிர்க்க அல்ல. ஆனால் இந்த ஒதுக்கீடு 69 சதவீதம் ஆக இருக்கவேண்டுமென்ற கருத்துக்கு ஆதரவாகத் தமிழக சட்டமன்றத்திலே இருப்பவர்கள் மட்டுமல்ல.

தமிழகமே இருக்கிறது என்பதை உணர்த்திக் காட்டுவதற்கு, அவர்கள் தெளிவு அடைவதற்கு ஓரளவிற்குப் புரிந்துகொள்வதற்கு பயன்படுமே என்பதால்தான் பொது வேலை நிறுத்தம் என்று சொல்லியிருக்கிறோமே தவிர, பொது வேலை நிறுத்தம் யாரையும் எதிர்த்து அல்ல, மாறுபட்டும்,

1993 நவம்பர் 9] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

முரண்பட்டும் அல்ல. நம்முடைய எண்ணத்தை ஏகோபித்துத் தெரிவிப்போமானால், எப்படி, 1951ஆம் ஆண்டு, பண்டித ஜவஹர்லால் நேரு, இங்கே ஏற்பட்ட கொந்தளிப்பு உணர்ச்சியை உணர்ந்து, பெருந்தலைவர் காமராஜ் அவர்களும் எடுத்துத் தெரிவித்ததன் காரணமாக, அதற்கு இசைந்து அந்த அடிப்படையிலே அந்தத் திருத்தத்தை எளிதாகக் கொண்டுவந்து, பிரச்சினையை முடித்துவிட்டாரோ, அப்படி எளிதாக முடிக்கவேண்டும் என்ற எண்ணத்தினுடைய அடிப்படையிலேதான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தையொட்டி, நல்ல பல கருத்துக்களை எடுத்துத் தெரிவித்து இந்த மாநில மக்களுடைய உணர்வை வெளிப்படுத்தியமைக்காக இந்த மன்றத்திலே இருக்கிற அத்தனை பேர்களுக்கும் அரசின் சார்பாக நாங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். இது ஏகமனதாக நிறைவேற்றப்படுவது மட்டுமல்லாமல், அடுத்தடுத்து ஏகமனதாக நிறைவேற்றி, நடைமுறைப் படுத்தவேண்டிய பணிகள் ஒவ்வொன்றுக்கும் எல்லோருடைய ஒத்துழைப்பும், ஆதரவும் மிகச் சிறப்பான முறையில், மிக நல்ல வகையில் என்றென்றும் இருக்கிறது என்ற நம்பிக்கையோடு, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும். ஏகமனதாக நிறைவேற்றித் தரவேண்டும், அதன் மூலம் தமிழகத்தின் நல்லதொரு எழுச்சியும், மக்களுக்கு நம்பிக்கையும், நன்மதிப்பும் ஏற்பட வேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 2.20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்தை நாங்கள் முழு மனதோடு ஆதரிக்கிறோம். இந்த எஸ். டி. அதாவது மலைவாழ் மக்களுக்கு என்று ஒரு சதவீதம் ஒதுக்குகிறோம். இந்த ஒரு சதவீதத்தைக்கூட அவர்கள் அடைய முடியாத அளவிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே, கனியான் என்ற ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள் பி. சி.-யிலே இருந்தார்கள். அவர்கள் இப்போது, காணிக்கையான் என்று சர்ட்டிபிகேட்டை வாங்கி, அவர்கள் மலைவாழ் மக்களின் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி, மலைவாழ் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகையை இவர்கள் அடைந்து கொண்டு வருகிறார்கள். இதுபற்றி பல கடிதங்கள் வந்திருக்கின்றன. அதேபோன்று சேலம், தர்மபுரி மாவட்டத்திலே இருக்கிறது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே விளக்கங்கள் எல்லாம் வேண்டாம். சீக்கிரமாக முடியுங்கள்.

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

[*1993 நவம்பர் 9*

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: ஆகையினாலே, இந்த எஸ். டி. என்பது, மலைவாழ் மக்கள்தான். வேறு யாரும் போலிச் சான்றிதழ் வாங்கிக் கொடுத்தால், அதற்குக் கடுமையான நடவடிக்கை எடுத்து, அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகையை மலைவாழ் மக்களுக்கே கிடைப்பதற்கான வழிவகையை செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களே, முன்பு இதுபற்றித் தெளிவாகவே பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, எஸ். டி. என்றும், எஸ். சி. என்றும், பி. சி. என்றும் பட்டியல் போட்டுக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. பட்டியலிலே சில பல விளக்கங்களும் தரப்பட்டிருக்கின்றன. ஆனால், அவர்கள் சொல்வதுமாதிரி, தாங்கள் சலுகைகள் பெறவேண்டும், வசதிகள் பெறவேண்டும், வாய்ப்புகள் பெறவேண்டும் என்பதற்காக, உண்மையை மறைத்து, சர்ட்டிபிகேட் போன்றவைகளை எப்படியோ வாங்குகிறார்கள். எப்படி வாங்குகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் எப்படியோ வாங்கிவிடுகிறார்கள். எனவே, அப்படிப்பட்ட தன்மைகளைத் தடுத்து நிறுத்துவதற்காகத்தான் தகுந்த விசாரணையோடு ஆராய்ச்சி செய்து தரவேண்டும் என்கிற ஒரு கட்டத்தை தமிழக அரசு கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் தெளிவுபடுத்திக்காட்டினார்கள். அது உண்மைதான். யாருக்காக இதை ஒதுக்குகிறோமோ, அவர்களுக்குப் போய்ச் சேரவேண்டுமே தவிர, மற்றவர்கள் ஏமாற்றி, எப்படியோ அந்த இடங்களை பெற்றுக் கொள்வார்களானால் யாருக்குப் போய்ச் சேரவேண்டும் என்று கருதுகிறோமோ, அவர்கள் புறக்கணிக்கப்பட்டு, யாருக்குச் சேரக்கூடாதோ, அவர்களுக்குப் போய்ச் சேருகின்ற நிலைமை கூடாது என்பதுதான் இந்த அரசினுடைய எண்ணம். இதைச் சுட்டிக்காட்டும் போதெல்லாம், பொறியியல் கல்லூரியிலே சேர்ப்பவர்களைப் பொறுத்தும் வருகிறது, மருத்துவக் கல்லூரியிலே சேர்ப்பவர்களைப் பொறுத்தும் மற்றவர்கள் எழுதுகிறார்கள். அவர்கள் பேக்வார்ட் கம்யூனிட்டியே அல்ல, எஸ். சி.-யே அல்ல என்று வருவதை விசாரித்து, சில பேர்களை நாம் டிஸ்மிஸ் கூட செய்திருக்கிறோம். கல்லூரியிலேயிருந்து கூட வெளியேற்றியிருக்கிறோம். ஹாஸ்டலிலிருந்துகூட வெளியேற்றியிருக்கிறோம். இது சுட்டிக்காட்டப் படுமானால், நாம் செய்யலாம். சட்டம் தெளிவாகத்தான் இருக்கிறது. அதைக் கடைப்பிடிப்பதிலே சிலபல முரண்பாடுகள், முறைகேடுகள் ஏற்பட்டு விடுகின்றன. அதைத் தடுக்கவேண்டும் என்பதை அரசு உணர்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

1993 நவம்பர் 9]

*** மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தில், நீண்ட நெடுங்காலமாக ஆதிதிராவிட மக்கள், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் அனுபவித்து வரும் இட ஒதுக்கீட்டு உரிமையைப் பாதுகாக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட இத்தீர்மானத்தினை அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவு தெரிவித்து கருத்துக்களைக் கூறியுள்ளார்கள்.

சில மாண்புமிகு உறுப்பினர்கள் அரசியல் பிரச்சினைகள் பற்றி குறிப்பிட்டு, தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தாலும், அரசியல் பிரச்சினைகள் பற்றி வேறு நேரங்களில் பேசிக் கொள்ளலாம் என்ற எனது வேண்டுகோளை ஏற்று, இத்தீர்மானத்தின்மீது தங்கள் மேலான ஆதரவுக் கருத்துக்களையே கூறிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இத்தீர்மானத்தை இம்மாமன்றம் ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 2.25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைய அலுவல்கள் இத்தோடு முடிவடைகின்றன.

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையை ஒத்திவைப்பதற்கான பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழக்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: